

# கிராம ராஜ்யம்

விய ஷு ★ மாசி மீ


| | | | |
|---|---|---|---|
| மீண்டும் சொல்கிறேன் | ... | மகாத்மா காந்தி | 1 |
| கிராமங்களும் குழந்தைகளும் | ... | 'குமுதினி' | 5 |
| நமது குறிக்கோள் | ... | ஜயப்ரகாஷ் நாராயண் | 8 |
| அமெரிக்க கிராம வாழ்க்கை | ... | கேய்த்தான் | 10 |
| ஒரே வழி | ... | நாமக்கல் கவிஞர் | 12 |
| நான் கண்ட காந்தி | ... | லூயி பிஷர் | 13 |
| தமிழ் நாட்டில் ஆலயப் பிரவேசம் | ... | ச. ஜெகந்நாதன் | 16 |
| தேசத்தின் ஜீவநாடி எது? | ... | ரா. குருசாமி | 18 |
| ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் | ... | அ. இராமசாமி பி. ஏ. | 23 |
| காதி வித்தியாலயம் | ... | நா. ராமசாமி | 26 |
| புது வழி | ... | மீ. விநாயகம் | 28 |
| நூற்பவர்களுக்கு | ... | காந்தி ஜயந்திக் கமிட்டி | 31 |
| ஆதாரக் கல்வி | ... | ரா. வே. ருத்திரப்பாசாமி | 34 |
| பீன வெல்லம் | ... | கஜானன் நாயக் | 37 |
| ஊர் முரசு | ... | ரா. கு. | 38 |

பத்திரிகை சாரம். 42 ஊர்த்திருப்பணி. 45

குறிப்புகள். 47


339
F04

அணா

# இந்த இதழில்

1. காந்தியடிகள் நிர்மாணத் திட்டத்தின் மூன்று புதிய அம்சங்களை வலியுறுத்துகிறார்.

2. 'குமுதினி'யவர்கள் குழந்தைகளின் நல்வாழ்விற்கு கிராமங்கள் செய்யும் தொண்டு எவ்வளவு மகத்தானது என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

3. 'உத்தமன் காந்தியின் வழியொன்றே உலகம் வாழும் வழியாகும்' என்பதை நாமக்கல் கவிஞர் பாட்டால் மனதில் பதிய வைக்கிறார்.

4. ஸ்ரீ ஜயப்ரகாஷ் நாராயண் 'கிராம ராஜ்யம்' ஸ்தாபிப்பதற்குரிய வழிகளை வகுத்துக் காட்டுகிறார்.

5. அமெரிக்கக் கிராம வாசிகளின் நல்லியல்புகளை திரு. கெய்த்தான் நமக்கு எடுத்துச் சொல்கிறார்.

6. லூயி பிஷர் காந்தியடிகளின் உள்ளத்தைக் கண்டு உவகை எய்து கிறார்.

7. நிர்மாண ஊழியர் ச. ஜெகந்நாதன் ஆலயப் பிரவேசத்திற்கு அடுத் துள்ள வேலைகளை ஞாபகப் படுத்துகிறார்.

8. கிராம அபிவிருத்தியே பிரதானமென்கிறார் ரா. குருசாமி.

9. ஐரோப்பிய நாடுகளை ஐக்கிய நாடுகளாக இணைப்பதில் சர்ச்சிலுக்கு ஏன் இவ்வளவு சிரத்தை என்பதை அ. இராமசாமி தெளிவு படுத்துகிறார்.

10. சர்க்கா சங்கக் காரியதரிசி சர்க்கார் கதர்த் திட்டத்தின் வேலை விவரங்களை விளக்குகிறார்.

11. மீ. விநாயகம் கதரபிவிருத்திக்கான ஒரு புதுவழி கூறுகிறார்.

12. கிராமக் குழந்தைகள் அறிவும் ஆற்றலும் பெற ஆதாரக் கல்வி முறை ஒன்றே வழி என்கிறார் ஆசிரியர் ருத்திரப்பாசாமி.

13. மில் முதலாளிகள் பஞ்சகாலத்தில் அடித்த கொள்ளையைப் புள்ளி விவரங்களுடன் ஊர் முரசு 'டாம்டாம்' அடிக்கிறது.

# கிராம ராஜ்யம்

மலர் 1 இதழ் 5

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்— பாரதியார்.

விய-ஹு மாசி மீ

## மீண்டும் சொல்கிறேன்

(மகாத்மா காந்தி)

சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடித்து, பூரண சுயராஜ்யம் அடைவதற்கு வழிகாட்டுவதே நிர்மாணத் திட்டம் என்பதை ஊழியர்கள் உணரவேண்டும். நிர்மாணத் திட்டத்தின் வேலைகளனைத்தையும் செய்து முடித்தாலே பரிபூரண சுதந்திரம் அடைந்ததாகும். இத்திட்டம் தேசத்தை உருவாக்கி, அஸ்திவாரத்திலிருந்து உயர்ந்து ஓங்கச் செய்வதாகும். நாட்டின் நாற்பது கோடி மக்களும் இத்திட்ட வேலைகள் அனைத்திலும் ஈடுபட்டு உழைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அது தான் பரிபூரண சுதந்திரம் என்பதை யாராவது மறுக்க முடியுமா? இதைக் கேட்டு எள்ளி நகையாடுபவர்கள் நாற்பது கோடி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இத்திட்டத்தில் ஒத்துழைக்க மாட்டார்கள் என்றுதான் நினைக்கிறார்கள். அவ்வாறு ஏளனம் செய்வதற்கும் நியாயமிருப்பது உண்மைதான். அதைச் சாதிக்க உண்மையில் உழைத்துப் பார்ப்போமே என்றுதான் நான் சொல்வது. சரியான உறுதியும் தளராத நம்பிக்கையும் கொண்ட உண்மை ஊழியர் படை ஒன்றிருந்தால், இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்க முடியும் என்றே நம்புகின்றேன். இத்திட்டத்திற்குப் பதிலாக நாம் கடைப்பிடிக்கக் கூடிய, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட, திட்டம் வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பலாத்காரப் புரட்சிக்கு ராணுவப் பயிற்சி தேவையாக இருப்பது போலவே, சட்டமறுப்புக்கும் சாத்வீக எதிர்ப்பிற்கும் ஆக்க வேலையிலும் நிர்மாணத் திட்டத்திலும் பயிற்சி அவசியம். நிர்ப்பந்தம் ஏற்படும்போது மட்டுமே ஆயுதங்களை உபயோகிக்க வேண்டியிருப்பது போலவே சட்டமறுப்பும் நெருக்கடியான காலங்களில் அவசியமாகிறது. ஆகவே, ஊழியர்கள் எப்பொழுதும் சட்டமறுப்புக்காகக் காத்துநிற்க மாட்டார்கள். ஆனால் நிர்மாணத் திட்டம் தோல்வியுறாமல் காக்க அவர்கள் எப்போதும் ஆயத்தமாயிருப்பார்கள்.

நிர்மாணத் திட்டத்தைப்பற்றி நான் முன்னமேயே எழுதியுள்ள துண்டுப் பிரசுரத்திலிருந்து திட்டத்தின் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். டாக்டர் ராஜேந்திர பிரஸாத் எழுதியுள்ள புத்தகமும் நிர்மாணத் திட்டத்திற்கு வியாக்கியானம் செய்வதேயாகும். இவற்றில் ஒரு சில உதாரணங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தாம் அனைத்தும் என்று எண்ணிவிடக் கூடாது. உள்ளூர் நிலைமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பல புதிய முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இடமிருக்கக்கூடும். இந்தியா முழுவதற்கும் பொதுப்படையாய் வகுக்கும் திட்டத்தில் இவ்விவரங்கள் அனைத்தையும் குறிப்பிடுவது சாத்தியமல்ல. **அந்தந்த ஊரிலுள்ள தொண்டர்கள், உள்ளூர் நிலைமையை உணர்ந்து, அதற்கேற்ற திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்.**

இத்திட்டத்தைப் பிரசுரித்த பின்னர், எனக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து, திட்டத்தின் ஒரு சில அம்சங்களை முக்கியமாய் அறிவுறுத்துவதன் அவசியத்தை உணர்ந்தேன். அவற்றை இங்கு வலியுறுத்துகின்றேன்.

### உழவர்களுக்கு ஊழியம்

நிலமில்லாத உழவுத் தொழிலாளியாயினும் சரி, தன் நிலத்தில் தானே வேலைசெய்யும் குடியானவனாயினும் சரி, விவசாயிப் பிரச்னை மிகப் பிரதானமானது. **விவசாயமே பூமிக்கு உயிர். உழவரே உலகத்தை உய்விப்போர். நிலம் அவர்களுக்குச் சொந்தமாயிருப்பதே நியாயம்.** அவர்கள் உழைக்க, வேலைசெய்யாத ஜமீன்தாரோ நிலச்சுவான்தாரோ நிலத்தில் சொந்தம் பாராட்டுவது நேர்மையல்ல. ஆனால், அஹிம்சா போராட்ட விதியின்படி, விவசாயி பலாத்காரத்தை உபயோகித்து தன் நிலச்சுவான்தாரைத் தள்ளிவிட முடியாது. நிலச்சுவான்தாருடைய சுரண்டலுக்கு இடமேற்படாத வண்ணம் உழைப்பதே விவசாயிக்குரிய வழி.

விவசாயிகளுள் நெருங்கிய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருப்பது மிக அவசியம். விவசாயிகளை ஒன்றுபடுத்துவதற்காக விசேஷ கமிட்டிகள் அமைக்க வேண்டும். ஏற்கெனவே கமிட்டியோ, ஸ்தாபனமோ இருக்கும் இடங்களில் அவற்றை இந்நோக்கத்திற்குப் பொருந்தும்படி சீர்திருத்த வேண்டும்.

விவசாயிகள் மொத்தத்தில் படிப்பு வாசனையற்றவர்கள். சிறுவர் சிறுமிகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் கல்வி புகட்ட வேண்டும்.

• நிலவரிச் சட்டங்களை ஆராயவேண்டும். விவசாயி கடன் நிவாரணப் பிரச்னையில் எல்லையற்ற ஆராய்ச்சிக்கும் உழைப்பிற்கும் இடமுள்ளது.

கால் நடைகள் பிரச்னையும் இந்திய விவசாயத்தில் மிக முக்கியமான பிரச்னை; மிகவும் சிக்கலான பிரச்னை; தொண்டர்களைத் திகைப்படையச் செய்யக்கூடும். ஆயினும் தேர்ச்சி பெற்ற தொண்டர்கள் இதில் சிரத்தையெடுத்துக்கொள்வது அவசியம்.

### தொழிலாளர்களுக்குத் தொண்டு.

விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய வேலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது, நாம் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய வேலை. இங்கு, இயந்திரத் தொழிலாளர்கள் பற்றியே குறிப்பிடுகின்றேன். இவர்கள் ஓரிடத்தில் குவிந்துள்ளனர்; ஒரு மத்திய அதிகாரத்தின் கடுமையான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள். ஆகவே, இவர்களுக்கு அவகாசம் குறைவு. மேலும், அரசியல் விவகாரங்களில் தங்களைப் பயன்படுத்திக்கொள்ள இவர்கள் எளிதில் அனுமதிக்கின்றனர்.

தொழிலாளர் பிரச்னைகள் நகரங்களில் எழுகின்றன. ஆகவே, பொதுவாக ஊழியர்களுக்கு தொழிலாளர்களிடையே வேலை செய்வதில் அதிக கவர்ச்சியுண்டாகிறது. விவசாயிகளிடை வேலைசெய்ய வேண்டுமென்ற கவர்ச்சி அவ்வளவாக ஏற்படுவதில்லை.

தொழிலாளரை அவர்களுக்குரிய ஸ்தானத்திற்கு உயர்த்துவது நிர்மாணத் திட்டத்தின் முக்கியமான வேலையாகும். தொழிலாளர்களிடை வேலைசெய்யும் தொண்டரின் கடமை என்ன?

தொழிலாளி அறிவிற் சிறந்து ஆத்மீக உயர்வு எய்தும்படி செய்யவேண்டும். இந்த அருகதை பெற்ற தொழிலாளி தனது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், முதலாளியின் அடிமையாயிருப்பதை ஒழித்து மூலதனத்தின் எஜமானனாகவும், உற்பத்திக் கர்த்தாவாகவும் உயரும் நிலைக்கு வருவான். மூலதனம், தொழிலாளிக்குப் பணிபுரிந்து அவன் உற்பத்தி வேலைக்கு உதவ வேண்டுமே ஒழிய, தொழிலாளியை அடக்கியாளுவது கூடாது. தொழிலாளர் உலகமும் தன் கடமையை உணர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். கடமையைச் செய்வதிலிருந்துதான் உரிமையை அனுபவிக்கும் அருகதை பிறக்கிறது.

இவற்றை ஒரு திட்டமாக வகுக்கலாம்.

(1) தொழிலாளிகளுக்குச் சொந்தமான யூனியன்கள் இருக்கவேண்டும்.

(2) இராக்காலப் பள்ளிக்கூடங்கள் மூலம் ஆண் பெண்களுக்குப் பொதுக் கல்வி புகட்டுவதுடன், தொழிற் கல்வியும் தேர்ச்சியும் அளிக்கவேண்டும்.

(3) தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு வர்தா கல்வித் திட்டப்படி ஆதாரக் கல்வி புகட்டவேண்டும்.

(4) தொழிலாளர் வசிக்கும் ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆஸ்பத்திரி, பிரசவ ஆஸ்பத்திரி, சிசு சம்ரட்சண சாலை ஆகியவை ஏற்படுத்த வேண்டும்.

(5) வேலை நிறுத்தம் செய்யும் காலங்களில், தொழிலாளர்கள் தங்கள் ஜீவனோபாயத்தைத் தாங்களே தேடிக் கொள்ள வேண்டும்.

பலாத்காரம் பிரயோகிக்காமல் வேலை நிறுத்தம் செய்து வெற்றியடையும் அஹிம்சா மார்க்கத்தை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தொழிலாளர் யூனியன்கள் மூலம்தான் இந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முடியும். எனக்குத் தெரிந்தவரை, ஆமதாபாத் யூனியன் மிகச் சிறந்த முறையில் நடக்கிறது. அது என்னுடைய லட்சிய நிலையை அடைந்துவிட்டதென்று நான் சொல்லவில்லை; என் லட்சியத்தைப் பின்பற்றி வேலைசெய்கிறது என்றுதான் சொல்கிறேன். எல்லா யூனியன்களும் இதே மார்க்கத்தில் வேலைசெய்தால் தொழிலாளர் நிலை இன்றிருப்பதைவிட எவ்வளவோ மேலான நிலை எய்தும்.

அறிவிற் சிறந்து, ஆத்மீக உன்னதமும் அடைந்து, ஒற்றுமையில் பிறக்கும் உறுதியும் வலிமையும் பெற்ற தொழிலாளர்கள் முதலாளிகளை விட மேம்பட்டவர்கள் ஆவர்.

### மாணவர்களுக்கு மத்தியில்.

விவசாயிகளுக்கு அடுத்த படியாக, பதினொரு வயதுக்கு மேற்பட்ட மாணவர் சமூகத்தில் நாம் சிரத்தை யெடுத்துக் கொள்ள வேண்டும். நம்மிடம் தகுதியுள்ள தொண்டர்கள் இருந்தால், குழந்தைகள் படிக்கத் தொடங்கியவுடனே அவர்களிடை வேலைசெய்ய வேண்டும் என்றுகூட நான் சொல்லுவேன். பள்ளிப்

பருவத்திலிருந்து அவர்களை நாம் உரு வாக்க வேண்டும். அரசியலில் அவர்களைப் பயன்படுத்திக்கொள்வது என் நோக்க மல்ல.

இப்பொழுது வித்தியாலயங்கள் பெரும்பாலும் சர்க்கார் கட்டுப்பாட்டுக் கும் செல்வாக்குக்கும் உட்பட்டிருக்கின் றன. மாணவர் கல்விமுறையில் இது ஒரு அடிப்படையான குறையாகும். தேசத்தின் அரசியல் நிலைமைபற்றி அவர் களுக்கு யாதொன்றும் தெரிய மார்க்க மில்லை. அவர்கள் தெரிந்துகொள்வதெல் லாம் பத்திரிகைகளைப் படித்தும்,மேடைப் பிரசங்கங்களைக் கேட்டுத்தான். இக்கல்வி முறையின்கீழ் மாணவர்களுக்குக் கிடைக் காததை அவர்களுக்கு ஊட்ட ஊழியர் கள் ஒழுங்காக முயற்சிக்க வேண்டும். இம் முயற்சியை, தற்காலக் கல்வித் திட்டத் துடன் எப்படி இணைத்துக்கொள்வது என்பது சிக்கலான பிரச்னை. அதை நாம் தீர்க்க முயற்சிக்க வேண்டும். மெட்ரிகு லேஷன் வகுப்பு வரை பெற்றோர்களின் ஒத்துழைப்பு இருப்பது அவசியம்.

அரசியல் குழப்பத்தில் மாணவர் உலகத்தை இழுத்துவிடுவது கூடாது என்று நான் பலமுறை வற்புறுத்தியுள் ளேன். அக்கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

பொதுஜன சட்டமறுப்பு இருந்தால் நிலைமை வித்தியாசப்படும். ஆனால் தற் காலத்தைப் பொருத்த வரையாவது அதைப்பற்றிய பேச்சுகளுக்கு இடமில்லை. மாணவர்களுக்கு தேசியக்கல்வி புகட்டு வது மட்டும் மிக அவசியம். தன் தேச மக்களுக்கு தேசாபிமான உணர்ச்சியை ஊட்டுவது சுதந்திர அரசாங்கத்தின் கடமை.

இன்றைய கல்வி முறையோ அன்னி யரால் வழங்கப்படுவது, தேசிய அபிலா ஷைகளுக்கு அது விரோதமானது. ஆகவே, தேசியக் கல்வி ஊட்டும் மகத் தான பொறுப்பை ஏற்கத் தொண்டர்கள் முன்வர வேண்டும். இதுவரை நாம் இத் துறையில் வேலைசெய்ததில்லை. இத் துறையில் உழைப்பது மிகவும் முக்கியமா னது. மாணவர்களை பள்ளிக்கூடங்களி லிருந்தும் கலாசாலைகளிலிருந்தும் இழுத் துவிடக் கூடாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பள்ளிக் கூடக் கல்வியை விரும்பிச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆகவே, அவர்களைப் பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியே இழுக்காமல், அவர்களுக்குக் கிடைக்கும் கல்விக்குத் துணையாக தேசி யக் கல்வியைப் புகட்ட நாம் ஒழுங்காக முயற்சிக்க வேண்டும்.

தேசியக் கல்வியை உருவாக்கி, அன் னியக் கல்வி முறையைவிட அது மேலா னது என்று உலகறிய நிரூபிப்பதன் மூலம்தான் தேசம் விமோசனமடையும்.

## தியாகம் வேண்டும்.

ஆரம்பத்தில் தொண்டர்களின் முயற் சிக்குப் பல தடைகளும் முட்டுக்கட்டை களும் ஏற்படக்கூடும். இத்தகைய திட் டங்களை வேலைசெய்யத் தொடங்கும் தொண்டர்கள் தியாகம் என்னும் அக்கி னியில் சுத்தியடைய வேண்டியதாயிருக் கிறது. போராட்டம், தியாகம் இன்றி சுயராஜ்யம் பெற முடியாது. **பலாத்காரப் போராட்டத்தில் அழிக்கப்படுவது சத்தியம். அஹிம்சா போராட்டத்திலோ வென்று ஆள்வது சத்தியம்.** இந்த அடிப்படையான உண் மைகளை உணர்ந்தவர்களுக்கு நிர்மாணத் திட்டத்தில் அதிக சிரத்தை பிறந்து விடும். அரசியல், மேடைப் பிரசங்கம், பிரசாரம் என்றெல்லாம் சொல்கிறார் களே, அவற்றில் இருக்கும் அளவிற்கு இதிலும் கவர்ச்சி ஏற்பட்டுவிடும்.

—பம்பாயில் கூடிய காங்கிரஸ் வாதிகள் மகாநாட்டிற்கு அனுப்பிய செய்தியிலிருந்து.

# கிராமங்களும் குழந்தைகளும்

"குமுதினி"

நியாயமாகப் பார்த்தால் "கிராம ராஜ்ய"ப் பத்திரிகையில் கட்டுரை எழுதுவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. நான் கிராமத் தொண்டு செய்பவள் அல்ல. அதைச் செய்கிறவர்களுக்கு வழிகாட்டும் தனித்திறமை பெற்றவளும் அல்ல. இருந்தும் நமது கிராமங்களை நினைக்கும்போது என்னுடைய மனதில் உண்டாகும் ஆசையும், பழைய ஞாபகங்களும், கிராமங்களிடை—முக்கியமாக எங்களுடைய பூர்வீகக் கிராமங்களிடை—எனக்கு இருக்கும் நன்றியும் என்னுடைய உடலில் ஒரு அம்சமாக இருக்கின்றன. அவைகளை என்னைவிட்டுப் பிரிக்க இயலாது. இந்த இரத்த சம்பந்தத்தினால், நானும் எனது வாழ்நாளில் சில காலத்தை, மிகச் சந்தோஷமான சில காலத்தைக் கிராமங்களில் கழித்து வளர்ந்திருக்கிறேன் என்பதனால், வீட்டில் வளர்ந்த பிள்ளை சம்பாதிப்பதற்கென்று வெளியே போய்விட்டாலும் பிற்பாடு கலியாண சமயங்களில் உறவு என்று சொல்லிக்கொண்டு உண்ண வருவதற்கு உரிமை பெற்று இருப்பதுபோல, எனக்கும் கிராமங்களில் உரிமை இருப்பதாக நானும் எண்ணிக் கொள்கிறேன்.

கிராமத் தொண்டு என்று பேசுவது இக்காலத்தில் வழக்கமாக இருக்கிறது. இவ்விதம் பேசுகிறவர்கள் கிராமத்திற்குத் தாம் செய்யக்கூடிய தொண்டைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், கிராமம் நமக்குச் செய்யும் தொண்டை எவரும் கணக்கிடுவதில்லை.

நகரத்தில் வருஷ முழுவதும் வாழும் குழந்தைகளைப் பார்க்கும் சமயம் என்னுடைய மனதில் அவர்கள் மீது இரக்கமே உண்டாகிறது. இருட்டு அறைகளில் படித்து, தெருப் புழுதியில் விளையாடி, மிட்டாய்க்காரனின் சாயச் சர்க்கரையைத் தின்று, செயற்கை உப்பும் வாசனையும் கலந்த சோடாத் தண்ணீரைக் குடிக்கும் அவர்களுக்குச் சமூகம் எவ்வளவு தீங்கிழைக்கிறது! கிராமத்தின் திறந்த காற்றில் உலவி, விஸ்தார ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கி குளத்திலும் ஆற்றிலும் குதித்துத் துள்ளி விளையாடி ஸ்நானம் செய்து, வீட்டுக் கொல்லையில் பறித்த சோளத்தை உடனேயே பாட்டியிடம் கொடுத்துச் சுட்டுக்கொடுக்கச் சொல்லி உண்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்காத குழந்தைகள் அவர்கள். நகரத்தில் ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் தகப்பனாலும் அளிக்க இயலாத ஒரு உயர்ந்த சூழ்நிலையைக் கிராமம் தனது மக்களுக்குத் தருகிறது.

என்னுடைய சிறிய வயதில் உத்தியோகஸ்தரான என் தகப்பனார் கோடை விடுமுறையைக் கும்பகோணத்தில் தன்னுடைய தகப்பனார் வீட்டில் கழிப்பார். என்னுடைய தாயாரோ, அச்சமயம் கிராமத்திலிருக்கும் தனது தாயார் வீட்டிற்குச் செல்வாள். குழந்தைகளாகிய எங்களில் சிலர் இங்கே தகப்பனருடனும், சிலர் அங்கே தாயாருடனும் இருப்போம். என்னுடைய தாய்வழிப் பாட்டி ஒரு கிராமமல்ல, கிராமம் கிராமமாகச் சென்று வசிப்பாள். ரயில் பாதையில்லாத கிராமங்கள் அவை. மாட்டு வண்டியில் நெடித்த பிரயாணமாகச் செல்லவேண்டும். மேலும், அவளுடைய குடும்பம் மிகப் பெரியது. இதெல்லாவற்றையும் உத்தேசித்து எனது தகப்பன்வழிப் பாட்டிக்கு எங்களை அங்கே அனுப்ப இஷ்டமே இராது. குழந்தைகளின் பராமரிப்பு அங்கே போதாது என்பது இவளுடைய எண்ணம். நான் மாத்திரம் ஒவ்வொரு வருஷமும் எவ்விதமாகிலும் அழுது, பிடிவாதம் செய்து, கிராமத்திற்குத் தப்பி ஓடிவிடுவேன்.

கும்பகோணத்தில் தெருக்களின் செம்மண் புழுதியும், கொசுக்களும், வீட்டிற்குள் அடைபட்டு இருப்பதும் எனக்கு நரகவாசமாகத் தோன்றும். மேலும் பாட்டி, "வாசலில் போகாதே கழுத்துச் சங்கிலியை யாராவது அறுத்துக்கொண்டு போய்விடுவான்" என்பாள். குழந்தைகளின் கழுத்தில் தங்கச் சங்கிலியை மாட்டி அவர்களை இம்சித்த காலம் அது 'புழக்கடைப்புறம் போகாதே, பூச்சி பொட்டு இருக்கும்' என்பாள். மாலை வரை பொறுத்திருந்து வெய்யில் தணிந்ததும் மேல் மாடியில் விளையாடலாம் என்று நாங்கள் சென்றால் பாட்டிக்குக் கோபம் வந்து விடும். துடப்பத்தையே எடுத்துக்கொண்டு வந்து எங்களை வெருட்டிக் கீழே அனுப்புவாள். 'நன்றாக இருக்கு! வெயில் காய்ந்த இடத்தில் விளையாடினால் சூடுபட்டு உடல முழுதும் சிரங்கு வராதா? பொம்மனாட்டிக், குழந்தை இப்படி ஓடலாமா? கீழே விழுந்து கைகால ஒடிந்தால் நாளைக்கு யார் கல்யாணம் செய்து கொள்வார்கள்?" என்றெல்லாம் திட்டுவாள். ஆனால் தினம் காலை ஆறு மணிக்கு எங்களுக்குப் பால் காய்ச்சிக் கொடுப்பாள். வேளா வேளை கணக்காகச் சாப்பாடு போடுவாள். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை எண்ணெய் தேய்ப்பாள்.

கிராமத்திலோ, எட்டு மணிக்கு முன்பு மாடு கறக்கமாட்டார்கள். அவ்விதம் கறந்து வரும் பாலை அம்மாமி அவசர அவசரமாக ஓலையைப் போட்டுக் காய்ச்சி எங்களுக்குக் கொடுக்க முயலுவாள். உத்தியோகஸ்தர் மாப்பிள்ளையின் குழந்தைகளாகிய நாங்கள் காலையில் பால் சாப்பிட்டு வழக்கம் என்றும், எங்களைப் பட்டினிபோடக் கூடாது என்பதும் அவள் எண்ணம். எனக்கோ, அம்மாமி அவ்விதம் சிரமப்படுவது பிடிக்காது புகை வாசனையாக இருக்கும் அந்தப் பாலும் பிடிக்காது. அதைச் சாப்பிடாமல அம்மாமியின் கண்களுக்கு அகப்படாமல் ஓடிவிடுவேன். ஆனால இவ்விதம் பால் சாப்பிடாத குறைவு எனக்குத் தெரியவே தெரியாது. தோப்புகளும் கொல்லைகளும் வாய்க்காலும் பெற்றிருக்கும் கிராமத்தில் சாப்பாட்டுக்குக் குறைவு ஏது? கொறுக்காய்ப்புளியும் கொய்யாப் பிஞ்சும் மிக மிக உயர்ந்தவையாகக் கருதுவேன். காவேரி ஸ்நானமே இரண்டு மணி நேரம் பிடிக்கும். பசித்துப் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிடும்போது, "இந்தா, பிடி" என்று பாட்டி தனது கைநிறைய எடுத்துப் பரிமாறுவாள். பாட்டியின் ஊறுகாய் அமிர்தம்போல் இருக்கும். கும்பகோணத்தில் உண்பதைப்போல் நான்கு பங்கு ஆகாரம், இங்கே சாப்பிட்டுவிடுவேன்.

பாட்டிக்கு வேலை அதிகம் ஆகையால், வெந்நீர் வைத்து எங்களுக்கு எண்ணெய் தேய்க்க அவகாசமிராது. மாலை நாலு மணிக்கு வாய்க்காலுக்கு அழைத்துச் சென்று, அங்கே எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்வாள். எனக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்வதென்றால சாதாரணமாக துக்கம நெஞ்சை அடைத்துக்கொள்ளும். ஆனால், இவ்விதம் அந்த மாலை மந்த வெய்யிலில், திறந்த வெளியில் மூழ்கி மூழ்கி ஸ்நானம செய்வது பிரம்மானந்தத்தை உண்டாக்கும். மூன்றடி சதுர அறையில் குழாய்த் தண்ணீரில குளிக்கும் குழந்தைகளுக்கு இந்த ஆனந்தம் எவ்விதம் ஏற்படும்?

புறாவையும் கிளியையும் கூட்டில் அடைத்து வைத்திருப்பது பாவம் என்கிறார்கள். தமது வயிற்றில் பிறந்த குழந்தைகளை, வளரும் குழந்தைகளை, சிறிய வீட்டிற்குள் அடைத்து வைத்திருப்பதைத் தவறாக எவரும் கருதுவதில்லை. சூரியனையும் சந்திரனையும், எண்ணிறந்த நட்சத்திரங்களை நீல ஆகாயத்தையும், மேகங்களையும் அவர்களுக்குக் காண்பிக்காமல் வைத்திருப்பதைத் தவறாக நினைப்பது இல்லை கதைகளைச் சொல்லி குழந்தைகளின் அறிவை விருத்தியாக்க வேண்டும் என்று கதைப் புத்தகங்களை அச்சடிக்க முயலுகிறார்கள். கிராமத்துக் குழந்தைகளுக்குப் பூதம் என்றும் தேவதை யென்றும் கதைகள் சொல்லவேண்டிய அவசியமே யில்லை. அவர்களுக்கு ஒவ்வொரு தோப்பிலும் வனதேவதை இருக்கிறாள், அவர்கள் வளர்க்கும் ஒவ்வொரு செடியும் உயிருள்ள அவர்களைப் போன்ற ஒரு ஜீவனே. இயற்

கைத் தாயுடன் அவர்கள் ஒன்றாக ஒத்து வளர்கிறார்கள். நகரத்துக் குழந்தைகளோ என்றால், பெற்ற தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு மாற்றாந் தாயிடம் வளரும் அநாதைக் குழந்தைகளே.

"சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழிற்
கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறைக் கூர்ந்தது மாருதம் இதுவோ!"

என்ற அந்த வைகறை மாருதத்தை அனுபவிக்காதவர்கள் அவர்கள். இயற்கைத் தேவியின் தோற்றங்கள் பருவகாலந்தோறும் மாறி மாறி வருவதைக் கண்டு களிக்காதவர்கள். அவர்கள் எத்துணை சினிமாக்கள் பார்த்துத்தான் என்ன? இந்த இயற்கையின் மேன்மைகளை கணந்தோறும் கண்டு, வெய்யிலில் வேர்த்து, மழையில் நனைந்து, பனியின் குளிரை அனுபவித்து, உள்ளம் வளர்ச்சி பெறும் ஒரு விசாலத் தன்மை அவர்களிடம் ஏற்படுமா?

அழகைப் பார்க்காத குழந்தைகளுக்கு ரசிகத்தன்மையை நாம் எவ்விதம் புத்தகங்களின் மூலம் போதிக்க இயலும்? நல்ல சுகாதார சுத்தத்தைப் பார்த்தே இராத குழந்தைகளுக்கு எவ்விதம் நாம் சுகாதார சுத்தத்தைப் போதிக்கக்கூடும்? பிரதிதினமும் தெருவில் அசுத்தம் செய்பவரிடை வளர்ந்து, தகப்பனார் தெருவில் அசுத்தம் செய்வதைக் கண்டு, தானும் அவ்விதம் செய்யத் தாயாரால் தூண்டப்படும் குழந்தைகளுக்கு எவ்விதம் சுத்தம் தெரியும்? வழக்கம் போல் செய்வதற்கல்லவோ அவர்களுக்குப் புத்தி தோன்றும்?

இதே குழந்தைகளை வருஷத்திற்கு ஒரு முறை ஒரு மாதம் கிராமத்திற் கழைத்துச் சென்று, அழகிய தோப்பில் சுத்தமான குடிசைகளில் சுதந்திரமாக வாழ்வதற்குச் சொல்லிக்கொடுத்து வசிக்கச்செய்தால் அவர்களுடைய வேலைகளை அவர்களே செய்யும்படி திறமையுடன் பழகிக் கொடுத்தால், ஓர் உயர்ந்த வாழ்க்கை நிலையை அவர்கள் அனுபவிப்பார்கள். வேறு எவ்வித புரட்சிகரமான மாறுதலை நாம் செய்யாவிடினும், குழந்தைகளின் அறிவை இவ்வண்ணம் பழக்கினால் நமது நாட்டில் அதன் மூலம் நல்ல மாறுதல்கள் ஏற்படும்.

★ ★ ★

## குழந்தைப் பாட்டு.

அருணனுதித்தனன் அம்புஜம் விண்டது
அளிகளும் மொய்த்தன பாராய்
அம்மா நீ எழுந்தோடி வாராய்.

பசிய புல் நுனியில் பதித்தவெண் முத்தமோ
பனித்துளி தானோ நீ பாராய்
பைங்கிளி எழுந்தோடி வாராய்.

பொழுதுவிடிந்தது பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலிவதைப் பாராய்
பொன்னே நீ எழுந்தோடி வாராய்.

காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்
கண்ணே நீ எழுந்தோடி வாராய்.

தே. வி. 'மலரும் மாலையும்"

# கிராம ராஜ்யமே நமது குறிக்கோள்

## (ஜயப்ரகாஷ் நாராயண்)

கூடிய விரைவில் 'கிராம ராஜ்யத்தை' ஸ்தாபிப்பதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். கிராமத்தினர் தாங்களாகவே அரசு நடத்துவதற்குத்தான் 'கிராம ராஜ்யம்' என்று பெயர். கிராமக் குடியரசு என்றும் அதைச் சொல்லலாம். நான் சொல்வது வெறும் கிராமப் பஞ்சாயத்தல்ல. கிராம வாசிகள் தங்களுடைய சொந்த முயற்சியினாலேயே 'கிராம ராஜ்யத்தை' ஸ்தாபிக்கவேண்டும். சர்க்காரால் சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. நான் நினைத்திருப்பதுபோல் கிராம ராஜ்யங்கள் ஏற்பட்டுவிட்டால் அந்நிய ஆட்சிக்கு இடமே இருக்கமுடியாது.

போராட்ட காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி வாய்ந்த மத்தியஸ்தலங்களாக இக்கிராமங்கள் விளங்கும்.

கிராமத்தில் 'கிராம ராஜ்யத்தை' நிறுவுவதற்கு முன் நாம் நிர்மாண வேலைகளை ஒழுங்காகச் செய்தாக வேண்டும். கீழே குறிப்பிடப்போகும் வேலைகளையும் நாம் செய்யவேண்டும்.

1. காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்ப்பது. கிராமத்தில் வயதுவந்த எல்லோரையும் அங்கத்தினராக்க முயற்சிக்க வேண்டும். அங்கத்தினர்கள் கூட்டங்களை அடிக்கடி கூட்டுவது. கொடியேற்று விழா நடத்துதல்.

2. பத்திரிகை படிப்பது, முதியோருக்கு கல்வி கற்றுக்கொடுப்பது, நாடகங்கள் நடிப்பது, நாட்டுப் பாட்டுகள் பாடுவது, அரசியல் விஷயங்களை எடுத்துச் சொல்வது, வாசகசாலை நடத்துவது, விவசாய சம்பந்தமான ஆலோசனைகள் சொல்வது போன்ற பல காரியங்களைச் செய்யலாம்.

3. தொண்டர் படை நிறுவுதல்.

4. சுகாதாரப் பிரச்னை, ரோடு போடுதல், குளங்கள், ஏரிகள் இவைகளுக்குக் கரைபோடுதல் போன்ற பொதுவான காரியங்களை அனுபவ சாத்தியமான வழிகளில் யாவரும் ஒன்று சேர்ந்து வேலை செய்வதை ஆதரித்து உற்சாகப்படுத்த வேண்டும்.

5. தீண்டாமை அகற்றல்.

6. வகுப்பு ஒற்றுமைக்கு உழைத்தல்.

7. மதுவிலக்கு.

8. கிராம நிலைமையைப்பற்றி புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

9. மக்களின் குறைகளைப் போக்க பாடுபடுதல்.

10 தானிய பாங்கிகளை அமைத்தல்.

11. சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களில் சிலம்புக்கூடம் அமைத்தல்.

12. கூட்டுறவு வியாபார முறையை ஆதரித்தல்.

13. மாணவிகள், ஸ்திரீகள் இவர்களுக்காக வேலை செய்வது.

எந்தக் கிராமத்தில் இவ்விதமான வேலையை நேர்மையாகவும், பற்றுடனும் ஊழியர்கள் செய்து பொதுஜனங்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறுகின்றனரோ அங்கு கிராம ராஜ்யத்தை ஒரு சில தினங்களில் நிறுவுவது சாத்தியமா

கும். அந்தக் கிராமத்தில் கூட்டுறவு விவசாய முறையையும், கூட்டுறவு முறையில் தொழில் செய்வதையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது அப்பொழுது சாத்தியமாகும்.

மிகவும் திறமை வாய்ந்த பயிற்சி ஊழியர்கள்தான் இவ்விதமான வேலைக்கு லாயக்கானவர்கள். நமக்கு இவ்வேலையைச் செய்வதற்கு ஏராளமான ஊழியர்கள் வேண்டும்.

இவ் வேலையைச் செய்வதன்மூலம் இந்தியரின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்க்கை புரட்சிகரமாகவும் நிர்மாண வழியிலும் மாறுதலடையும்.

வேலைத் திட்டத்தைப்பற்றி இதைவிட விரிவாகச் சொல்ல முடியும். ஆனல் ஓர் சில உதாரணங்களே போதும். ஆங்காங்கு, பிரதேசங்களில் வேலை செய்யும் போது ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு, நமது வேலைகளை அதிகரிக்கவோ, குறைக்கவோ செய்து கொள்ளலாம். இவைகளைச் செய்யுங்கள் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இத் திட்டத்தைச் செய்வதன் மூலம் நிச்சயமாகப் பயனடையலாம்.

இதை முடிக்குமுன் நீங்கள் நமது புரட்சிகரமான நோக்கத்தை மறக்கக் கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரே வேலையை பலவழிகளிலும் பல காரணங்களுக்காகவும் செய்ய முடியுமென்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். புரட்சிக்குச் சாதகமாக மக்களைத் தயார் செய்வதே நாம் செய்யும் வேலைகளின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

('ஜனதா'விலிருந்து திரட்டியது.)

---

## இந்திய தேசீய காங்கிரஸ்.

*மற்றவற்றைப்போல் பெயரளவில் புரட்சிகரமான ஸ்தாபனமா யில்லாது, செயலளவில் புரட்சிகரமான ஸ்தாபனமாய் இருப்பதால்தான் மக்கள் காங்கிரஸிடம் மதிப்பு வைத்திருக்கின்றனர். அதை மிதவாத ஸ்தாபனமென்று 1942 க்கு முன் தீவிர வாதிகளும், பொது உடைமை வாதிகளும், முற்போக்கு வாதிகளும் குறைகூறினர். 1942 ல் அதுவே மிகப் புரட்சிகரமான ஸ்தாபனம் என்றும், காந்திஜியே தீவிரப் புரட்சியாளர் என்றும் போற்றினர், தீவிர வாதிகள்; இனி என்ன சொல்லுவார்களோ! காங்கிரஸை ஐந்தாம்படை என்று தூற்றி வந்த பொதுவுடைமை வாதிகள் இன்று தீவிரப் புரட்சியாளர்களாகிவிட்டார்கள்! உண்மையில் யார் புரட்சியாளர்? எந்த ஸ்தாபனம் புரட்சிகரமானது? காங்கிரஸைக் குறைகூறுவோரின் நிலை எப்படி யெப்படி இருந்து வந்திருக்கிறது என்பன போன்ற கேள்விகளுக்கு ஆசார்ய கிருபலானியவர்கள் அழகாகவும் ஆராய்ந்தும் 'இந்திய தேசியக் காங்கிரஸ்' என்னும் இப்புத்தகத்தில் பதிலளித்துள்ளார். சிறந்த முறையில், எளிய நடையில் தமிழாக்கியுள்ளார் திரு. கா' திரவியம் ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரிடமும் இருக்கவேண்டிய புத்தகம் இது. இதன் விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம் :— நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி.*

# அமெரிக்கக் கிராம வாழ்க்கை

## ஆர். ஆர். கெய்த்தான்

திரு கெய்த்தான் அவர்கள் அமெரிக்க தேசத்தில் பிறந்தவர்; எனினும் பாரத நாட்டைத் தம் தாய்நாடாகச் சுவீகாரம் செய்துகொண்டவர். இவர் இந்தியாவின் மூலமாகத்தான் உலகத்தில் நிரந்தர சமாதானம் ஏற்படக் கூடுமென்று நம்புபவர். ஏசுநாதரது போதனையின்படி வாழ்க்கை நடத்தி வருபவர் ஆதலால் காந்தியடிகளின் கொள்கைகளில் மிகுந்த பற்றுள்ளவர். எளிய வாழ்க்கையில் இன்பம் காண்பவர்.

இப்பெரியார், ஆரம்பத்தில் மதுரை ஜில்லாவிலுள்ள பசுமலை (அமெரிக்க மிஷன்) கலாசாலைகளில் ஆசிரியராகவும், பின்னர் நிர்வாகியாகவும் இருந்து வேலை செய்து வந்தார். காந்தியடிகளிடத்தும் தேசீய ஊழியர்களிடத்தும் இவருக்கிருந்துவந்த தொடர்பு காரணமாக வேலையிலிருந்து விலக நேர்ந்தது. பசுமலையிலிருந்து வெளியேறியவுடன் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற தமது லட்சிய வாழ்க்கைக்கு ஏற்ப "சர்வதேசத் தோழமை" என்ற ஸ்தாபனத்தை பெங்களூரில் இருந்த ஸ்ரீ பிரம்மச்சாரி ராமச்சந்திரா என்பவருடன் சேர்ந்து ஸ்தாபித்து அதன் மூலம் சுமார் எட்டு வருடங்கள் சேவை செய்துவந்தார்.

கிராமங்கள் தாம் இந்த தேசத்தின் ஜீவநாடி என்று அறிந்த திரு கெய்த்தான் அவர்கள் கிராம சேவையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். 1938-ம் வருஷம் பெரிய நாயக்கன் பாளையம் ராமகிருஷ்ண வித்தியாலயத்தில், முதலாவது தென்னிந்திய கிராம ஊழியர்களின் மகாநாட்டைக் கூட்டினர். இரண்டாவது மகாநாடு பெங்களூருக் கருகிலுள்ள கங்கேரி என்ற கிராமத்திலும், மூன்றாவது மகாநாடு திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திலும் பயனுள்ள முறையில் நடைபெற இவரே ஏற்பாடு செய்தார்

திரு. கெய்த்தான் அவர்கள் தென்னிந்திய கிராம ஊழியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் கொண்டிருந்த தொடர்பை அறிந்த இந்திய சர்க்கார், அவரை மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தனர்.

இந்திய நாட்டின் பண்பாடு குறித்தும், காந்தியடிகளுடைய தத்துவங்களைப் பற்றியும் அமெரிக்க மக்கள் சரியாக அறிந்துகொள்வதற்கான வேலைகளை அங்கிருந்து செய்துவருகிறார். இது சமயம் தேசீய சர்க்கார் ஏற்பட்டிருப்பதால், இன்னும் சில மாதங்களில் (அநேகமாக ஜூன் மாதத்திற்குள்) திரு. கெய்த்தான் அவர்கள் நம்மிடை வந்து சேருவார் என்று தெரிகிறது. இவருடைய வருகை தமிழ் நாட்டு கிராம நிர்மாண வேலைகளுக்கு புதிய ஊக்கமும் உற்சாகமும் ஏற்பட உதவியாயிருக்கும் என்று நம்புவோமாக. கோ. வே.

[அமெரிக்க ஐக்கிய நாட்டில், இந்தியானா என்ற மாகாணத்தில் மேரம் என்னும் ஊரிலிருந்து திரு. கெய்த்தான் அவர்கள் 'கிராம ராஜ்ய'த்திற்காக எழுதியனுப்பிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு.]

அமெரிக்கக் கிராமங்கள் எல்லாவற்றிலும் மக்களிடையே காணப்படும் முக்கியமான ஓரியல்பு ஒப்புரவு என்பதாகும்; அதாவது அயலவரோடு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மனமொன்றிக் கலந்துகொள்ளல். சில கிராமத்து மக்கள் மட்டுமே இப்படி யிருக்கிறார்கள் என்பதில்லை. இப்போது நான் இருக்குமிடத்தின் எதிரே, நெருங்கி வாழ்கின்ற பல வீட்டு மக்கள் ஓர் களஞ்சியங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். புதிய இடங்களில்

சென்று மக்கள் புதிதாக வாழ்க்கை தொடங்கிய காலத்தில்தான் இவ்விதமான ஒத்துழைப்பு இன்றியமையாததாயிருந்தது; ஆனால் இயந்திர நாகரிகம் பெருகிவிட்ட இந்த நாளில் இந்த விதமான ஒத்துழைப்பு அவ்வளவு அவசியமில்லை; இருந்தபோதிலுங்கூட இந்த அமெரிக்க மக்கள், ஒருவர் வீட்டில் யாருக்கேனும் உடல் நலம் இல்லாவிட்டாலும் சரி, வீட்டுக்குரியவர் இறந்துபோன சமயத்திலும் சரி, எங்கெங்கு உதவி தேவையிருக்கிறதோ அங்கெல்லாம் ஒன்றுகூடி வந்து அவசியமான வேலையைச் செய்து முடிக்கிறார்கள். ஆனால் அமெரிக்க விவசாயப் பண்ணைகளில் கொஞ்சங் கொஞ்சமாக இயந்திரங்கள் வந்து வேலைசெய்யத் தொடங்குவதால், இந்த ஒப்புரவு சில சமயங்களில் மறைந்து போகிறது; எனினும், கோயில் போன்ற சில ஸ்தாபனங்கள் இந்த ஒப்புரவு உணர்ச்சியை வளர்க்கப் பெரிதும் பாடுபடுகின்றன.

ஒருவர் திறமையான உழவராக இருக்கவேண்டுமானால், அவரிடம் நிலத்தைச் செம்மையாகப் பாதுகாக்கும் திறமையும் அமைதல் வேண்டும். முற்காலத்தில் அமெரிக்கக் குடியானவர்கள் பெரும்பான்மையும் தங்கள் நிலத்தை வீணாக்கியே வந்தார்கள். ஆனால் இப்போதோ, மண்ணிலுள்ள வளம் குன்றிவருகிறது; இது காரணமாய் மண் வளத்தைக் குன்றாது காக்கும் திட்டங்கள் நாடெங்கும் தோன்றக் காண்கிறோம். இவ்வருஷம் கோடை காலத்தில் சுமார் பத்துப் பன்னிரண்டு மாகாணங்களில் நான் பிரயாணம் செய்தேன். அங்கெல்லாம் மண் வளம் மழையால் கரைந்துபோய் விடுவதைத் தடுக்கும் பொருட்டு குடியானவர்கள் மேடுபள்ளத்திற்கு ஏற்றபடி ஆங்காங்கு பாத்திகட்டிப் பெரு வரப்புகளமைத்துச் சாகுபடி செய்துவருவதைக் கண்டேன். பலர் குப்பைக் குழிகள் அமைத்து குப்பையெல்லாம் சேமித்து நல்ல முறையில் எருவாக்கி உபயோகித்து வந்ததையும் கண்டேன்.

உணவுப் பயிர்களுக்குப் பதிலாக லாபந்தரும் பயிர்களைச் சாகுபடி செய்யும் பழக்கம் உலகெங்கும் பெருகி வருகிறது. அமெரிக்க நாட்டிலும் இப்பழக்கம் பெருகுவதைக் காணலாம். இரண்டு வருஷத்துக்கு முன்பு இங்கு வந்தபோது, சோயா அவரை ஏராளமாய்ச் சாகுபடியானதைக் காண எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது; இந்த அவரையில் பெரும் பகுதி அங்கு உணவுக்கு உபயோகிக்கவில்லையென்றும் வியாபாரத்துக்கே உபயோகப்பட்டதென்றும் அறிந்தபோது எங்களுக்கு மிக்க வேதனையுண்டாயிற்று. தென் பகுதியில் புகையிலை பயிராகிறது; அங்கு மண் வளம் வெகு சீக்கிரத்தில் குன்றிவிடுகிறது. வட பகுதியில் உணவுத் தானியங்கள் பயிராகின்றன. இங்கும் மேல்மண் மழையில் கரைந்துபோய் விடுகிறது; இது பெரிதும் கவலைக்கிடமான விஷயம். எனினும் பலர் இப்போது உணவுப் பயிர் சாகுபடி செய்வதே பிரதானம் என்று பேசிவருவதைக் காண மனதுக்கு ஆறுதல் உண்டாகிறது.

முடிவாக நான் சொல்ல விரும்புவது கிராமத்திலுள்ள கோவில். கிராமத்து வாழ்க்கையையும் நாகரிகத்தையும் மேம்படச் செய்வதில் தங்கள் பொறுப்பு பெரிது என்பதை அமெரிக்கக் கோவிலைச் சேர்ந்த குருமார்கள் நன்றாய் உணர்ந்து வருகிறார்கள். பூமி திருத்தி யுண்பதனால் பெரும்பயன் விளைகிறது, குடியானவர் தம் நிலத்தின் சாரத்தை மிகச் செம்மையாகப் பாதுகாப்பது முக்கியம், மக்களினத்துக்குச் சேவை செய்வதும் தேவையான உணவைப் பயிரிட்டுத் தருவதும் முக்கியம் என்ற விஷயங்களைக் குடியானவர் நன்றாய் உணரும்படி செய்வதற்கான பல முயற்சிகள் நடக்கின்றன. குருமார் பலர் 'கடவுள் நிலம்' என்ற திட்டத்தை எங்கும் பரப்ப

முயல்கிறார்கள். அதாவது ஒவ்வொரு குடியானவரும் தம் நிலத்தில் ஒரு பகுதியை தரும காரியங்களுக்கென்று ஒதுக்கி வைப்பதாகும். பல இடங்களில் அறுவடை விழாக்களை இவர்கள் ஆதரித்து வளர்க்கிறார்கள்; இங்கு கடவுளின் கருணையைப் போற்றுகிற பண்பு ஓங்குகிறது.

இந்தியக் கிராமங்களில் இவை போன்ற நல்லியல்புகளைப் பெருக்க வேண்டும்; ஒப்புரவு ஓங்கவேண்டும்; மண்வளத்தைப் பேணுவதில் சிறந்த பொறுப்பு ஊட்டவேண்டும். பணத்துக்காகப் பயிரிடுவதை நிறுத்தி உணவுக்காகப் பயிரிடுவது வழக்கமாக வேண்டும். முடிவாக நமது சமயமானது நித்தியமான கடவுள் தத்துவத்தோடு இதய ஒற்றுமை நிலவுதல் என்ற முறையில் கிராம வாழ்க்கையைத் திட்டமாக வளர்த்துவர வேண்டும்.

---

# ஓரே வழி

## நாமக்கல் கவிஞர்

எந்திர மோகம் குறையாமல்
எதிலும் நிம்மதி பிறவாது;
தந்திரப் பொய்வழி போகாமல்
தரித்திரம் தொலைந்திடல் ஆகாது.

தேக உழைப்புகள் செய்யாமல்
தேடிடும் செல்வம் பொய்யாகும்;
போக சுகங்களும் ருசிக்காது;
பொருள்கள் இருப்பினும் பசிக்காது.

இயற்கைத் தாயைப் பழித்துவிட்டோம்,
இன்பச் சுனைகளை அழித்துவிட்டோம்,
செயற்கைப் பேயைக் கும்பிட்டோம்,
செம்மைகள் நீங்கின; துன்புற்றோம்.

உழவையும் நெசவையும் அவமதித்தோம்,
உண்ணவும் உடுக்கவும்தவிதவித்தோம்,
அழுகின தானியம் மொச்சைகளை
அன்னியத் தயவால் பிச்சைகொண்டோம்.

மலைகளில், வனங்களில், வயல்களிலே
மண்டிடும் சுகங்களைப் பயிலகிலமாய்,
உலையிலும் கொதித்திடும் ஆலைகளில்
உயிரையும் விடுவோம் கூலிகளாய்.

எப்படி யெப்படி முயன்றாலும்,
எத்தனை வித்தைகள் பயின்றாலும்,
கைப்பிடி உணவுக் காறுலும
கழனிசெய் கிராமம் போனால்தான்.

நாட்டுப் புரங்கள் நாசமுற,
நகர நெருக்கடி மோசமிக,
காட்டுப் புரததையும் சிதைத்துவிட்டோம்;
கஷ்டங் களையே விதைத்துவிட்டோம்.

பட்டணக் கரைகளின் செழிப்பெல்லாம்
பட்டிக காட்டவர் உழைப்பன்றோ?
பட்டினிச் சாவும் பஞ்சமெலலாம்
பட்டணப் பெருக்கால் மிஞ்சினதே.

விதையும் உழைப்பும் நமதானல
விலையும் கூலியும் சுமையாமோ?
மதிப்பிற குரியது பணமல்ல,
மக்களின் நலமும குணமும்தான்.

சத்தியம்! கிராமம் செழியாமல்
சண்டையும் வறுமையும் ஒழியாது;
உத்தமன் காந்திசொல் வழியல்லால்
உபதே சித்திட மொழியிலலை.

---

# நான் கண்ட காந்தி

## (லூயிபிஷர்)

மொழி பெயர்ப்பு: டி. ஆர். அருணசலம் (சென்ற இதழ் 27-ம் பக்கத் தொடர்ச்சி)

**கா**ந்திஜி பெரிதும் ஒரு ஹிந்துவின் குணமுடையவரே. இந்துமதம் சகிப்புத் தன்மை யுடையது; கடற் பஞ்சை யொத்து எதையும் கிரகிக்கக்கூடியது. இந்துக்கள் கடவுள் ஒருவரே என்ற நம்பிக்கை யுள்ளவர்கள். சிலர் ஏசு கிறிஸ்துவையும் நம்புகிறுர்கள். இன்னும் சிலர் நாஸ்திகர்கள். கடவுட் கொள்கை ஒருபுறமிருக்க, இந்துமதம் வாழ்க்கையின் ஓர் வழிகாட்டி என அவர்கள் உரிமை கொண்டாடுகிறுர்கள். சிலர் விக்கிரகங்களை ஆராதிக்கின்றுர்கள். ஒரு காலத்தில் ஆடவர்களாகவும் பெண்களாகவும் இருந்து இப்பொழுது கடவுளாக்கப்பட்டவர்களையும், மலைகளையும், நதிகளையும் சிலர் வணங்குகிறுர்கள். முற்றிலும் எதிரிடையான ஏகேசுவர வாதம், விக்கிரக ஆராதனை இவ்விரண்டுக்கும் இடையே எவ்வித முரண்பாடும் இருப்பதாக அவர்கள் காணவில்லை. "நயகாரா நீர்வீழ்ச்சி இந்தியாவில் இருக்குமாயின் அதுவும் ஒரு கடவுளாகியிருக்கும்" என்று ஒரு இந்தியர் என்னிடம் கூறினுர். இந்துமதம் என்னும் பெரிய மலை ஜன நெருக்கம் அதிகமுடையது; எனினும் மகாத்மா காந்திக்கென பிரத்தியேகமாக அதில் ஓர் இடம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது என்று பல இந்துக்கள் நிச்சயமாக நம்புகின்றனர்.

மக்களுக்காக தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட்டார் என்பதுதான் காந்திஜியைப்பற்றி பொதுவாக இந்தியர்களின் உணர்ச்சியாகும். மக்களைப் போலவே அவர் வாழ்கிறுர். அவர்களுடைய கஷ்டங்களிலும் வறுமையிலும் அவர் பங்கு கொள்கிறுர். அவருக்குப் பணமுமில்லை, சொத்துமில்லை. அவர் விரும்புவது ஒன்றே ஒன்றுதான். அதுதான் சுதந்திர இந்தியா. இதே விஷயத்தை பல கோடிக்கணக்கான இந்தியர்களும் விரும்புவதால்தான் காந்திஜியே தேசத்தின் தாகத்துக்கு ஓர் சின்னமாக விளங்குகிறுர்.

வேறு யாரையும்விட காந்திஜி தம்முடைய தேசத்தின் விடுதலைக்காகப் பல வருடங்கள் கஷ்டப்பட்டிருக்கிறுர். ஆகையினுல், அவரிடம் நம்பிக்கையுள்ள பல முஸ்லிம்களும், இந்துக்களும், பார்சிகளும், தீண்டாதவர்களும் அவரின் சிரத்தை மிக்க சிஷ்யர்களாயிருக்கின்றுர்கள். அவர்களில் பலர் எண்ணற்ற விஷயங்களில் காந்திஜியுடன் அபிப்பிராய பேதமுடையவர்கள். இந்து ஆட்சியை ஸ்தாபிக்க விரும்புவதாக அவரைக் குற்றம் சாட்டும் முஸ்லிம்களும் இருக்கிறுர்கள். ஆனுல் தேசத்தின் விமோசனத்துக்கு அவருடைய மாருத உழைப்பை யாரும் மறுக்கவில்லை. தற்காலத்தில் தேசியத்தை விரும்பும் தன்மை சாதாரணமானதாகவும், இயற்கையானதாகவும், தானுக வரக்கூடியதாகவும் இருக்கிறது. இந்தியாவில் இத்தூண்டுதலுக்குக் காரணமான சக்தி வாய்ந்த மனிதர் மகாத்மா காந்திதான்.

சேவாக்கிராமத்தில் தமது குடிசையில் இருந்துகொண்டே, தமக்கு வரும் கடிதங்களைப் படிப்பது, தம்மை வந்து பார்க்கும் இந்தியர்களின் வார்த்தைகளைக் கேட்பது ஆகியவற்றின் மூலம், இந்தியப் பாமர மக்களின் பிரார்த்தனைகளைக் கேட்கவும் அவர்களுடைய உணர்ச்சிகளை அறியவும் முடியும் என்பது காந்திஜியின்

துணிபு. அவர்களுடைய விருப்பத்தைத் தாம் அறிகின்றபடியால் அவர்களுக்காக வேலைசெய்யும் உரிமையும் தமக்கு உண்டு என்று அவர் நம்புகிறார். இந்தியாவும் தாமும் ஒன்று என்கிறார் காந்திஜி. இந்தியர்களின் விருப்பத்தை அறியத் தம் முழு சக்தியையும் செலவிட அவர் தயாராயிருக்கிறார். அதை அவர் கேட்கிறார். அதை தாம் சரியானபடி வியாக்கியானம் செய்வதாக உறுதி கொள்ளுகிறார். இம் மாதிரி உறுதிதான் தலைவர்களுக்கு எப்பொழுதும் ஓர் சக்தியாகவும், வழிகாட்டும் விளக்கமாகவும் இருக்கின்றது. பொருளாதாரம் பற்றியும் சமூக விஷயம் பற்றியும் காந்திஜிக்குத் தம்முடைய கொள்கையில் சந்தேகம் ஏற்படலாம். வழிகளையும் கால வரையறைகளையும் அவர் திருத்த ஒப்புக்கொள்ளலாம். ஆனால், முக்கிய கோரிக்கையான சுதந்திர விஷயத்திலோ அவர் விட்டுக்கொடுக்க மாட்டார்; சமரசத்தை விரும்பவும் மாட்டார். பிசகாமல் நேர் வழியே செல்வார். சுதந்திரத்தைப் பெறுவதற்காகவே காந்திஜி தோன்றினார் என்று இந்தியர்கள் கூறுவார்கள். அதற்காக இறக்கவும் அவர் தயார். இந்தியர்களின் குணங்களில் மிகச் சிறந்தது தியாகமும் துறவும்தான். காந்திஜியின் நுட்ப புத்தியும் ஞானமும், உலகத்திலேயே மதப்பற்று அதிகமாயுள்ள தேசத்தில் அவருடைய அபாரமான மதப்பற்றும் மென்மேலும் அவருடைய மேன்மையை விளக்குகின்றது. அவருடைய தேசிய சுதந்திர தாகமும், அந்த லட்சியத்தை நோக்கி அளவு கடந்த ஆர்வத்துடன் அவர் செல்லும் முறையுமே பொது மக்களுக்கு ஓர் தூண்டுகோலாக இருக்கின்றது. இந்திய சுதந்திர தாகந்தான் அவரிடம் மற்றவைகளைக் காட்டிலும்—ஏன், அஹிம்சையில் அவருக்குள்ள நம்பிக்கைக்கும் மேலே—முதல் இடம் பெற்றிருக்கிறது. நேரு, ஆஸாத் ராஜாஜி போன்றவர்கள் சமாதான வாதிகள் அல்ல என்று தாம் அறிந்திருந்தாலும் அவர்களுடன் மிகவும் நேசமான முறையில் ஒத்துழைப்பார். ஆனால் இந்திய சுதந்திரத்தின் விரோதிகளுடன் ஒருக்காலும் அவர் வேலை செய்யமாட்டார்.

சுதந்திரத்துக்காக அவர் வேலைசெய்யும் முறையில், அவருக்கும் இந்தியர்களுக்குமிடையே இன்னிசை போன்ற ஓர் ஒற்றுமை இருக்கின்றது. பெரிய தலைவர்களுக்கு இவ்வொற்றுமை அவசியம். இதுதான் அவர்களுடைய பெருமைக்கு மூலகாரணம். இதை வின்ஸ்டன் சர்ச்சில் தம்முடைய பிரசங்கங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறார். பல சாதாரண ஆங்கிலேயர்கள் தங்கள் அண்டை அயலார்களிடத்திலும், இரவில் தங்களுக்குத் தாங்களேயும் எதைக் கொச்சையாகக் கூறுகின்றார்களோ அதையே சர்ச்சில் மிகத் திறமையாக மெருகுபடுத்திக் கூறுகிறார். உங்களைப் போலவே, ஆனால் இன்னும் சிறந்த முறையிலே இருக்கும் தலைவரையே நீங்கள் பின்பற்றுகிறீர்கள். அரை நிர்வாணமும், அரைப் பட்டினியும், அறிவு வறுமையுமுடைய கோடிக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்களின் தந்தையாகவும் சகோதரராகவும் காந்திஜி விளங்குகிறார். இவர்கள்எல்லோரும் தேசிய முயற்சியின் மூலம் கௌரவத்தையும் செழுமையையும் அடைய விரும்புகிறார்கள். அவர், இவர்களில் ஒருவர். அந்நிய ஆட்சியை விரும்பாதவர்கள், கேவலம் ஒரு வெளிநாட்டு அதிகாரி இங்கிருப்பதையே பொறுக்காதவர்களான பெரிய ஆலை முதலாளிகள், உயர்ந்த பண்பாடுடைய எண்ணற்ற இந்தியர்கள் ஆகியோரின் பிரார்த்தனைக்கும் அவர் பதிலளிக்கிறார்.

காந்திஜியின் வாழ்க்கை ஒரே நோக்கமுடையது. அவர் சுதந்திர இந்தியாவை விரும்புகிறார். அதுவும் பெரிய மனிதர்

களுக்குள்ள விசேஷ குணந்தான். பிரிட்டன் முதன்மையான சக்தியுடையதாக எப்போதும் காத்துவருவதுதான் சர்ச்சிலின் நோக்கமாகும். நிலவுரிமை என்னும் சேற்றிலிருந்து ரஷ்யாவைத் தூக்கிவிடுவதுதான் லெனினுடைய நோக்கம். ஐக்கியம்தான் லிங்கனுடைய நோக்கம். உலக வெற்றியே ஹிட்லருடைய நோக்கம். பெரிய மனிதர்கள் எல்லோரும் ஒரே சிறந்த சிற்பத்தைப்போல ஒரே கல்லில் செதுக்கப்பட்டவர்கள். ஒட்டுப்போட்ட பகுதியே இருப்பதற்கில்லை!

---

## விவேகாநந்த சுவாமிகள் அருள் வாக்கு

(ஜி. என். கரியபட்டன் திரட்டியது)

இளைஞனே! சுறுசுறுப்பாய் இரு; தைரியங்கொள். பகவான் அருளால் இந்தியாவிற்குப் பெருங் காரியங்களைச் செய்ய நமக்கு நற்சமயம் வாய்த்துள்ளது. பெருங் காரியங்கள் நிச்சயமாகச் செய்வோம் என்பதை நம்பு. ஏழைகளிடம் அனுதாபப்படும் நாம்தாம் அவ்விதம் செய்வோமே தவிர, மற்றவர் செய்யமாட்டார்கள்.

நீங்கள் ஏழைகளென்று எண்ணுதீர்கள். பணம் பலமல்ல. நற்குணம், பரிசுத்தம், கடவுள் பக்தி, அஹிம்சா தர்மம், பிறர் சேவை இவைதான் பலமாகும். பணமாவது, பெயராவது ஒன்றும் செய்வதில்லை; கீர்த்தியும் வெறுங் கல்வியும் ஒன்றும் செய்வதில்லை. ஆனால், அன்பே எல்லாம் செய்கிறது. அன்பே கஷ்டமென்று சொல்லப்படும் கருங்கற் சுவர்களையும் பிளக்கச் செய்கிறது.

நம்புங்கள்! உறுதியாக நம்புங்கள்!! இந்தியா கண்விழித்து எழுந்திருக்க வேண்டுமென்று ஆண்டவனின் கட்டளை பிறந்துவிட்டது. எழுங்கள்! விழியுங்கள்! நீளிரவு கழிந்துவிட்டது. கீழ்வானத்தில் பொழுது புலர்ந்தது. கடல் புரண்டு வருகிறது. அதன் உத்வேகத்தைத் தணிக்க எதனுலும் ஆகாது.

**நமது தேசம் குடிசைகளில் வசிக்கின்றதென்பதை நீங்கள் நினைவூட்டிக் கொள்வீர்களாக! ஊர் ஊராக, கிராமம் கிராமமாகச் சென்று, மக்கள் சோம்பி முயற்சியின்றி இருப்பது இனி கொஞ்சமும் தகாது என்று அவர்களுக்கு எடுத்துரைப்பது உங்கள் கடமையாகும். தற்கால நிலையை அவர்களுக்கு உணர்த்துங்கள். 'சகோதரர்களே! இன்னும் எவ்வளவு காலம் உறங்குவது? எழுங்கள்! விழியுங்கள்!!' என்று சொல்லிப் பரிவுடன் அவர்களைத் தட்டி எழுப்புங்கள்.**

துறவும் தொண்டும் இந்தியாவின் தேசிய லட்சியங்களாகும். இந்த லட்சியங்களை நீங்கள் பேணி வளர்த்தால் மற்றவை தாமே வளரும்.

வருங்காலத்தில், அதி ஆச்சரியமான, மகிமை வாய்ந்த இந்தியா தோன்றப் போகின்றது. இதற்குமுன் எப்போதும் இருந்ததைவிட அது பெருமைபெற்று விளங்கும். பண்டைக்கால ரிஷிகளையும் விடப் பெரிய மகான்கள் தோன்றுவார்கள். உங்கள் மூதாதைகளின் ஆவி, உலகங்களில் தத்தம் இடத்திலிருந்து, தமது சந்ததிகள் இவ்வளவு மகோன்னதம் பொருந்தி விளங்குவதைக்கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடையும் என்பதில் சந்தேகமேயில்லை!

---

# தமிழ் நாட்டில் ஆலயப் பிரவேசம்

ச. ஜெகந்நாதன்
(காரியதரிசி நிர்மாண ஊழியர் சங்கம், மதுரை.)

1939ல் மதுரை மீனுட்சியம்மை ஆலயப் பிரவேசம் நடந்ததற்குப் பின் இப்பொழுதுதான் ஒன்றன்பின் ஒன்ருகப் பல கோவில்கள் ஹரிஜன சகோதரர்களுக்குத் திறந்துவிடப்படுகின்றன. கிராமங்களிலும் சில கோவில்கள் திறக்கப் பட்டு வருவது யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். கிராமங்களில்தான் தீண்டாமை கொடிய முறையில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கிராமங்களிலும் தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்க ஆரம்பித்திருப்பது நாட்டிற்கு நல்ல அறிகுறி. ராமேஸ்வரம், திருப்பதி இன்னும் பல இடங்களிலுள்ள கோவில்கள் ஹரிஜனங்களுக்கு அடைபட்டுக் கிடக்கின்றன. இக்குறை உடனே நீங்கவேண்டும்.

காந்திஜி ஆரம்பித்த வேலைக்கு (இத்தனை வருஷங்களுக்குப் பிறகாவது) பலன் கிடைத்து வருவது திருப்தியளிப்பதாயிருந்தாலும், ஜாதி ஹிந்துக்கள் இதனுல் பெருமையடைய முடியாது. பல நூற்ருண்டுகளாகச் செய்துவந்த தவறு நிறுத்திக்கொள்ளப்படுகிறது, குற்றத்தை உணர்ந்து பரிகாரம் தேடப்படுகிறது. இந்த உணர்வு புறக்கோவிலோடு நின்றுவிடாமல் பரிபூரணமாகத் தங்கள் அகக் கோவிலையும் சுத்திகரிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். இதில் அரைகுறை கூடாது. சாக்கடையிலே தவறி விழுந்தவன் கைகளை மாத்திரம் கழுவிக்கொண்டால் நாற்றம் போய்விடுமா? முதலில் கைகளைக் கழுவி, பிறகு உடம்பு முழுதும் கழுவவேண்டும். ஜாதி ஹிந்துக்கள் பல்லாண்டுகளாகச் செய்துவந்த பாவத்திற்குப் பரிகாரம், ஆலயப்பிரவேசத்திலிருந்து ஆரம்பித்து, தீண்டாமையை அடியோடு ஒழிப்பதேயாகும்.

ஆலயப் பிரவேசத்தால் மாத்திரம் தீண்டாமை நீங்கிவிடாது. ஆண்டவன் சன்னிதானத்தில் ஹரிஜனங்களுக்கு சமத்துவம் தந்து, பிற இடங்களில் அவர்களை விலக்கி வைத்தால் ஹிந்துக்கள் ஆஷாடபூதிகளாகி விடுவார்கள். குளம், கிணறு, வீதிகள், சாவடிகளிலும் அவர்களுக்குச் சமத்துவம் கொடுக்கத் தவறினுல் ஆலயப் பிரவேசத்தில் அர்த்தமேயில்லை. கிராமங்களில் குடிக்கவும் குளிக்கவும் தண்ணீர் வசதியில்லாமல் அவர்கள் அவதிப்படுகிருர்கள். இக்குறையை நிவர்த்திப்பது ஜாதி ஹிந்துக்களின் பொறுப்பு. இதைத் செய்யத் தவறினுல் ஆலயப்பிரவேசம் பொய்யாகிவிடும்.

இவை எல்லாவற்றிற்கும் ஜாதி ஹிந்துக்களிடையே பெரிய மனமாறுதல் ஏற்படவேண்டும். ஆண்டவனின் சன்னிதானத்தில் அழைத்துக்கொண்டபின் தங்கள் இதயத்திலும் அவர்களை சகோதரர்களாகக் கருதவேண்டாமா? பகவான் எழுந்தருளியிருக்கும் பரிசுத்தம் வாய்ந்த கோவிலுக்குள் அழைத்துக்கொண்ட பிறகு, ஜாதி ஹிந்துக்கள் தங்கள் வீடுகளிலும் ஹரிஜனங்களைத் தாராளமாக வரவேற்பதில் தாமதம் செய்யக்கூடாது.

கிராமங்களில் ஹரிஜனங்கள் படும் பாட்டை ஊழியர்கள் நன்ருய் அறிவார்கள். ஆலயப்பிரவேசம் அந்தரங்க சுத்தியோடு நடந்ததென்பதை ஊழியர்கள்

நிரூபிக்கவேண்டும். கிணறு, குளம், வீதிகள், சாவடிகளிலும், வீடுகளிலும் எங்கும் அவர்களுக்குச் சமத்துவம் கிடைக்க ஊழியர்கள் பாடுபடவேண்டும். நம் நாட்டிற்குக் கிராமங்களே ஜீவாதாரம். கிராமங்களே முதல் அங்கம். எல்லா சீர்திருத்தங்களும் கிராமங்களில்தான் ஆரம்பிக்க வேண்டும். இதுவே கிராம ராஜ்யத்திற்கு அடிகோலும் வழி. சமூக, பொருளாதார, அரசியல் புரட்சிகள் கிராமங்களிலிருந்து தோன்றுமானால், எந்த சக்தியும் அவற்றைத் தடுக்க முடியாது. தீண்டாமை ஒழிய, சமத்துவம்ஓங்க, சகோதரத்துவம் வளர சமூக மாறுதலிலே அஹிம்சா புரட்சி கிராமங்களில் தோன்றுக! ஊழியர்கள் அதற்கென உழைப்போமாக!

## ஹரிஜன சேவைத் திட்டம்

(மகாத்மா காந்தி)

ஹரிஜனங்களுக்காகப் பாடுபடுகிறவர்கள் உடனே கீழ்க்கண்ட வேலைகளில் இறங்கவேண்டும்:—

1. தங்கள் தேகங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், இதர சுகாதார விதிகளை அநுஷ்டிக்கவும் வேண்டுமென்ற உணர்ச்சியை ஹரிஜனங்களிடையே ஊட்டுதல்; (2) அசுத்தத் தொழில்கள் என்று கருதப்படும் அதாவது, தோட்டித் தொழில், தோல் பதனிடுதல் இவற்றைச் சுத்தமாக செய்வதற்கான வழிகளைச் சொல்லிக் கொடுத்தல். (3) மாமிசம் உண்பதை அடியோடு விட்டொழிக்க முடியாமற் போனாலும், செத்த மிருகத்தின் மாமிசத்தையாவது சாப்பிடாமலிருத்தல்; (4) கள்ளு, சாராயம் குடிப்பதை நிறுத்தி விடுதல்; (5) எங்கெங்கு பகல் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் தங்கள் குழந்தைகளை அவற்றிற்கு அனுப்புமாறு பெற்றோர்களைத் தூண்டுதல்; பெற்றோர்களை இராப் பள்ளிக்கூடங்களுக்குப் போகச் சொல்லவேண்டும். (6) அவர்களுக்குள்ளேயே இருந்துவரும் தீண்டாமையை ஒழித்தல்.

கடைசியாகச் சொன்னது ரொம்ப முக்கியமானது. இந்த இயக்கத்திற்காக உழைப்பவர்கள் சுயநலப்பற்று அற்றவர்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

## ஜாதிகளைப் பற்றி

தி. சே. சௌ. ராஜன்

ஜாதியின் வேர் அழுகிவிட்டது. மேலே பூத்துக் காய்த்துக்கொடுக்கவேண்டிய பலன் வெம்பி வெதும்பிக் கொட்டுகிறது. இதுதான் பழமென நினைக்கும் மேல் ஜாதியினரின் அறிவீனத்தை என்னவென்று சொல்லுவது! ஆங்கிலம் படித்தவர்களும் வருணாசிரமப் பாகுபாடுகளைக் கனவிலும் நினையாதவர்களும், பட்டணங்களில் கூடத் தீண்டாமையை விட்டபாடில்லை. கிராமங்களைப்பற்றிக் கேட்பானேன்? புரட்சிகரமான சமுதாயம் ஏற்பட வேண்டும். கேவலம் படிப்பு இருந்தால் மட்டும் போதாது; ஜீவகாருண்யம் வேண்டும். இரக்கம் வேண்டும் சமரச உணர்ச்சி வேண்டும். அகம்பாவம் ஒழிய வேண்டும், உண்மைஅறிவும், அதற்கேற்ற ஒழுங்கும் யாரும் பின்பற்ற முடியும். அதுதான் ஜாதியின் உண்மை என்பதை நம் மக்கள் என்று அறிகிறார்களோ அன்று தான் நாட்டிற்கு விடுதலை உண்டாகும். அது வரையில் திராவிடக் கட்சிக்காரர்களும், பொது உடைமைக்காரர்களும் நாஸ்திகர்களும் வலுத்து ஓங்கி வருவார்கள். அதன் விளைவாகப் புரட்சி ஏற்படும். அக்காலத்தில் உண்டாகும் கொடுமைகளுக்கு அளவே இருக்கமுடியாது. உளுத்துப்போன சமுதாயத்தைக் குறிகளாலும் வேஷத்தாலும் அதிக காலம் தூக்கி நிறுத்தி வைத்திருக்க முடியாது.

'கலைமகள்'

# தேசத்தின் ஜீவநாடி எது?

ரா. குருசாமி

1941-ம் வருஷ ஜன கணிதக் கணக்குப்படி,

இந்தியாவின் மொத்த
கிராமங்கள் 6,55,892.
" நகரங்கள் 2,703.

(இதில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள நகரங்கள் 40.)

இந்தியாவின் மொத்த
கிராம ஜனத்தொகை 33,93,00,000.
நகர ஜனத்தொகை 4,97,00,000.

அதாவது, இந்தியாவில் 100-க்கு 87 பேர் கிராமவாசிகள்.

இந்தக் கணக்குப்படி இந்தியா பூரணமாகக் கிராமாந்தர நாடு என்பது தெளிவாகிறது. கடந்த 200 வருஷ ஆங்கில ஆட்சியின் சாபத்தீட்டால், இந்தியக் கைத்தொழில்கள் யாவும் நசிந்து நாசமாகிவிட்டதால், வேலையற்ற மக்கள் விவசாயத்தையே நம்பி கிராமங்களில் பெருகியுள்ளனர். 1881-ல் விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்திய மக்களின் எண்ணிக்கை 58 சத விகிதமாக இருந்தது, இப்போது 73·9 சத விகிதமாக உயர்ந்திருக்கின்றது. ஆகவே, இந்தியாவின் அபிவிருத்திக்கான திட்டங்கள் யாவும் கிராம அபிவிருத்தியின் அடிப்படையிலேயே அமைக்கப்படவேண்டும்.

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் சிருஷ்டிகளான நவீன நகரங்களிலேயே அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், என்ஜினீயர்கள், பாங்கர்கள், வியாபாரிகள், மில் முதலாளிகள் யாவரும் குவிந்து கிடக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமான அபிப்பிராயங்களை நகரங்களிலிருந்தே அவர்களது பத்திரிகைகள் வெளியிட்டு உருவாக்குகின்றன. அவர்கள் நகர நாகரிகத்தில் ஊறிப்போனவர்கள்; நகர அபிவிருத்திக்கான முறையிலேயே சிந்திப்பவர்கள்; தங்களுக்குச் சாதகமாக, அழிவை நோக்கி விரைந்துகொண்டிருக்கும் மேல் நாடுகளை எடுத்துக்காட்டாகக் கொள்பவர்கள். இவர்களின் பேச்சுகளும், திட்டங்களும் பத்திரிகைகளில் இந்திய மக்களின் அபிப்பிராயங்களாகப் பிரமாதப்படுத்தப்படுகின்றன. பம்பாய், கல்கத்தா, டெல்லி, மதராஸ் ஆகிய நகரங்களே இந்தியா என ஏமாற்றப்படுகின்றது. நகர நாகரிகத்தின் மேற்பூச்சில் உண்மையான, தரித்திரத்தின் சின்னங்களான, அறியாமையில் ஆழ்த்தப்பட்டுள்ள, லட்சக்கணக்கான கிராமங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. கிராம மக்கள் வாயில்லாப் பூச்சிகளாகத் தவிக்கிறார்கள்.

இந்தியாவின் அபிவிருத்திக்கான எந்தத் திட்டமும், கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடியதாகவும், தேசத்தின் ஆட்சிமுறையில் அவர்களே பூரண பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பங்களைச் சகல துறைகளிலும் வழங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

இதுவரை தேசத்தில் ஆட்சி செய்த அரசாங்க முறையால் நம் நாட்டுக் கிராமங்களுக்கு ஏற்பட்டுள்ள லாப நஷ்டங்களைக் கணக்குப்போட்டுப் பார்ப்போமானால், வருங்காலத் திட்டம் வகுப்பதில் கிராமமக்கள் யாரை நம்பலாம் என்பதும்,

எந்த முறையில் வசூக்கும் திட்டம் அவர்களுக்குப் பிரயோஜனப்படும் என்பதும் தெளிவாக விளங்கக்கூடும்.

நமது மாகாண சர்க்காருக்குக் கிடைக்கும் வரிப்பணம் பூராவும் அநேகமாக கிராம மக்களே கொடுக்கிறார்கள். நில வரி, கலால் வரி, பத்திரப்பதிவு ஸ்டாம்பு கட்டணம், விற்பனை வரி இவைகளில் விற்பனை வரியாக இருந்தாலும் அதிக வருமானமுள்ள வரிகள். விற்பனை வரி அநேகமாக நகரங்களே வசூலித்துக் கொடுப்பதாக இருந்தாலும், பெரும்பாலும் கிராமத்தார்களே அந்த வரிப் பணம் செலுத்தி சரக்கு வாங்குபவர்கள். கோடிக்கணக்காகக் கிராம மக்கள் செலுத்தும் இந்த வரிகளிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் பிரதிபலன் என்ன?

கிராமங்களின் தேவைக்கான அளவு பள்ளிக்கூடங்கள் கிடையா. பள்ளிக்கூடங்கள் இல்லாத எத்தனையோ கிராமங்களும் உண்டு. படிப்பதற்கு, பிள்ளைகள் மைல் கணக்காக நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. பள்ளிக் கூடங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களோ ரொம்பவும் சொற்பம். அவைகளில் கொடுக்கப்படும் கல்வியால் கிராமங்களுக்கு எந்தவிதப் பிரயோஜனமும் ஏற்படுவதில்லை. கிராமச் சூழ்நிலைக்கு மாறுபட்ட முறையில், தங்களைத் தனி ஜாதியாராக மாணவர்கள் கருதும் அளவுக்கு, சரீர உழைப்பை அவமானமாகக் கருதும் ரீதியில் கல்வி முறை உள்ளது. கல்வியின் அவசியம் உணரப் படவில்லை; வற்புறுத்தப் படுவதுமில்லை; படிப்பதற்குத் தடையாக உள்ள குடும்பத் தரித்திரத்திற்குப் பரிகாரமே கிடையாது.

கிராமங்களில் போக்குவரத்துக்குச் சரியான பாதைகள் கிடையா. அங்கே உற்பத்தியாகும் உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் நகரங்களுக்கு அள்ளிப்போகும் முறையில் மோட்டார் லாரிகள் போய் வருவதற்கான பெரிய ரஸ்தாக்கள் நகரத்திற்கு நகரம் அமைக்கப்பட்டிருப்பது வாஸ்தவம். ஆனால் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கோ, பெரிய ரஸ்தாக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலோ மாட்டு வண்டி போய்வரும் முறையில்கூட ஒழுங்கான பாதைகளைச் சர்க்கார் அமைத்துக் கொடுக்கவில்லை. மழை காலத்திலும், பயிரிடும் பருவங்களிலும் கரிசல் காடுகள் வழியாகப் போய் வருவதில் மக்கள் எவ்வளவு கஷ்டமடைகிறார்கள்! சேற்றிலும் வாய்க்கால் கரைகளிலும் நடந்து, நீர் நிறைந்து ஓடும் ஓடைகள், கண்மாய்கள் இவற்றைக் கடப்பதில் அவர்கள் படும் அவஸ்தைகளைக் கண்டு இரக்கப்படுவதற்குக்கூட ஆள் கிடையாது. விதைப்புக்காலத்தில் வண்டிப் பாதைகள் அடைபட்டுப்போவதால், ஒருவருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டாலும், அபாயகரமான காயங்கள் உண்டானாலும், ஆடை முதலியவற்றில் தீ பிடித்துப் பாதி வெந்த நிலையில் ஒருவர் அவஸ்தைப்பட்டாலும் சிகிச்சைக்காகப் பக்கத்து நகரங்களுக்கோ அவற்றில் செல்லும் ரஸ்தாக்களுக்கோ, அவரைக் கட்டிலில் போட்டே நான்கு பேர் தூக்கிக்கொண்டு வரவேண்டிய நிலையில் இருக்கின்றன, கிராமங்கள்.

வைத்திய வசதியோ கிஞ்சித்தும் கிடையாது. தப்பித்தவறி, எங்கோ ஒரு கிராமத்தில் ஆஸ்பத்திரி இருந்தாலும் போதுமான மருந்து வசதி இராது. வண்டி, பாதை வசதியற்ற கிராமங்களுக்கு, இந்த ஆஸ்பத்திரியின் டாக்டர்களைச் சாதாரணமாக அவசரத்துக்கு அழைத்துப்போக முடியாது; கை நிறைய பணம் இருந்தால் கொஞ்சம் முயற்சிக்கலாம். சாதாரண வைத்தியத்துக்கு, தன்னுடைய அன்றாட வயிற்றுப் பிழைப்பை மறந்துவிட்டு, மைல் கணக்காக நடந்து வந்து மருந்து வாங்கிப் போவதற்குள்

,கடவுள் நம்மை வைத்தியரிடமிருந்து காப்பாராக' என்றே ஆகிவிடும். பெண் டாக்டரோ, மருத்துவச்சியோ எங்கும் இல்லை. மலேரியா சில கிராமங்களில் பரவி நிற்கும்; ஒரு கிராமத்தில் யானைக் கால் வியாதி அதிகமாகத் தெரியும்; இன்னென்றில் குஷ்டரோகிகள் அதிகமாகத் தென்படுவார்கள். இவர்களைக் கவனிப்பதற்கு வைத்தியர்கள் இல்லை. வியாதிகளைத் தடுப்பதற்கான முறைகளை யாரும் அறியார்.

சுத்தமான குடி தண்ணீர் எல்லாக் கிராமங்களிலும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. சுகாதார வசதிகள் கிடையா. வாருகால்கள் கட்டப்படாததால் தெருவெல்லாம் சாக்கடை. கக்கூஸ் வசதிகளோ, மறைவோ கிடையாது. கிராமங்களைச் சுற்றி மலஜல விசர்ஜனம் செய்யப்பட்டிருக்கும். இருட்டில் மண்ணெண்ணெய் விளக்கும் இராது. இவ்வசதிகளையெல்லாம் செய்யவென்றல் கிராமப் பஞ்சாயத்து போர்டுகளுக்குப் போதுமான வருமானம் கிடையாது; அதிகாரமும் இல்லை.

விவசாயத்திற்கான வசதி ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா என்றல் அதுவும் மிக மிகச் சொற்பம். கிராமவாசி வானத்தைப் பார்த்து, தன் நிலத்தைப் பார்த்து, உழைத்து கடவுள் கிருபையால் வயிற்றைக் கழுவுகிறன்.

ஒரு முனிசிபாலிடி தன்னுடைய தேவைகளுக்குத் தானே வரி வசூலித்துக் கொள்கிறது. அவ்வரியிலிருந்து மாகாண சர்க்காருக்கு ஏதும் கொடுப்பதில்லை. ஆனல் அதன் அபிவிருத்திக்கான எல்லா விதத் திட்டங்களுக்கும் சர்க்கார் மான்யம் கொடுத்து உதவுகிறது. நகரில் நல்ல தார், சிமிண்டு ரஸ்தாக்கள் போடுவதற்காகட்டும், மின்சாரம், குடி தண்ணீர், பூமியின் கீழ் கட்டப்படும் சாக்கடை முதலியவற்றைப்பற்றிய திட்டங்களுக்காகட்டும், எல்லாவற்றிற்கும் செலவில் பாதியை இலவசமாகக் கொடுத்துதவுகிறது. கோடி கோடியாகப் பல நகரங்களுக்கும் கொடுத்துதவப்பட்டிருக்கும் இந்தப் பணம் முழுவதும் கிராமத்தாரின் வரிப்பணமேயாகும். இப்படி அள்ளிக்கொடுத்தும் கூட கிராம மாட்டு வண்டி பொன்று நகருக்குள் நுழைந்தால், முனிசிபல் பாதையில் ஓட்டி ரஸ்தாவைத் தேய்ப்பதற்குப் பிரதியாக வரி கட்டவேண்டியிருக்கிறது. நகரிலுள்ள முனிசிபல் பள்ளிக்கூடங்களுக்கு வருஷா வருஷம் மான்யம் தருவது போக, தனிப்பட்ட ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளுக்கும், உபாத்தியாயர் சம்பள மான்யம், பள்ளிக்கூடக் கட்டிட மான்யம், தளவாட மான்யம் என்று பல வகைகளில் நிறையச் செலவிடுகிருர்கள், சர்க்கார்.

நகரத்தில் பெரிய ஆஸ்பத்திரிகளுண்டு. விஸ்தீரணத்திற்குத் தக்கபடி ஆஸ்பத்திரியும் பெரிதாகிக் கொள்கிறது. டாக்டர்கள், மருத்துவச்சிகள் எல்லோரும் நிறைய இருக்கின்றனர். மருந்து வசதியும் பூரணமாக உண்டு. இவ்வைத்தியசாலைகளின் கட்டிடம், மருந்து, தளவாடம், சம்பளம், சகலமும் சர்க்காரே கொடுத்து உதவுகின்றது. நகரிலுள்ள சுகாதார அதிகாரிகளின் சம்பளத்தில் பெரும்பகுதியைச் சர்க்காரே கொடுக்கிருர்கள். கிராமங்களிலிருந்து இந்த ஆஸ்பத்திரிகளுக்கு வியாதியஸ்தர்களை அழைத்து வருவதிலும், உள்ளே செல்ல அனுமதி பெறுவதிலும், உணவு, குடியிருப்பு வசதிகள் செய்வதிலும் கிராமத்தார்கள் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது? எவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது? அவர்களது வரிப்பணத்திலிருந்து, அவர்களுக்குப் பிரயோஜனப்படாத வகையில், நகரங்களின் நன்மையையே கருதி சர்க்கார் செலவழிப்

பது எவ்வளவு பெரிய மோசடி. பணக்காரர்கள் நிறைந்த நகரத்தார்களே, தங்கள் நன்மைக்கான இந்த செலவுகளை ஏற்றுக்கொள்வது நியாயம்.

சமூகத்திற்காகவும் சர்க்காருக்காகவும் சேவை செய்யக்கூடிய நிபுணர்களையும், டாக்டர்கள், வக்கீல்கள், இஞ்ஜினீயர்கள், பட்டாதாரிகள் ஆகிய பலரையும் உற்பத்தி செய்ய, எவ்வளவு பணம் செலவழித்து சர்வ கலாசாலைகளை ஏற்படுத்தியுள்ளது சர்க்கார்! அதிகாரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் எவ்வளவு சம்பளம் வாரியிறைக்கிறது! அவர்கள் தங்குவதற்காகவும், அவர்களது உத்தியோகசாலைகளுக்காகவும் எவ்வளவு பணத்தைச் செலவு செய்து நகரங்களில் கட்டிடங்களைக் கட்டியுள்ளது. இவர்களைக்கொண்டு சர்க்கார் யந்திரம் நடக்கின்றது. வேலை அதிகமாக அதிகமாக, 'அனுமார் வால் வளர்ந்த கதை'யாகச் செலவும், சிப்பந்திகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றனர். இதனால் கிராமவாசி என்ன பலன் அடைந்தான்? கிராமத்திற்கு இந்தப் பெரிய அதிகாரிகளோ, அவர்களின் தளவாடங்களோ வருவதில்லை. அவர்கள் அதிகாரம் வகிக்கும் எஜமானர்களாக விளங்குகிறார்கள்; அவர்களது உடையோ, நம்மிலிருந்து அவர்களை முற்றிலும் வேறுபடுத்திவிடுகிறது.

நகரங்களில், நல்ல தேர்ச்சி பெற்ற, எத்தனை டாக்டர்களும், வக்கீல்களும், இஞ்ஜினீயர்களும் உள்ளனர். அவர்கள் தங்களது படிப்பையும், அறிவையும் வியாபாரம் செய்து பொருள் சம்பாதிப்பதிலேயே ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணமே பிரதானமாயுள்ளது. ஆகவே அவர்கள் ஏழைகளுக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் என்றைக்காவது தங்கள் கிராமங்களுக்கு விஜயம் செய்து, தங்கள் நன்மைக்கான யோசனைகளைச் சொல்வார்களென்று கிராமவாசிகள் எதிர்பார்த்தார்கள்; ஆனால், அவர்கள் ஏன் அந்தச் சுகாதார வசதியற்ற பட்டிக்காட்டுக்கு அனாவசியமாகப் போகிறார்கள்?

நகரங்களிலுள்ள படித்தவர்களும் பணக்காரர்களும், தாங்கள் கிராமங்களில் சுரண்டிச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, கிராம மூலப் பொருள்களைக் கொண்டு பலவிதப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகிறார்கள். அதன் மூலம் கிராமத்தார்களுக்கு மேலும் பாதகமே ஏற்படுகின்றது. வேலையில்லாமல் கிராமங்களில் கஷ்டப்படும் ஏழை மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் செய்யக்கூடிய தங்களுக்குத் தேவையான பொருள்களை, நகரத்தார் பெரும் தொழிற்சாலைகளில் செய்து, கிராமங்களில் திணிப்பதன் மூலம் கிராமப் பொருளாதார வாழ்வைப் பாழ்படுத்தி, ஏழையை இன்னும் பரமதரித்திரனாக்குகிறார்கள். இந்தத் தொழில்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதன் மூலம், சர்க்கார் கிராமவாசிகளுக்குப் பெரும் தீங்கிழைக்கிறார்கள்.

பழைய சர்க்கார் யந்திரம் நகர அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த தருணத்தில், இந்தியாவின் கிராமங்களை எண்ணி அவற்றிற்கான திட்டங்களை உருவாக்கினார் மகாத்மா காந்தி. அவர், சேவாகிராமத்திலேயே தங்கி, கிராமத்தின் தேவைகளை நன்கு பரிசீலித்திருக்கிறார். தாழ்த்தி ஒதுக்கி வைக்கப்பட்ட 34 கோடி மக்களின் தேவைகளை நன்கு உணர்ந்திருக்கிறார். அவரே கிராமங்களின் ஆத்மா. அவரது திட்டங்களே கிராம இந்தியாவுக்கு நன்மையும் சுதந்திரமும் அளிப்பவை. அவருடைய திட்டங்களை எள்ளி நகையா

டியவர்கள் பல தடவை ஏமாற்றமடைந்துள்ளார்கள். அவரதுவார்த்தை கிராம மக்களால் மதிக்கப்படுகிறது என்றால், அவர் அவர்களுடைய ஹிருதயத்தை நன்கு அறிந்திருக்கிறார் என்றே அர்த்தம்.

பழைய, துருப்பிடித்த ஆங்கில ஆட்சி ஒழிந்து பொதுஜன சர்க்கார் நமது மாகாணத்தில் ஏற்பட்டிருக்கிறது. அது, தங்களுக்கு ஏதாவது உருப்படியான நன்மைகளைச் செய்யமாட்டாதா என்று கிராமங்கள் எதிர்பார்க்கின்றன; சர்க்கார் கிராம அபிவிருத்தித் திட்டம், கதர்த் திட்டம், புதிய மில் தடைத் திட்டம் முதலியவைகளை வரவேற்கின்றன. படிப்படியாக, கிராமங்களுக்கு பூரணமான பொருளாதார சுதந்திரம் ஏற்பட வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்.

கிராமங்களுக்கான தொழில்கள் யாவை? நகரங்களுக்கான தொழில்கள் யாவை? என்று தெளிவாகப் பிரித்து, ஒன்றையொன்று பாதிக்காமலும், சுரண்டாமலும் சர்க்கார் தடுக்கவேண்டும். துணி உற்பத்தியைக் கிராமங்களின் கையில் ஒப்படைக்க வேண்டும். கிராமக் கைத்தொழில்களுக்குப் பரிபூரண பாதுகாப்பளிக்க வேண்டும். கிராமப் பண்பாட்டுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற அடிப்படைக் கல்வி நிலையங்களை கிராமந்தோறும் ஏற்படுத்த வேண்டும். அதற்கான ஆசிரியர் பயிற்சி வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். கிராம வரிப் பணத்தை நகரங்களின் அபிவிருத்திக்காகச் செலவழிப்பதைக் கட்டோடு நிறுத்த வேண்டும். நகரத்திற்கான செலவை நகரவாசிகளே ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். மதுவிலக்கு எங்கும் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

ரஸ்தாக்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றை அமைப்பதில் சர்க்கார் தங்கள் மனோபாவத்தை மாற்றி, கிராமங்கள் இருக்கும் திசையில் திருப்ப வேண்டும். விவசாயத் திட்டங்கள் கிராமப் பொதுவுடைமை என்ற அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதற்கான சட்ட திட்டங்களை இயற்றவேண்டும். வியாபாரம் கூட்டுறவு முறையிலேயே நடைபெற வேண்டும். தனிப்பட்டோர் சுரண்டலைத் தடுக்க வேண்டும். கிராமவாசிகளுக்குச் சர்க்காரின் மேல் நல்லெண்ணம் உண்டாகும் முறையில், மந்திரிகளும் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடன் தொடர்பேற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இது காலைபரியந்தம் ராமன் ஆண்டாலென்ன லக்ஷ்மணனுண்டாலென்ன என்றிருந்த நிலைமையை கிராம மக்கள் உதறியெறிந்து, தங்கள் உரிமைக்காகப் போராடவேண்டும். சகல சாதனங்களும் பொருந்திய நகரவாசிகள், சர்க்காரைத் தங்கள் போக்கிலேயே சிந்திக்கச் செய்ய சகல முயற்சிகளையும் கையாளுவார்கள். இதற்கெல்லாம் அசையாது, மக்களின் பெரும்பாலோரான கிராம வாசிகளின் பிரதிநிதிகளே தாங்கள் என்பதைத் தற்போதுள்ள காங்கிரஸ் சர்க்கார் தங்கள் தைரியமான செய்கைகளின் மூலமாக நிரூபிக்க முன்வருவார்களா?

# ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்

அ. இராமசாமி பி. ஏ.
(உதவி ஆசிரியர், "தந்தி")

முதல்தர வல்லரசுகளில் முதன்மையாக இருக்கும் பாக்கியம் இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் பிரிட்டனுக்கு இல்லாமல் போய்விட்டது. ஆகவே, தனது நண்பர்களும், ராஜதந்திரத்தில் தன்னை எதிர்பார்ப்பவர்களும் பலமுடன் இருந்தால்தான் நலமென்று பிரிட்டன் கருதுகிறது. இப்படிப்பட்ட நாடுகளில் முதலாவது அமெரிக்கா; இரண்டாவது ஐரோப்பாவிலிருக்கும் 'குட்டி' நாடுகள். அமெரிக்கா இரண்டாவது யுத்தத்தால் பாதிக்கப்படவில்லை. ஆனால் ஐரோப்பாவிலுள்ள சிறு நாடுகளோ, அதில் சின்னா பின்னமாகி விட்டன.

"நான் உலகத்தில் ஒரே பெரிய காரியத்தைச் சாதிப்பதற்காகத்தான் பிறந்திருக்கிறேன். அமெரிக்க-இங்கிலாந்து கூட்டுறவை ஏற்படுத்தவே நான் ஜன்மமெடுத்திருக்கிறேன். அமெரிக்காவும் இங்கிலாந்தும் கூட்டாகச்சேர்ந்து,மூன்றுவது உலக யுத்தத்தை எதிர்பார்த்து, தங்கள் ராணுவத்தையும் பாதுகாப்பையும் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்," என்று அமெரிக்காவிற்குச் சென்ற சர்ச்சில், புல்டனில் முழங்கினர். அவர், அமெரிக்காவின் பல இடங்களிலும் செய்த பிரசங்கங்களில், அப்பொழுது ஆரம்பிக்கப் படாமலிருந்த பாரிஸ் சமாதான மகாநாட்டிற்கே முட்டுக்கட்டையாக முடியக் கூடிய பிரச்னைகளை எடுத்துச் சொன்னர். சிறந்த ராஜதந்திரி, யுத்த காலத்தில் அந்தப் பிரச்னைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்ற காரணங்களால் அவர் கூறியவையெல்லாம் உண்மையாக முடிந்தன. இவைகளில் முக்கியமானது டார்டனல்ஸ் பிரச்னை. அதே சர்ச்சில், ஐரோப்பிய ஐக்கிய நாடுகளை ஸ்தாபிக்கவேண்டும் என்று தற்போது முழங்கிக்கொண்டிருக்கிருர். அவர் முழக்கத்திற்கும் காரணங்களில்லாமற் போகவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் ரஷ்யாவின் பலம் மிகவும் அதிகரித்துவிட்டது. ஒரு தீவிரமான யுத்தத்தில் பிரமாத பங்கெடுத்து நடத்தியதால் அதற்குக் கிடைத்த அனுபவம் அனந்தம். மேலும், ரஷ்யா நூற்றுக்கணக்கான படைகளை ஐரோப்பிய நாடுகளில் ஆங்காங்கு வைத்திருக்கிறது. ஏதாவதொரு காலத்தில் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்குமோ, ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமோ யுத்தம் ஏற்பட்டுத்தான் தீரும். பிரிட்டனின் ஏகாதிபத்திய மனப்பான்மை ரஷ்யாவுக்குப் பிடிக்காது; அமெரிக்காவின் முதலாளித்துவக் கொள்கையும் அதற்கு ஒத்துக்கொள்ளாது என்று சர்ச்சில் எண்ணுவதில் உண்மையிருக்கிறது. அமெரிக்காவின்மீது ரஷ்யா ஆக்கிரமிப்பதென்றல், அது இலகுவல்ல. இடையில், சீனு ஜப்பான் போன்ற விஸ்தாரமான பலம் பொருந்திய நாடுகள் இருக்கின்றன. மேலும், அமெரிக்காவும் சரியான ஆள், பொருள், இடபலம் பொருந்திய நாடாகவிருக்கிறது. ஆகவே, பிரிட்டனைப் பற்றிதான் சர்ச்சிலுக்குக் கவலை.

எனவே, யுத்தம் ஒருவேளை ஏற்பட்டுவிட்டாலும், பிரிட்டனை ரஷ்யா மோதிவிடாது ஒரு தடையேற்படுத்தவேண்டும். வெள்ளம் வருமுன் அணைபோடுவதே புத்திசாலிகள் கடமை. இதற்காக

ஐரோப்பிய நாடுகளைப் பலப்படுத்த வேண்டும். ஐரோப்பா ஒரு பெருங் கண்டம். அதை ஐக்கியப்படுத்திவிட்டால், இன்னம் சில வருஷங்களில் அது பூரண பலம் பொருந்திய நாடாகிவிடும். மேலும், ஐரோப்பாவின் நாகரிகம் பிரிட்டிஷ் நாகரிகத்தின் சகோதரன். அது எவ்வளவுதான் ரஷ்யாவை அடுத்திருந்த போதிலும், பலத்தைக்கண்டு பயந்தாலொழிய, ரஷ்யாவுடன் கொள்கைக்காக நட்புக்கொள்ளப் போவதில்லை. ஆதலால், ஐரோப்பாவின் பலம் பிரிட்டனுடைய பலம்தான். இதற்காகவே ஐரோப்பிய ஐக்கிய நாடுகளை ஏற்படுத்துவதில் சர்ச்சில் தீவிரமாகவிருக்கிறுர்.

ஆனுல், முக்கியமாகக் கருதவேண்டிய இரு பிரச்னைகள் இதில் இருக்கின்றன. ஒன்று, ஐரோப்பிய ஐக்கிய நாடுகளை ஏற்படுத்த முடியுமா என்பது. இரண்டாவது, அப்படி ஏற்பட்டாலும் அது பிரிட்டனுக்கு உபயோகமாக இருக்குமாவென்பது.

ஐரோப்பிய நாடுகளை ஐக்கிய நாடுகளாக இணைப்பதில் சர்ச்சிலுக்கு ஒரு முக்கியமான உதாரணம் கிடைத்திருக்கிறது. மாபெருங் கண்டமாகிய வட அமெரிக்காவை ஐக்கிய நாடுகளாக இணைத்துவிட்டார்களல்லவா? அதுதான். அமெரிக்க ஐக்கிய நாடுகளை ஏற்படுத்தின மாதிரி ஐரோப்பிய ஐக்கிய நாடுகளையும் ஏற்படுத்தி விடலாமென்பது சர்ச்சிலின் எண்ணம். ஆனுல் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பல வித்தியாசங்கள் உண்டு.

ஐரோப்பாவில், பல நாடுகளிலும் வசிப்பவர்கள் எல்லோரும் ஒரே நிறத்தவர்களென்பது தவிர, அவர்களுடைய நாகரிகம் பலவகைப்பட்டது. சில நாடுகளின் நாகரிகங்கள் ஒன்றுக்கொன்று முரணுகவும் இருக்கின்றன. மேலும் இவ்வளவு காலம்வரை அந்நாடுகள் ஒருவித மத்தியக் கட்டுப்பாடும் இன்றி தனித் தனியாக சுதந்திரத்தை அனுபவித்து வந்திருக்கின்றன. அவைகளை ஐக்கிய நாடுகளாக இணைப்பதென்னவோ பிரம்மப் பிரயத்தனந்தான். பகீரதன் கங்கையைப் பூவுலகிற்குக் கொண்டுவந்த அவ்வளவு பிரயத்தனத்தால் ஒருவேளை இது சாத்தியமாகலாம். நேசதேச சபையில் கிரேக்க, யுகோஸ்லேவிய நாடுகளின் எல்லைப்புறப் பிரச்னைகளைப்பற்றி நடைபெறும் விவாதங்களைக் கவனிப்பவர்களுக்கு இது நன்ருகத் தெரியும். இப்படி அமைக்கப்படும் ஐரோப்பிய ஐக்கிய நாடுகளில் ஜெர்மனி சேர்க்கப்படுமா? அப்படிச் சேர்க்கப்பட்டால், அதன் அந்தஸ்து என்ன? என்ற பிரச்னைகளும் முக்கியமாக ஆலோசிக்கப்படவேண்டியவை. இப்படி அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகளில் ஹாலந்தும் பிரான்சும் (தற்பொழுது இந்த இரு நாடுகள்தான் மற்ற ஐரோப்பிய சிறு நாடுகளைக் காட்டிலும் பலமுள்ளவைகளாக இருக்கின்றன) ஆதிக்கம் செலுத்தச் சந்தர்ப்பமிருக்கும் என்பதும் சிந்திக்கவேண்டிய விஷயமாகும். ஆனுல்......

சர்ச்சில் எணணுவதுபோல் கூடாத காரியம் கூடிவிட்டால்? ஐரோப்பிய ஐக்கிய நாடுகளே ஏற்பட்டுவிட்டால்? அதனுல் பிரிட்டனுக்கோ, மற்ற நாடுகளுக்கோ குறிப்பாக நன்மையே ஏற்படுமென்றும் சொல்ல முடியாது. முதலாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் ஜெர்மனிக்குப் பிரிட்டனும், ஜப்பானுக்கு அமெரிக்காவும் ஆதரவளித்து அவைகளின் பலத்தை வளர்த்து, ரஷ்யாவின் பலத்தைக் கட்டுப்படுத்த நினைத்ததால் ஏற்பட்ட விளைவு என்ன? மகா பயங்கரமான இரண்டாவது மகாயுத்தந்தான். ஆகவே, ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளும் இரண்டாவது உலக யுத்தத்தால்

நசுக்கப்பட்ட நாடுகளுமான ஐரோப்பிய சிறு நாடுகளில் பிறக்கும் லட்சிய புருஷர்களின் ரத்தம் கொதித்து அதனுல் மற்ருெரு வெடிவெடித்தால் உலகத்தை அது எவ்வளவு பாதிக்கும்? அதுவும் ஐரோப்பிய நாடுகள் பலம் பெற்றபின் மறுபடியும் அந்த நாடுகளாலேயே யுத்த மேற்பட்டால், அது பிரிட்டனை அப்படியே நிழலில் கொண்டுபோய் மறைத்து விடுமல்லவா?

ஆனுல், இவைகளெல்லாம் எப்படியானுலும் சரி, சர்ச்சிலுக்கு இரண்டு ஆறுதல்கள் இருக்கின்றன. ஒன்று அணுகுண்டு. அணுகுண்டைக் காட்டிலும் பலம் பொருந்திய ஆயுதம் கண்டுபிடிக்கப்படும் வரை, அதை வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட உலக யுத்தத்திலும் வெற்றிமாலை சூடிவிடலாமென்பது அவருடைய கருத்து. இரண்டாவது பிரிட்டனின் ஏகாதிபத்தியக் கொள்கை. இது தான் சர்ச்சிலின் லட்சியத்தில் முக்கியமானது. துரதிருஷ்ட வசமாக, பிரிட்டன் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போனுலும் சரி, அதன் ஏகாதிபத்தியக் கொள்கைகளைத்தான் ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடிக்கும். ஆகவே, எப்படியாகிலும் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு மற்ருெரு பலமுள்ள ஆதரவு கிடைத்தால் போதும். சர்ச்சிலின் கனவே வெற்றியடைந்த மாதிரிதான்.

---

## ஏது முதலில்?

### ஆசார்ய கிருபலானி

பூரண அரசியல் அதிகாரம் நம் கையிலிருந்தால்தான், நாம் சமதர்மத்தை நிலைநாட்ட முடியும். லெனின், ஸ்டாலின் ஆகியோர் கையில் அரசியலதிகாரம் இல்லாவிடில், அவர்கள், தங்கள் ஐந்து வருடத் திட்டங்களைப் புகுத்தியிருக்க முடியாது. அரசியல் அதிகாரம் இல்லாவிடில், சமதர்மம், பொது உடைமை என்ற கொள்கைகளெல்லாம் கேவலம் பிரசார அளவில்தான் நிற்கும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பாக இதைப்பற்றி மிதமிஞ்சிப் பேசுவதால், நம்மிடையே அனுவசியமான சர்ச்சைகளும் பிளவுகளும் ஏற்பட்டு, அதனுல் சுதந்திரப் போராட்டமே பலவீனமடையும். சமதர்மம் முதலியவை பற்றிப் பேசினுல்தான், தீவிரவாதியாக முடியும் என்ற போலிக் கொள்கை இன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனுல், இந்தக் கொள்கையால் அன்னியனை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டம் பலமடைவதில்லை. மாட்டுக்குமுன் வண்டியைப் பூட்டும் கதையையே இது ஒக்கும்; எது பிரதானமோ, அதைப் பிரதானமாக மதிப்பதே அரசியல் நீதியும் விவேகமும் ஆகும்.

(நவயுகப் பிரசுராலயத்தாரால் வெளியிடப்பெற்ற 'இந்திய தேசீயக் காங்கிரஸ்' என்ற புத்தகத்திலிருந்து)

---

# சென்னை சர்க்காரின் கதர்த் திட்டமும் காதி வித்தியாலயமும்

நா. ராமசாமி
(காரியதரிசி, அகிலபாரத சர்க்கா சங்கம், தமிழ்நாடு)

சென்னை சர்க்கார் ஆரம்பிக்கும் கிராமப் புனருத்தாரண வேலைத்திட்டத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதலாவது பொதுவான அபிவிருத்தித் திட்டம். இதற்காக 27 பிர்க்காக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேலைக்காக மாகாண அபிவிருத்திக் கமிஷனர் இருக்கிறார். அவருடன் உதவி அபிவிருத்திக் கமிஷனர்களையும், ஒவ்வொரு பிர்க்காவுக்கு வேண்டிய மற்ற ஆபீஸர்களையும் சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிர்க்காவிற்கும் பொது அபிவிருத்தி ஆபீஸர் ஒருவரையும் தனியாக நியமித்திருக்கிறார்கள். பொதுவாக குடிசைத் தொழிலும், குறிப்பாக கதர் வேலையும் இவர்கள் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஸ்திரண பிர்க்கா அபிவிருத்தி வேலை, சர்க்காரால் தங்கள் உத்தியோகஸ்தரைக்கொண்டு தங்கள் பொறுப்பில் நடத்தப்படும். இதற்கு சர்க்கா சங்கத்தின் சம்பந்தமும், பொறுப்பும் இல்லை.

இரண்டாவதாக, தீவிர கதர் சுயதேவைத் திட்டம். இந்தத்திட்டம்சர்க்கா சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டு, மகாத்மா காந்தியின் சம்மதம் பெற்று, சர்க்கார் தங்கள் திட்டமாக] வேலைசெய்ய முன் வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கும் முதலில் மந்திரி சபை அச்சிட்டு வெளியிட்ட திட்டத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. பழைய திட்டத்தை முழுவதும் ரத்து செய்து, புதிய திட்டம் சர்க்கா சங்கத்தின் பூரண ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டதாகும். முதல் திட்டத்தை மாற்றி இதை தயாரித்ததின் அவசியத்தைப்பற்றியும், பல காரணங்களைப்பற்றியும் இங்கு கூறுவது அவசியமில்லை.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் நன்ருய் அபிவிருத்தி அடைந்த உற்பத்திக் கிளைகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு, சர்க்கா சங்கக்காரியதரிசியின் ஆலோசனையுடனும் மேற்பார்வையுடனும், தீவிர கதர் சுயதேவைத் திட்டத்தை நடத்த வேண்டும் என்பது சர்க்கார் கதர்த் திட்டத்தில் முக்கிய பாகம். தமிழ்நாட்டில் மூன்று ஸ்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கோவை ஜில்லா (1) வெள்ளக்கோவில் (2) அவனுசி கிளைகளும், சேலம் ஜில்லாவில் புளியங்குறிச்சி கிளையும் ஆகும். இந்த மூன்று கிளைகளையும் நடத்த, தொண்டர்களை சர்க்கா சங்கம் சர்க்காருக்குக் கொடுத்து உதவவேண்டும். சர்க்காரின் கதர் வேலையென்ற காரணத்தால் விசேஷ சம்பளம் ஒன்றும் கிடையாது. சர்க்கா சங்கத்தில் எவ்வளவு சொல்ப சம்பளம் பெற்றுர்களோ, அதே சம்பளத்துடன் சர்க்காரின்கீழ் சங்கத் தொண்டர்கள் வேலை செய்து வருவார்கள். சங்கத்தின் குறைந்த சம்பள அளவே கொடுப்பதாலும் சம்பளம் இல்லாததாலும், சர்க்காரின் இதர இலாகாக்களுக்கு விண்ணப்பம் வருவதுபோல தீவிர கதர் 'செண்டர்' களுக்கு வராதது ஆச்சரியமில்லை. சர்க்கார் பெயரால் செய்யப்படும் கதர் வேலைக்கு அதிகச் சம்பளம் கொடுக்கக்கூடாது என்பது மகாத்மாவின் எண்ணம். வரி கொடுப்போரின் பணத்தி

லிருந்து கதரின் பெயரால் அதிக சம்பளம் கொடுப்பதை மகாத்மா விரும்பவில்லை. மேலே சொன்ன மூன்று ஸ்தலங்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டு வேலை நடத்த ஆரம்பித்து இப்பொழுது சில வாரங்கள்கூட ஆகவில்லை. அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாகாண காரியதரிசி, தீவிர கதர்த்திட்டம் நடைபெறும் இடங்களுக்கு சர்க்காரின் கௌரவ (சம்பளமில்லாமல்) உத்தியோகஸ்தராக (Regional Khadi Officer) வேலை செய்வார். இந்தத் திட்டத்தைப்பற்றி பின்னர் ஒருமுறை விவரமாக எழுதுவது அவசியமாகும்.

தீவிர சுயதேவைக் கதர்த் திட்டத்தின் இரண்டாவது பாகம் போதுமான கதர் தொண்டர்களைப் பயிற்சிசெய்வது. இந்தப் பொறுப்பு அகில பாரத சர்க்கா சங்கத்தைச் சேர்ந்தது. இதற்காகத் தமிழ்நாட்டில் நான்கு காதி பயிற்சி வித்தியாலயங்கள் நடத்தவேண்டும். ஒவ்வொரு வித்தியாலயத்திலும் வருஷத்திற்கு மூன்று வகுப்புகள் நடத்தப்படும். ஒவ்வொரு வகுப்பும் மூன்று மாதங்களுக்கு நடக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் இருப்பார்கள். இம்மாதிரி வருஷத்தில் 480 கதர் தொண்டர்கள் தயார் செய்யப்படுவர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த மாணவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 30 உபகாரச் சம்பளமும் பிரயாணச் செலவும் சர்க்காரால் கொடுக்கப்படும்.

வித்தியாலயங்களை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தகுந்த ஆசிரியர்கள், இடவசதிகள் முதலியவை கிடைத்தவுடன் ஒவ்வொரு 3 ஜில்லாக்களுக்கும் ஒரு மத்திய ஸ்தலத்தில் வித்தியாலயம் ஆரம்பிக்கப்படும். இந்தத்திட்டம் திடீரென்று தயாரிக்கப்பட்டதால், உடனே வித்தியாலயங்கள் ஆரம்பிக்க போதிய ஆசிரியர்களும் மற்ற வசதிகளும் கிடைக்கவில்லை.

முதலில், சிதம்பரத்தில் 1947 பிப்ரவரி மாதத்தில் ஒரு வித்தியாலயம் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்பு பிப்ரவரி மாதம் ஆரம்பித்து மே மாதம் முடியும். இரண்டாவது வகுப்பு அனேகமாக ஜூன் மாதம் ஆரம்பித்து செப்டம்பர் மாதத்தில் முடிவடையும். அதே போல் மற்ற வகுப்புகள் பின்னால் நடைபெறும்.

இரண்டாவது வித்தியாலயம் மதுரை ஜில்லாவில் கல்லுப்பட்டி பிர்க்காவைச் சேர்ந்த பேரையூர் என்ற கிராமத்தில் அனேகமாக மார்ச்சு மாதம் ஆரம்பிக்கப்படும். ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் ஒருமுறை புதிய வகுப்புகள் நடைபெறும்.

மூன்றாவது வித்தியாலயம் திருச்செங்கோடு அல்லது சின்ன சேலத்தில் ஆரம்பிக்கப்படலாம். நான்காவது, திருநெல்வேலி ஜில்லாவில் சேர்மாதேவி, அல்லது பக்கத்தில் சௌகரியமுள்ள இடத்தில் ஆரம்பிக்கப்படும். இந்த இரண்டு பள்ளிக்கூடங்களும் 1947 ஜூலை மாதத்தில்தான் ஆரம்பமாகக்கூடும்.

மாகாண ஜவுளி கமிஷனரின் விளம்பரத்தின் பேரில் தமிழ்நாட்டு வித்தியாலயத்திற்காக சுமார் 1500 விண்ணப்பங்கள் வந்தன. அவைகளில் 200 ஸ்திரீகளின் விண்ணப்பங்கள் இருந்தன. சிதம்பரம் வித்தியாலயத்திற்கும் பேரையூர் வித்யாலயத்திற்கும் முதல் இரண்டு வகுப்புகளுக்குமாக சுமார் 130 நபர்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களில் 20 ஸ்திரீகள். ஷை இரண்டு வித்தியாலயங்களின் முதல் இரண்டு வகுப்புகளுக்கும் 80 மாணவர்களை முடிவாகத் தேர்ந்தெடுத்து மாகாண ஜவுளி கமிஷனரே

பத்திரிகை மூலமோ தனித்தபால் மூலமோ தெரிவிப்பார்.

பயிற்சி வகுப்பின் விவரம் முதலியவை தனியே வேறு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

மாணவர்களை கீழ்க்கண்ட வேலைகளுக்குத் தகுதியுள்ளவர்களாக்கும் நோக்கத்துடன், கூடுமானவரை, பயிற்சியின் வேலைக்கிரமங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

1. சர்க்கார் தீவிர கதர் சுயதேவை வட்டாரங்களில் வேலை செய்வது.

2. பொது அபிவிருத்தி பிர்க்காக்களில் கதர் வேலை செய்வது.

3. சர்க்கார், ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்களின் கீழ் கதர் 'செண்டர்கள்' ஆரம்பித்து வேலை நடத்துவது.

4. பள்ளிகளில் மாணவர்களுக்கும், வெளியில் வயது முதிர்ந்தவர்களுக்கும் நூற்றல் பஞ்சு அடித்தல் முதலியவை கற்றுக்கொடுப்பது.

5. சர்க்கா, கதர் முதலிய சாஸ்திரத்தில் விசேஷப்பயிற்சி, ஆராய்ச்சி முதலிய வேலைகளில் ஈடுபடுவது.

தேர்ந்தெடுக்கப்பட்டு ஷை பயிற்சிக்கு வரும் மாணவர்கள் தங்கள் ஆயுள் காலம் முழுவதும் மேலே சொன்ன வகையில் சேவைசெய்ய அர்ப்பணம் செய்து கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

---

# புது வழி

**மீ. விநாயகம்**

*அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம், மகன்வாடி, வர்தா*

[ஸ்ரீ விநோபா அவர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் அளவற்ற ஆர்வம் உடையவர். எனவே, தமிழ் நாட்டைச் சேர்ந்த எனக்கு அவரைச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பும் வசதியும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஒரு நாள் அவர் கதர் அபிவிருத்திக்குரிய வழிகளைப்பற்றி என்னுடன் பேசியதன் சாரத்தை இங்கு தருகின்றேன்.]

**நூ**ணி ஆலைகளும், முதலாளிகளும் பலவிதமான சலுகைகளுடன் ஆதரிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் கதர் வேர் ஊன்றுவது கடினமான காரியம்தான். கைத்தறிகள் தனியாகக் கவனிக்கப்படுமிடத்தே அவைகளை ஒரு கிராமக் கைத்தொழில் எனலாமே ஒழிய, அவைகள் ஆலை நூலை நெசவு செய்து வரும் பொழுது கிராமக் கைத்தொழில்கள் என்று சொல்ல முடியாது; ஆலைகளின் ஒரு அம்சம் என்றுதான் சொல்ல வேண்டும். இதுபோன்ற கைத்தறிகளினால் கதருக்கு இன்னல்களே விளைகின்றன. ஆலை நூலை ஆதாரமாகக் கொண்டு கைத்தறிகள் நிரந்தரமாக வேலை நடத்திவர முடியாது என்பது வெளிப்படை. ஆலை முதலாளிகளுக்குத் தேவையான இயந்திரத் தறிகள் கிடைத்ததும் அவர்கள் அவைகளைக் கொண்டே நெசவு செய்து கொள்வார்கள். இப்பொழுது சிலருக்கு அவ்வசதி இல்லாததால் தறிகாரர்களுக்கு ஆலை நூல் கிடைத்து வருகிறது. அப்படிக் கிடைக்கும் நூலும் மிகக் குறைவு. மாதத்தில் பத்துநாள் வேலைக்குப் போதிய நூல்தான் விநியோகிக்கப்படுகிறது. பாக்கி இருபது நாளைக்கு வேலை எதுவும் கிடையாது.

தறிகாரர்கள் இந்நிலைமையை பிரத்யக்ஷமாக அனுபவித்து வருகிறார்கள்

அப்படி இருந்தும் கதர்நூலே நெசவு செய்ய இவர்கள் முன் வருவதில்லை. அல்லது தங்கள் வேலைக்குப் போதிய அளவு கதர் நூலைத் தயாரித்துக் கொள்வது மில்லை. பல தறிகாரர்களின் சங்கங்களை யும், பற்பல கூட்டங்களையும், நீண்ட பிரசுரங்களையும் பற்றி பத்திரிகைகளில் காண்கிறோம். இவைகளி லொன்றிலாவது கதர் நூல் உற்பத்தியைப் பற்றியோ, அதற்கான ஏற்பாடுகளைப் பற்றியோ சிந்தித்ததாகத் தெரியவில்லை, இது ஏன்?

கதர்நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய ஸ்தாபனம் சர்க்கா சங்கம். இதன் பல கிளைகளினின்றும் வெளிவரும் அறிக்கைகளில் அடிக்கடி நாம் காணுவது என்ன? " ஆலை நூல் தறிகாரர்களுக்குக் கிடைத்து விட்டபடியால் அவர்கள் கதர் உற்பத்தியை நிறுத்தி விட்டுப் போய்விட்டார்கள்". இது எதைக் காட்டுகிறது? தற்பொழுது உற்பத்தியாகும் கதர் நூல் தறிகாரர்களுக்குப் பிடித்தமில்லை. ஆலை நூலை விட கதர் நூல் பலமடங்கு பலமற்றதாக இருக்கிறது. தறிகாரர்களுக்கு வேறு எந்த விதமான ஆலை நூலும் கிடைக்காத பக்ஷத்தில்—விதியை நொந்துகொண்டு—கதர் உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். இருபத்தைந்து வருஷகாலமாக நாம் போற்றி வளர்த்து வரும் கதர் நூல் இவ்வாறாயின், மேற்கொண்டு கதர் உற்பத்திக்கு எதுவும் வழியுண்டா? உண்டு. ஒரே வழிதான் உண்டு. அதாவது, இனி நாம் நூற்கும் நூல் ஆலை நூலை விட உறுதியாகி விடவேண்டும். இதற்கான ஒரே வழி முறுக்கு நூல். அதாவது, இரண்டு கதர் நூல்களை ஒன்றாக முறுக்கி விடவேண்டும். இதனால் நூல் மிக உறுதி பெறுகிறது; நெசவுக்கு எளிதாகி விடுகிறது. நெசவுகாரர்கள் இந்நூலை விரும்பி வந்து வாங்கி வேலை செய்கிறார்கள். ஒரு நாளில் சுமார் 25 கெஜம்வரையிலும் நெசவு செய்ய முடிகிறது. அறுவதில்லை. பாவு ஓடுவதில் போடவேண்டிய கஞ்சிப் பசையை இந்நூலுக்குக் குறைத்துக் கொள்ளலாம். பசை இல்லாமலும் கூட நெசவு செய்து விடலாம். இந்நூலை நெசவுசெய்யும் வேலையை நாம் எல்லோரும்கூட கற்றுக்கொண்டு, நெசவு செய்யவும் ஆரம்பித்து விடலாம். ஓரேமாதப் பயிற்சிக்குப் பிறகு யாவரும் நெசவாளிகளாகி விடலாம். இந்நூலைக் கொண்டு எவ்வளவு நீளம் வேண்டுமானாலும் பாவு ஓட்டிக்கொள்ளலாம். தற்போது கதர் 10 அல்லது 15 கெஜம் நீளம் தான் பாவு ஓட்ட முடிகிறது. எனவே, கதர் உற்பத்தியில் சிரத்தை கொண்டுள்ள நாம் யாவரும் சீக்கிரமே முறுக்கு நூல் தயாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். முறுக்குநூலினால் இன்னும் ஒரு முக்கிய நன்மையும் உண்டு. இத்துணி மிக உறுதியாக இருப்பதால்சீக்கிரம் கிழிவதில்லை. ஆகவே துணியில் நமக்கு ஏற்படும் செலவு குறைகிறது. இதனால் குறைந்த அளவு கதர் உற்பத்தியின் மூலம் அதிகமான ஜனங்களுக்கு உடை உதவ முடியும். மில்களில் தயாராகும் அவ்வளவு 'பேல்' கணக்கான துணிகளைக் கதர் உற்பத்தியாளர் எவ்வாறு ஈடு செய்ய முடியும் என்று முதலாளிகள் ஏளனம் செய்கிறார்கள். இது அர்த்தமற்ற ஏளனமாகும். அவ்வளவு 'பேல்'களையும் கதர் மூலம் தயாரித்துத் தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை; முறுக்கு நூலினாலான உறுதியான கதர் நாம் மிகக் குறைவாக உற்பத்தி செய்தாலும் நம் நாட்டின் தேவைக்குப் போதுமானதாகும்.

நூலை முறுக்குவது கடினமானவேலை அல்ல. பிரமிக்கத் தேவையில்லை; இதற்காகத் தனியாக கருவிகள் எதுவும் வேண்டுமே என்று ஏங்கவும் இடமில்லை. சாதாரணமான ஒரு ராட்டையைக் கொண்

டே நூலை முறுக்கிக் கொள்ள முடியும். இராட்டையின் விசைச் சக்கரத்தையும் கதிரையும் பிணைக்கும் சிறிய மாலைக் கயிறைப் புரட்டி மாட்டிக் கொண்டு எதிரிடை முறுக்குள்ள ஒற்றை இழை நூல் நூற்கவும். இரண்டு கதிர்களை நூற்றுக் கொண்டு அவைகளின் நுனிகளை ஒன்று சேர்த்து மறுபடியும் இராட்டையில் கொடுத்து நேர் முறுக்கு ஏற்றி திரித்துக் கொள்ளவும். இரண்டு நூலை முறுக்கு கையில் சிறிய மாலைக் கயிற்றை நேராகப் போட்டுக் கொள்ளவும்.

நூல் நூற்கையிலேயே முறுக்கிக் கொள்ளக் கூடிய பல உபசாதனங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இவ்வாராய்ச்சிகளின் முடிவு தெரியும்வரை நாம் வீணே காத்திருக்கத் தேவையில்லை. இன்றே முறுக்கு நூல் தயாரிக்க முயலுங்கள்.

முறுக்கிய நூல் தடிமனாக இருக்குமேயொழிய, இதனாலான துணி கனமாக இராது. இப்பொழுதே சிலருக்கு கதர் என்றால் சாக்கு ஞாபகம் வருவதுண்டு. நூலை முறுக்கியதனாலான துணி கயிற்றுப் பாயைப் போலிருக்குமோ என்று பயப்படத் தேவையில்லை. 16 நம்பருள்ள நூல் இரண்டை முறுக்கினால் 8-ம் நம்பர் நூல் கிடைக்கும். சாதாரணமாக 8-ம் நம்பர் நூலுக்கும் இதற்கும் இடையேயுள்ள பல வித்தியாசம் மிக அதிகமானது. சுமார் 50 சிட்டம் ஒற்றை இழை நூலைக் கொண்டு 25 சிட்டம் முறுக்கு நூல் தயாராகிறது. 50 சிட்டம் ஒற்றை இழை நூலைக் கொண்டு 10 கஜம் துணி தயாராகக்கூடும். அதேபோல 25 சிட்டம் முறுக்கு நூலைக்கொண்டும் 10 கஜம் துணி தயாராகிவிடும். ஆகவே ஒற்றை இழை 10 கஜத்தின் எடையும் இரட்டை இழை 10 கஜத்தின் எடையும் சமம். துணி கனமாக இருக்காது; கொஞ்சம் தடிமனாக மட்டும் காணப்படும். நீண்ட நாள் உழைக்கக்கூடியது; துணிச் செலவைக் குறைக்கக்கூடியது. இதைப் போன்ற கதர் நாம் யாவரும் இனி தயாரிக்க முயலுவோம். இதுவே கதர் அபிவிருத்திக்கான ஒரே வழி.

---

## பொன்னடிகள் நோகாதா!

"சுரபி"

எண்பது பிராயத்தை எட்டுகின்ற காலத்தில்
புண்ணியனே நடக்கின்றாய் பொன்னடிகள் நோகாதா

ஒருநாளைக் கோரூரென் றோடி வருகின்றாய்
மறுநாளுன் மலரடிகள் மன்றாடி நிற்காதா

வீதிக்கு வீதிசென்று வீட்டுக்கு வீடேறிச்
சோதித்தால் சேவடிகள் துவண்டு தளராதா

முள்ளுறுத்தும் பூமியிலும் மூங்கிலிட்ட பாலத்தும்
தள்ளாடிச் சென்றாலுன் தளிரடிகள் நோகாதா

—ஆனந்த விகடனிலிருந்து.

# கிஸான் ராட்டு, பெட்டி ராட்டு நூற்பவர்களுக்கு

**நூல்** நூற்பதற்கு முக்கியமாக பட்டைப் பஞ்சு மிக சுத்தமாகவும் சரியான முறையில் பஞ்சு அடித்துப் பட்டை போடப்பட்டும் இருந்தால்தான் நூலின் தரமும் நூற்பு வேகமும் அதிகரிக்கும்; அடிக்கடி நூல் அறுந்து போகாமலிருக்கும்; அதிக நேரம் நூற்பதற்கு ஆசையுமுண்டாகும். எனவே, நூல் நூற்பவர்கள் அவரவர்களே பஞ்சை அடித்துப் படடை போட்டுக்கொள்வதுதான் சிறந்த முறையாகும்.

2. முதலில் பருத்தியைச் சிறிது நேரம் காய வைத்து எடுத்து, அதிலுள்ள செம்பாடு, பளுப்புப் பஞ்சு, சொத்தைப் பஞ்சு, சருகு முதலியவற்றைச் சுத்தமாக நீக்கிவிடவேண்டும். அதன் பிறகு கைமணையில் அரைக்க வேண்டும். அரைத்த பிறகும் அதிலுள்ள செம்பஞ்சு, நசுங்கிய கொட்டை, சருகு முதலியவற்றை நீக்கிவிட்டு, கைவில்லால் பஞ்சைப் பக்குவமாக அடித்துக்கொள்ள வேண்டும். பஞ்சு அடிக்கும் முறையைப்பற்றி சர்க்கா சங்க காதி வஸ்திராலயத்திற்குப் போய் கற்றுக்கொள்ளலாம்.

3. அவ்விதம் வெட்டி பட்டைபோட்ட பஞ்சை, உள்ளே காற்றுப் போகாமல் $\frac{1}{4}$ பவுண்டு சுருளாக காகிதம் போட்டுக் கட்டி வைத்துக்கொண்டு, அவ்வப்போது தேவையான பட்டைகளை எடுத்துக்கொண்டு, திரும்பவும் காற்றுப்போகாமல் கட்டி வைத்துக் கொள்ளவேண்டும். பட்டைப் பஞ்சுக்குள் காற்றுப் போனால் ஒவ்வொரு பட்டையும் உப்பிவிடும். உப்பிய பஞ்சு நூற்பதில் சிரமத்தைக் கொடுக்கும், நூல் ஒரே மாதிரியாகவும் நூற்க வராது.

4. நூல் நூற்க ஆரம்பிப்பதற்கு முன் ராட்டின் எல்லா பாகங்களையும் தூசி இல்லாமல் துடைத்து, சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். தூசியோடு நூற்க ஆரம்பித்தால் ராட்டின் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்து கெட்டுப்போகும்.

5. நூற்பதற்கு முன், கதிர் தாங்கிப் பலகைக்கு முன்னால் உள்ள கட்டையைத் திருப்பி அதற்குத் தாங்கலாக வைத்துக் கொள்ளவேண்டும். அவ்விதம் வைத்துக் கொள்ளுவதனால், நூற்கும்போது மால் கயிறு அறுந்து கதிர்ப்பலகை கீழே வேகமாக விழும்போது, கதிர் அடிபட்டு வளைந்து போகாமலிருக்கும். கதிரில் சிறிது கோட்டமிருந்தாலும் அடிக்கடி நூல் அறுந்து போகும். ஆகவே கதிரின் முனை வளைந்து போகாமல் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளவேண்டும். கதிரின் முனை கூர்மையாகவும் கோட்டமில்லாமலுமிருந்தால் நூற்பு வேகம் அதிகப்படும்.

6. கதிர்தாங்கிப் பலகையில் உள்ள சிறு துவாரங்களில் நரம்பு போட்டு அதன் பேரில் கதிரை நன்ருகப் படியவைத்து நூற்ருல் சரியான வேகத்தில் கதிர் சுழலும். நரம்பு இல்லாவிட்டால், நன்ருக முறுக்கேறிய சன்னக் கயிற்றைப் போட்டுக்கொள்ளலாம். நூற்கும்போது கதிர்ப் பலகையை முன்னும் பின்னும் சாயாமல் நேராக வைத்து நூற்கவேண்டும், கதிர் சரியானபடி நரம்பின்பேரில் சுழலுகிறது என்பதற்கு அறிகுறியாக நல்ல ரீங்கார சப்தத்தோடு சுழலும். அவ்விதமில்லாமல் கட கட வென்னும் சப்தமிருந்தால் சரியானபடி நூற்க வராது.

7. நூற்கத் தொடங்குமுன் மண்ணெண்ணெயும் தேங்காய் எண்ணெயும் கலந்து, கதிர் தாங்கிப் பலகையில் நரம்பு பேரில் இரண்டு இடங்களிலும் எண்ணெய் போட்டுக்கொள்ள வேண்டும். எண்ணெய் போடும்போது சிறிய மாலைக் கயிறு ஓடும் இரும்பு உருளையில் எண்ணெய் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் எண்ணெய் பட்டால் சரிவர கதிர் சுழலாது. பெரிய, சிறிய சக்கரங்களின் அச்சிலும் எண்ணெய் போட்டுக்கொள்ள வேண்டும்.

8. சிறிய சக்கரத்திற்கும் கதிருக்கும் மாலைக் கயிறு போடும்போது கதிர் வலது

புறமாகச் சுற்றும்படி மாலைக் கயிற்றைப் போட்டுக்கொள்ளவேண்டும். ஷெ சிறிய மாலைக்கயிறு சன்னமாகவும் நல்ல முறுக்குள்ள கயிருகவும் போடவேண்டும். ஷெ மாலைக்கயிறு தடிப்பாக இருந்தால் வேகம் குறையும். மாலைக்கயிறு முடியும்போது குழைவு முடிச்சு போடவேண்டும். வேறு முடிச்சு போட்டால், முடிச்சு பருமனுகும் போது, முடிச்சு போட்ட இடம் கதிரின் உருளைக்கு வரும்போது கடக், கடக் என்ற சப்தம் ஏற்படும். நூற்கும்போது அடிக்கடி நூல் அறுந்து போகும்.

9. பெரிய சக்கரத்தில் போகும் மாலைக் கயிற்றுக்குப் பதிலாக தோலினுல் செய்யப்பட்ட வார் போட்டுக்கொண்டால் நீண்ட காலம் உழைப்பதோடு நீளாது. நூல் கயிறு போடுவதால் நூற்க நூற்க ஷெ மாலைக்கயிறு முறுக்குடைந்து நீளுகிறது. பெரிய சக்கரத்திற்கும் சிறிய சக்கரத்திற்கும் 2 அங்குலம் இடைவெளி இருக்கும்படி தோல் வார் போட்டுக்கொள்ள வேண்டும்

10. நூலில் போதுமான முறுக்கு ஏறும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். நூலில் முறுக்கு அதிகமிருந்தாலும், குறைவாக இருந்தாலும் நெசவுக்கு நூல சரியாக வராது. போதுமான முறுக்கேற்றும் விஷயம் நாளடைவில் நூற்கும் பழக்கத்தில் தானுக தெரிந்துவிடும். நூற்கும்போது கை விரலில் உள்ள நூலிலே முறுக்கின் அளவை தெரிந்துகொள்ளலாம். **நூற்கும்போதே நூலில் போதுமான முறுக்கேறும்படி நூற்கவேண்டும் இது; தான் நல்ல முறை. நூலை இழுத்து நிறுத்திக்கொண்டு, முறுக்கேற்றுவதற்கென்று ராட்டையைச் சுற்றக் கூடாது.** இவ்விதம் சுற்றுவதால் சில சமயங்களில் அதிக முறுக்கேறிவிடும்; நூற்பின வேகமும் குறைந்துவிடும்.

11. நூற்கும்போது நூல் அறுந்து போனுல், அதைப் பிய்த்தெறிந்துவிட்டு புதிதாக நூற்கும் பழக்கம் கூடாது. அவ்விதம் செய்வதால் சேதாரம் அதிகமுண்டாகும். 1 அங்குல நூல் அறுந்து போனுலும் பிணைத்து நூற்கவேண்டும்; அறுந்த நூலை சேதப்படுத்தக்கூடாது.

12. சில சமயங்களில் சக்கரங்களின் அச்சின் கீழ் அறுந்த நூல் சுற்றிக்கொண்டிருக்கும். அதைக் கவனித்து எடுத்துவிட வேண்டும். இல்லையேல், நூற்பு வேகம் குறைவதோடு, இரும்பு அச்சுகளும் சீக்கிரம் தேய்ந்துவிடும்.

13. ராட்டினத்தைச் சுற்றும்போது கதிரிலுள்ள இரும்பு உருளை இருபுறமும் கதிர்ப் பலகையில் மோதாமல், மத்தியில் இருக்கும்படியாகச் சரிப்படுத்திக்கொண்டு நூற்க ஆரம்பிக்கவேண்டும். உருளையானது கதிர்ப்பலகை துவாரத்தில் மத்தியில் இருக்க வேண்டுமானுல், கதிர்ப் பலகையிலுள்ள முபற்காதுத் திருகைத் தளர்த்திக்கொண்டு வலதுகைப் புறமோ அல்லது இடதுகைப் புறமோ தள்ளி உருளை மத்தியிலிருக்கும்படி செய்யலாம். உருளை கட்டையில் மோதினுல் நூற்பு வேகம் குறைவதோடு அதிர்ச்சியும் சப்தமும் ஏற்படும். எனவே, உருளைக்கு முன்புறம் சிறிய சவ்வுதோலை கத்தரித்துப் போட்டுக்கொள்ள வேண்டும்.

14. கதிரிலிருந்து நூல் நூற்கும் அளவிற்கு தரையில் 9 அங்குல அகலமும் ஒரு கஜ நீளமுமுள்ள கறுப்புத் துணி ஒன்றைப் போட்டுக்கொண்டு நூற்றுல் நூலின் தரமும் கரடு முரடாக வருவதும் நன்கு அறிந்து கொள்ளலாம். அதைப் பார்த்து சரியாக நூற்கச் சாதகமாக இருக்கும்.

15. நூற்கும்பொழுது கதிரின் நுனியிலிருந்து பட்டைப் பஞ்சை மேலே கொண்டு போவதில், இடையில் 32 அங்குல நீளத்தில் நூல் நூற்று நிறுத்தி கண்டில சுற்ற ஆரம்பிக்கவேண்டும். அதற்கும் நீளமாக நூற்றுல், நூற்கும்போதும் அதைக் கண்டில் சுற்றும்போதும் அடிக்கடி நூல் அறுந்து போகும். அறுந்துபோன நூலைப் பிணைப்பதில் அதிக நேரம் பிடிக்கும். ஆனதால், 32 அங்குல நீளம் வைத்து நூற்பதில் நூல் அறுந்து போகாமல் வேகமாய் நூற்க முடியும். 32 அங்குல நூலில் கதிர்நுனியிலிருந்து திரும்பவும் நூற்பதற்காக 10 அங்குல நூலை வைத்துக்கொண்டு, பாக்கியைக் கண்டில் சுற்றிவிடவேண்டும்.

16. நூற்ற நூலைக் கதிரில் சுற்றும்போது, கதிர்வட்டத்திலிருந்து அடி பெருத்தும் நுனி சிறுத்தும் வரும்படி நூலை இறுக்கமாகச் சுற்ற வேண்டும். இந்த முறையில் சுற்றுவிட்டால், நூலை வீசனத்தில் சுற்றும்போது கண்டிலிருந்து சரியாக வராமல், நூல் கழன்று கழன்று வரும்.

17. நூல் சமமாக இருக்கும்படியும், போதுமான முறுக்குடனும் நூற்க வேண்டும். நூற்கும்போது கையில் தண்ணீர்ச் சத்து இருக்கக்கூடாது. நூலில் திண்டு திருசுகள் வருமானால் அவற்றை நீக்கிவிட்டு நூற்க வேண்டும். நூல் கரடுமுரடாகவும் சருகுகள் ஒட்டிக்கொண்டுமிருந்தால் நெய்யும்போதும் பண்ணைக்குள் போகும்போதும் அறுந்துவிடும்.

18. நூற்ற நூலை கிஸான் ராட்டு வீசனத்திலோ, பெட்டி ராட்டு வீசனத்திலோ சுற்றும்போது மிக்க கவனத்தோடு கீழ்க் காணும் முறையில் சுற்ற வேண்டும். கதிரை காலின் பெருவிரலை வைத்து அழுத்திக் கொண்டு, கதிரில் உள்ள நூலை ராட்டில் உள்ள நூல் போக்கியில் கோர்த்து வீசனத்தில் சுற்ற வேண்டும். கதிரிலிருந்து நூல் போகும்போது இடது கை ஆள்காட்டி விரலாலும் கட்டை விரலாலும் நூலை பிடித்து விடவேண்டும். இவ்விதம் செய்வதால் நூலில் உள்ள சருகு முதலியவை நீங்கிவிடும். கொடி முறுக்கும் விழமாட்டாது.

19. வீசனத்தில் 80 சுற்றுகள் வீதம் 8 கண்ணிகளாக ஒரு வர்ண நூலைக் கொண்டு ஒன்று சேராமல் மாறி மாறிப் பின்னி நூலின் கடைசி இரு நுனிகளையும் சேர்த்து முடிந்துவிடவேண்டும். 8 கண்ணிகளையும் தனித் தனி கண்ணிகளாக நூலை அறுததுக் கட்டிவிடக்கூடாது. இவ்விதம் செய்தால் நெசவாளர்களுக்கு நூலை இழைக்கும்போது கஷ்டமும் கால தாமதமும் ஏற்படும்.

20. 8 கண்ணி போட்டு முடிந்ததும், வீசனத்திலிருந்து கழற்றி காலின் பெருவிரலில மாட்டிக்கொண்டு, கையால் இழுத்து முறுக்கி இரண்டாய் மடித்துத் திரி போலத் திரித்து, ஒரு தலைப்பை மற்றொரு தலைப்பில் செருகி சிட்டமாகப் போட வேண்டும். நூல் சிட்டங்களை தூசி, அழுக்கு, புகை பிடியாமல் மிக்க பந்தோபஸ்தாக வைத்துக் கொள்ள வேண்டும்.

21. நூற்கப் பழகுகிறவர்கள் முதலில் ஒரு சிட்டம் போட்டு முடிந்ததும், அது சரியாக இருக்கின்றதா இல்லையா என்பதை அகில பாரத சர்க்கா சங்க காதி வஸ்திராலயத்தில் கொண்டுபோய் காட்டி, விவரம் தெரிந்துக்கொண்ட பின்னர் மேலும் நூற்க ஆரம்பிக்க வேண்டும்.

22. சாதாரணமாக, நூற்கத் தெரிந்தவர்கள் என்பதற்கு, குறைந்தது ஒரு மணி நேரத்தில் 3 கண்ணிகளாவது நூற்கப் பழகிக்கொள்ள வேண்டும். தினசரி விடாது நூற்பதை வழக்கமாக அனுஷ்டித்து வந்தால் நாளடைவில் ஒரு மணி நேரத்தில் சுலபமாக 4 கண்ணிகள் நூற்க முடியும். நூற்பு வேகத்தை, நூற்பவர்கள் மாதம் ஒரு முறை 1 மணி நேரம் நூற்று, தாமே பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் தம் நூற்பின் வேகமும் அளவும் தெரியும்.

23. 4 அடி சுற்றளவுள்ள நூல்-1 தார்.
80 தார் (80 சுற்று) - 1 கண்ணி.
8 கண்ணி - 1 சிட்டம் அல்லது
(853 கெஜம் 1 அடி).

24. **நூல் நம்பர் கண்டுபிடிக்கும் வர்தா முறை**

$$\left.\frac{\text{4 அடி வீசனத்தின் சுற்று எண்}}{\text{நூலின் எடை (அணுவாக)}}\right\} = \text{நூலின் நம்பர்.}$$

உதாரணம்:—ஒரு சிட்டம் 2 ரூபாய் எடை இருக்கிறது என்றால் 32 அணு எடையாகிறது. ஒரு சிட்டத்தில் 640 சுற்றுகள் (தார்கள்) இருக்கின்றன. 640ஐ 32ஆல் வகுத்தால் அதுவே நம்பரும் ஆகும். 640÷32=20; அதாவது, 20-ம் நம்பர் நூல்.

(மதுரை நகர் காந்தி ஜெயந்திக் கமிட்டியார் வெளியிட்டது)

# ஆதாரக் கல்வி கற்றவனது திறமை

ரா. வெ. ருத்திரப்பாசாமி

சேவாகிராமத்திலும், பீகார் மாகாணத்திலுள்ள சில கிராமங்களிலும் ஏழு வருஷகாலமாக ஆதாரப் பாடசாலைகள் நடந்து வருகின்றன. அங்கு பயிலும் மாணவர்கள் 'மெட்ரிகுலேஷன்' தாம்பெற வேண்டுமென்று ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் ஆரம்பத்தில் எதிர்பார்த்தார்கள்.

மெட்ரிகுலேஷன் தரம் என்றால் என்ன? பதினொரு வருஷப்படிப்பு முடிந்ததும், மாணவர்கள் சிலநாள் பரீக்ஷை எழுதுகிறார்கள். குறிப்பிட்ட சில பாடங்களில் நூற்றுக்கு 35 மார்க்குகள் வாங்கினால் பரீக்ஷையில் தேர்ச்சி கிடைக்கிறது. வருஷந்தோறும் நடக்கும் இப் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெறச் செய்வதே நமது உயர்தரப் பாடசாலைகளின் நோக்கமாக இருக்கிறது.

ஆதாரக் கல்வி முறையில், ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் வகுத்த பாடத்திட்டத்தை அப்படியே பின் பற்ற வேண்டியதில்லை; அதை அனுசரித்து, ஊருக்குத் தகுந்தபடி ஆசிரியர்கள் தங்கள் சொந்தப் பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். இப் புதுமுறைப் பாடசாலையில் பயிலும் குழந்தைகள் உபயோகமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; சமூகத்தில் நடக்கும் எல்லா விஷயங்களிலும் நன்றாகக் கலந்து கொள்கிறார்கள்; சூழ்ந்துள்ள இயற்கையின் இன்பத்தைக் கூர்ந்து நோக்குகிறார்கள்; அவர்களுடைய கைகளும் கண்களும், பிற இந்திரியங்களும் பண்படுகின்றன. இப்படிப்பட்ட அனுபவத்தின் மூலம் பல உண்மைகளைத் தாமே கண்டறிய ஆசிரியர் உதவி புரிகிறார். பழைய முறையிற்போல உருப்போட்டு ஒப்புவிக்கவேண்டியதில்லை.

பழைய முறையில், குழந்தைகளின் அனுபவத்திற் கெட்டாத பல விஷயங்களை ஆசிரியர் சொல்லிக் கொடுத்துக் கொண்டே போவார். சில குழந்தைகளுக்கு ஓரளவு புரியும்; மற்றவர்களுக்கு அதுவுமில்லை. புத்தகங்களை மாறிமாறிப் படித்து, உபயோகமற்ற புள்ளி விவரங்களைக்கூட ஞாபகத்திலேயே வைத்திருந்து வருஷக் கடைசியில் நடக்கும் பரீக்ஷையில் கொட்டிவிட்டால் படிப்பு முடிந்தது.

புதுக் கல்வி முறையில் இத்தகைய பரீக்ஷைகளுக்கு இடமேயில்லை. தங்கள் அனுபவங்களையும், கண்ட உண்மைகளையும் மாணவர்கள் அன்றாடம் குறித்து வைக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தை ஆசிரியர் கவனித்து, குறைபாடுகளை உடனே நீக்கிவிடுகிறார். இதில், பரீக்ஷை தினந்தோறும் நடக்கிறதென்றே சொல்லலாம். குழந்தைகள் அன்றாடம் எழுதிவரும் குறிப்புகளையும், ஆசிரியரின் அபிப்பிராயத்தையும் அனுசரித்தே அவர்களை மேல் வகுப்புக்கு அனுப்புகிறோம்.

மூன்று வயது முதல் ஏழு வயது வரையுள்ள சிறு குழந்தைகளை ஒரு பூர்வாதார வகுப்பில் விளையாட்டு, ஆடல் பாடல், நல்ல வழக்கங்கள் இவற்றில் பழக்குகிறோம். பின்னர் பதினான்கு வயது வரை ஏழு வருஷ காலம் ஆதாரக் கல்வியில் பயிற்றுகிறோம். இப்படிப் பயின்ற குழந்தைகள், நாம் கற்பனை செய்துவரும் அன்பும் ஒத்துழைப்பும் நிறைந்த சமூகத்தில் சிறந்த அங்கம் வகிப்பார்கள். அவர்களிடம் அடியிற்கண்ட பண்புகள் இயற்கையில் அமையும்.

ஆதாரக் கல்வி போதனைக்குரிய காலம் பூர்வாதார வகுப்பு உள்பட எட்டு வருஷங்களாகும். இந்தக் கல்வி போதிப்பதன் நோக்கம் ஒரு புதிய சமூக அமைப்பில் அங்கம் வகிக்கத்தக்க பிரஜைகளாகும்படி பிள்ளைகளைப் பயிற்றுவதேயாகும். அவர்களுக்கு அமையவேண்டிய யோக்கியதாம்சங்கள் பின் வருவன.

1. எல்லாத் துறைகளிலும் ஒத்த அபி விருத்தி பெற்ற உடல்; கஷ்டப்பட்டு வேலை செய்ய வல்லதாய், வேலையில் எளிதில் வளை யத்தக்கதாய், ஆரோக்கியமுடையதாய் இருக் கவேண்டும்.

2. எல்லோரும் சேர்ந்து உழைக்கின்ற புதிய சமூக அமைப்பு என்ற லக்ஷியத்தின் தத்துவத்தையும், நாட்டுப்புறத்தின் செல்வ நிலையைப் பொருத்த வரையில் கிராமக் கைத் தொழில்களின் ஸ்தானம் என்ன என்பதை யும் தெளிவாக உணர்தல்.

3. தான் வாழ்வதற்குத் தேவையான அளவு சீரான உணவுக்குரிய வருவாயை அவசியமானால் ஆதாரத் தொழில் மூலமா கவே தேடிக்கொள்ளும் திறமை

4. பருத்தியிலிருந்து நூற்றல் முதலான வேலைகளைத் தானே முறையாகச் செய்து முடிக்கும் திறமை.

5. தன்னுடைய சொந்த உபயோகத்துக் கான காய்கறிகளைப் பயிரிட்டுக்கொள்ளும் திறமை.

6. முழுச் சமையலையும் செய்யும் திறமை. ஒரு குடும்பத்துக்கோ அல்லது ஒரு கூட்டத் துக்கோ தேவையான உணவுப் பொருள் களைச் சேமித்தல். உணவைச் சமைத்தல் உணவுப் பொருள்கள் விறகுபற்றிய கணக்கு வைத்துக்கொள்ளல், எவ்வளவு வேண்டு மென்று திட்டம் போடுதல் என்பனவாகிய சமையலை ஒட்டிய வேலைமுறைகளில் அறிவும் திறமையும் பெறுதல்.

7. மனித உடம்புக்கேற்ற உணவுச் சத்து களைப்பற்றிய அடிப்படையான அறிவும், உண்மைகளைப்பற்றிய அறிவும்.

8. கிராம சுகாதாரம், உடற் சுகாதாரம் ஆகியவைபற்றிய அடிப்படையான விதிகளை அறிதல்.

9. முதலுதவி அளிக்கவும், சாமானிய நோய் கண்டோருக்குச் சிகிச்சை, பணிவிடை செய்யவும் அறிதல்.

10. கூட்டுறவுப் பண்டகசாலைகள் நடத் துவதிலும், கணக்குவைத்து வருவதிலும் கூட்டுறவின் தத்துவங்களை அறிதல்.

11. பொதுக் கூட்டங்களில் தெளிவாகவும் தடங்கலில்லாமலும் பேசும் திறமை.

12. எதையும் எழுத்து மூலமாய்த் தெளி வாக வெளியிடுவதிலும், அறிக்கைகள் தயா ரிப்பதிலும் திறமை.

13. தாய்மொழியில் இலக்கியச் சுவை யறிதல்.

14. நடைமுறைக்கு வேண்டிய ஹிந்துஸ் தானி மொழி அறிதல். சுலபமான ஹிந்துஸ் தானி மொழியைத் தேவநாகரி, உருது என்ற இரண்டு லிபிகளிலும் எழுதப் படிக்க அறிதல்.

15. பக்தி சம்பந்தமான கீர்த்தனைகளை யும், தேசியப் பாடல்களையும் பஜனைபோல் சேர்ந்து பாடும் திறமை.

16. ஓவியங்களைப் பார்த்து அனுபவிக்கும் தன்மை; ஓவியம் வரைதலிலும் வர்ணங்கள் தீட்டுவதிலும் திறமை.

17. சைக்கிள் விடவும், நீந்தவும் தெரிதல்.

18. பாடசாலையிலும், கிராமத்திலும் விழாக்கள் நடத்த ஏற்பாடு செய்யும் திறமை.

19. தினசரிப் பத்திரிகைகளில் வெளியி டப்பட்டுள்ள நாட்டு நடப்புச் செய்திகளைக் கவனித்துவருவதன் பயனாய், உலகத்தின் பொ ருளாதார, சமூக, அரசியல் பிரசினைகளைப் பற்றி ஏற்படுகிற அறிவும், நூல் நூற்றல் சம்பந்தமான பல்வேறு கருவிகளிலும், வேலை முறைகளிலும் அடங்கியுள்ள இயந்திர தத் துவங்களைப்பற்றிய அடிப்படை அறிவும்.

20. உணவு, உடை மூலமாக இந்திய பூகோள சாஸ்திரத்தையும், உலக பூகோள சாஸ்திரத்தையும் அறிதல்.

21. உணவுப் பொருள்கள் பருத்தி இவற் றைப் பயிரிடுதல், சமையல் செய்தல், அத னோடு ஒட்டிய பிறவேலைகள், நூல் நூற்றல் சம்பந்தமான வேலை முறைகள், உடலை ஆரோக்கியமாய் வைத்திருத்தல், கிராம சுகா தாரம் ஆகியவை பற்றிய அடிப்படையான தத்துவங்களை அறிந்திருத்தல்.

22. தினசரிப் பத்திரிகைகளையும் மற்ற பத்திரிகைகளையும் அறிவோடு உபயோகிக் கும் திறமை.

23. இந்தியாவில் உண்டான சுதந்திரப் போராட்டத்தையும் சரித்திரத்தையும், அப் போராட்டத்தின் வளர்ச்சியையும் அறிதல்.

24. இந்தியாவிலுள்ள பல்வேறு சமயங்களிடத்தும் பகதி பாவம்; வகுப்பு ஒற்றுமை பற்றிய ஆர்வம்.

25. ஜாதிக் கட்டுப்பாடு, ஜாதி உணர்ச்சி இல்லாதிருத்தல்.

26. தனது சொந்தக் கிராமத்தினிடத்தும் நாட்டுப்புறங்களிடத்தும் அன்பு; கிராம வாழ்க்கைக்கேற்ற மனம்; கிராமங்களிலேயே தங்கி வேலை செய்யச் சித்தமாயிருக்கும் தன்மை.

மேலே குறிப்பிட்ட தகுதிகள் கைவர முடியாதவை யென்றும், அளவுக்கு மிஞ்சியவையென்றும் தோன்றலாம். கலந்த சமூக வாழ்க்கையையும் கூட்டுறவு வாழ்க்கையையும் நாங்கள் சிறப்பாக வலியுறுத்தி வருகிறபடியால், இந்தத் தகுதிகள் பெறச் செய்வது எளிதாகவும் இயல்பாகவும் இருந்து வருகின்றது.

---

## உண்மைக் கல்வி

### கி. க. மஷ்ருவாலா.

எது சித்தத்தைத் தூய்மைப் படுத்தவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சியளிக்கவில்லையோ, அச்சமின்மையும் தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதும் எதிலிருந்து உண்டாகவில்லையோ, ஜீவனத்திற்குரிய உபாயத்தைக் காட்டவில்லையோ, அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிவும் ஆற்றலும் உண்டாக்கவில்லையோ, அந்தக் கல்வியில் எத்தனை அறிவுப் பொக்கிஷம் சேமித்துக் கிடந்தாலும் தர்க்கத் தேர்ச்சியும் பாஷைப் பயிற்சியும் பொதிந்திருந்தாலும், அது நல்ல கல்வியாகாது; அரைகுறையான கல்வியே ஆகும்.

நூற்றில் 80–85 பேர்களின் வாழ்க்கைத் தேவைகளைக் கருதுவதை விடுத்து, ஒரு சிலரின் நன்மைகளையோ, ராஜ்யத்தின் சில இலாகாக்களின் தேவைகளையோ கருத்திற்கொண்டு அளிக்கப்படும் கல்வி தேசியக் கல்வியாக முடியாதது மட்டுமல்ல, தவறான கல்வியாயுமிருப்பதால் அது அறியாமையேயாகும்.

கல்வியினால் ஜீவனத்திற்கு வழியுண்டாக வேண்டும்; ஆகவே கைத்தொழிற் பயிற்சி, கல்வியின் முக்கிய அம்சமாய் இருக்கவேண்டும்.

இந்தியாவின் கல்விமுறை செலவின்றி நடைபெறுவதாய் இருக்க வேண்டும்.

இக்கல்வி, மிகக் குறைந்த அளவுக்கே புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கும். இதன் பொருள் புத்தகங்களே கூடாது என்பதல்ல; படிப்பதைவிட, கேள்வி, நோக்கு, செயல் ஆகியவற்றின் மூலம் அதிகப் போதனை தரப்படவேண்டும் என்பதே.

— "காந்திய நவநீதம்"

# பனை வெல்லம்

**(கஜானனன் நாயக்)**

நமது நாட்டில் சர்க்கரை உற்பத்திக்காக ஏராளமான அளவில் கரும்பு பயிர் செய்யப்படுகிறது. கரும்பு உற்பத்திக்காக நல்ல நிலங்களை உபயோகிப்பது, தவறான முறையில் நிலங்களைப் பிரயோஜனப்படுத்துவதாகிறது. நாம் பனை வெல்லத்தையே (கருப்புக்கட்டியை) உபயோகிக்க முடிவு செய்துவிட்டால், அப்போது, கரும்பு உற்பத்திக்கு வேண்டியிருக்கும் நிலத்தில் முக்கால் பாகத்தை மீதப்படுத்தி உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாம்.

ஒரு பனைமரம் வருஷத்திற்கு ஒரு மணங்கு வெல்லம் கொடுக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் 500 பனைமரங்கள் வளர்க்கலாம். ஆகவே ஒரு ஏக்கர் நிலத்தில் பனைமரங்கள் வளர்த்தால் 500 மணங்கு பனைவெல்லம் கிடைக்கும். பலன் கொடாத மரங்கள், நோய்வாய்ப்பட்டவை முதலியவைகளுக்காக 100-க்கு 66 பங்கு கழித்துவிட்டாலும்கூட, 3 ஏக்கர் நிலத்தில் 500 மணங்கு பனை வெல்லம் உற்பத்தி செய்ய முடியும். ஒரு லக்ஷம் ஜனங்களுக்குத் தேவையான 55940 மணங்கு பனை வெல்லம் தயார் செய்ய 331 ஏக்கர் நிலம் போதுமானது. இதே அளவான கரும்புச் சர்க்கரை தயார் செய்ய 1380 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிர் செய்யவேண்டியிருக்கிறது. நமக்கு வேண்டிய சர்க்கரைக்குப் பதில் பனை வெல்லத்தை உபயோகித்தால், இப்போதைய விவசாய நிலத்தில் 4 ல் 3 பாகத்தை மிச்சப்படுத்தி தானிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாமல்லவா?

331 ஏக்கர் விவசாய நிலங்கள் கூட பனைமரங்கள் பயிர் செய்வதற்கு அவசியமில்லை. பனை மரங்கள் விவசாயம் செய்ய முடியாத தரிசு நிலங்களிலும், வாய்க்கால் வரப்புகளிலும் பயிராகும்.

40 கோடி இந்திய மக்களுக்கும் வேண்டிய கரும்புச் சர்க்கரை தயார் செய்ய 53,20,000 ஏக்கர் செழிப்பான விவசாய நிலத்தை முடக்க வேண்டியிருக்கிறது. 13,50,000 ஏக்கர் தரிசு நிலங்களில் பனை மரங்கள் வளர்ப்பதன் மூலம் இதே அளவான சர்க்கரையை உற்பத்தி செய்ய முடியும். ஒவ்வொரு மாகாணத்திலும் ஏராளமான தரிசு நிலங்கள் கிடக்கின்றன. பம்பாய் மாகாணத்தில் மட்டும் 8 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. நில வரப்பின் நீளம் கணக்கிட முடியாத அளவு ஏராளமாக உள்ளது.

வயல் வரப்புகளில் பனைமரங்களை உண்டாக்குவதால் நிலத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்கு எவ்விதக் கெடுதியுமில்லை. ஏனென்றால், பனைமரங்கள் நேரடியாக மேல் நோக்கி வளர்கின்றன. ஓலை மட்டைகள் குறுகிய அளவுடையவை; ஆதலால், நிழல் பரவலாக விழ மார்க்கமில்லை. வேர்களும் பரவலாகச் செல்லாமல் ஆழமாகச் செல்கின்றன. பூமிக்கடியில் ஆழமாகச் செல்வதன் மூலம் நில வரப்புகள் பலப்படுத்தப்படுகின்றன. வேர், பெரும் வெள்ளம் ஏற்பட்டாலும், வரப்பு கரைந்துபோகாமல் தடுக்கிறது. விவசாயிகள் பனைமரத்தின் இந்த உபயோகத்தை உணர்ந்திருக்கிறார்கள். வரப்புகளில் பனைமரங்கள் வளர்ப்பது சில மாகாணங்களில் அங்குமிங்கும் வழக்கமாக இருக்கிறது. ஆனாலும், அது தற்செயலாக ஏற்பட்டதே. ஒரு திட்டத்துடன் இந்த வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

'கிராம உத்யோகப் பத்திரிகை'யிலிருந்து :

# ஊர் முரசு

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன். — பாரதியார்.

ரா. கு.

## சுயநலமா? தேசாபிமானமா?

ஆமதாபாத்திலுள்ள துணி ஆலைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசியான ஸ்ரீ கந்துபாய். கே. தேசாய் அவர்கள் 'ஹரிஜன்' பத்திரிகையில் யுத்த காலமான 1940-1946. வருஷங்களில் துணி ஆலை முதலாளிகள், மொத்த விற்பனை ஜவுளி வியாபாரிகள், சர்க்கார் இம்மூவரும் பொதுஜனங்களை எப்படிக் கூட்டுக் கொள்ளை யடித்தார்கள் என்ற பயங்கர மான விவரத்தை வெளியிட்டுள்ளார்.

நம் மாகாண பொதுஜன சர்க்கார், மாகாணத்தில் பெரும்பாலான கிராம மக்களின் பொருளாதார சுபிட்சத்தை முன்னிட்டு அமுலுக்குக் கொண்டு வரப் போவதாக அறிவித்துள்ள மில்கட்டுப் பாடுக் கொள்கையை மில் முதலாளி களும், அவர்களுடைய கையாட்களும், பத்திரிகைகளும் கடுமையாக எதிர்த்து வருவதை நித்தமும் பார்க்கிறோம். அவர் கள் எதிர்ப்பது சுயநலத்துடனா, அல்லது கிராம மக்களிடம் அவர்களுக்குள்ள அபிமானத்தின் பேரிலா வென்பதை கீழ்க் கண்ட அவருடைய கட்டுரையின் முக்கிய சாராம்சம் தெளிவுபடுத்தும்.

1. நம் தேசத்திலுள்ள துணி ஆலைத் தொழில்களில் போடப்பட்டிருக்கும் மூல தனம் 50 கோடி ரூபாய். இத்தொழில் கள் முழுவதும் 150 மானேஜிங் ஏஜண்டு ஸ்தாபனங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகளைச் சேர்ந்த கட்டிடங்கள், யந்திரங்கள், இடங்கள் யாவும் 100 கோடி ரூபாய் பெறு மானவை. இந்த ஆலைகளில் ஒருகோடி கதிர்களும், 2 லக்ஷம் தறிகளும் வேலை செய்கின்றன. யுத்தத்திற்குமுன் இவை களில் வேலைசெய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 5 லட்சம் உற்பத்தி செய்த துணி 420 கோடி கெஜம். இப் போது இரவு வேலையும் நடக்கும்படி செய்திருப்பதால் 7 லக்ஷம் தொழிலா ளர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் அதற்கான அதிக உற்பத்தி நடக்கவில்லை. அதிக லாபம் கிடைப்பதால் முதலாளிகள் உற்பத்தி விஷயத்தில் போதுமான கவனம் செலுத்துவதில்லை.

2. யுத்தத்திற்குமுன் தேசம் முழு வதும் இந்த ஆலைத்தொழில் மூலம் 5, அல்லது 6 கோடி ரூபாய் லாபம் கிடைத்து வந்தது. நூலும் துணியும் 60 கோடிக்கு உற்பத்தி செய்து 72 கோடிக்கு விற்றார்கள். 1941-ல் விலை ஏற ஆரம்பித்து 1943 மே மாதத்தில் உச்சநிலை யடைந்தது. அப்போது துணி விலை 5½ மடங்கு அதிகமாகியது. ஆனாலும் இந்த விலைக்கும் சாதாரண மக்களுக்குத் துணி கிடைப்பதில்லை. இந்த விலைக்கு மேல் 50 சத விகிதம் முதல் 100 சத விகிதம் வரை கள்ளமார்க்கட்டில் அதிகப் பணம் கொடுத்தே வாங்க வேண்டி ஏற் பட்டது.

3. 1943ல் சர்க்கார், ஜனங்களின நலத்தைக் கவனிப்பதுபோல், கள்ளமார்க் கட்டை ஒழிக்க முயற்சித்தார்கள். அது

பிரயோஜனப்படவில்லை; உண்மையில் கள்ளமார்க்கட் செழித்து வளர்ந்தது. முதலாளிகள் கொள்ளை லாபமடித் தார்கள். ஜவுளிக் கட்டுப்பாடு போர்டின் பெரும்பாலான அங்கத்தினர்கள் இந்த ஆலை முதலாளிகளே. அவர்களாகவே செய்துகொள்ளும் கட்டுப்பாடு எத்தன் மையதாக இருக்க முடியும்?

### 4. யுத்தகால லாபக் கணக்கு

(ரூபாய்கள் யாவும் கோடிக்கணக்கில்)

| வருஷம் | மொத்த லாபம் | ஏஜண்டு கமிஷன் | உற்பத்தித் தொகை | மக்கள் கொடுத்த தொகை |
|---|---|---|---|---|
| யுத்தத்திற்குமுன் | | | | |
| 1938 | 5 | 1 | 60 | 72 |
| 1939 | 5 | 1 | 60 | 72 |
| யுத்த காலத்தில் | | | | |
| 1940 | 7 | 1 | 70 | 84 |
| 1941 | 23 | 3 | 100 | 120 |
| 1942 | 46 | 5 | 150 | 250 |
| 1943 | 109 | 10 | 270 | 480 |
| 1944 | 85 | 9 | 210 | 370 |
| 1945 | 61 | 7 | 180 | 324 |
| 1946 (மதிப்பு) | 41 | 5 | 170 | 306 |
| | 372 | 40 | 1150 | 1934 |

5. சர்க்கார் பல கோடி ரூபாய்களை இந்த ஆலை முதலாளிகளிடமிருந்து அமித லாப வரியாக எடுத்துக் கொண்டார்கள். மில் முதலாளிகள், இந்த வரியைத் துணி கட்டும் பொது ஜனங்களிடமிருந்து வசூ லித்துக் கொடுக்கும் ஏஜண்டுகளாக இருந்தார்கள். ஆகவே இந்த வரி நாட்டி லுள்ள ஆண், பெண், குழந்தைகள் யாவ ரிடமும் தலைவரிபோல் வசூலிக்கப்பட்ட தாகவே கொள்ளவேண்டும்.

6. யுத்தத்திற்கு முன்பு ரூ. 1-12-0க்கு விற்ற துணி, யுத்த காலத்தில் ரூ. 6-12-0க்கு விற்றது. ஆனால் இங்கி லாந்து, அமெரிக்கா, கனடா போன்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் 30 சத விகிதமே யுத்த காலத்தில் விலை கூடி இருந்தது.

7. 50 கோடி மூலதனமுள்ள இந்தத் தொழில் சராசரி வருஷம் 53 கோடி ரூபாய் லாபம் கொடுத்து வந்திருக்கிறது. இந்த விதமாக, நாட்டிலுள்ள மக்கள் எல் லோரும் இந்தத் தொழிலின் முதலுக்கும் வட்டிக்கும் பல மடங்கு, 'லாபம்' என்ற பெயரால், பணம் கட்டிவிட்டதால் இந்த 420 ஜவுளி ஆலைகளும் எந்தவித நஷ்ட ஈடும் செலுத்தப்படாமல் நாட்டு மக்க ளுக்குச் சொந்தமாகிவிட வேண்டியவை களாகும்.

8. நிர்வாக ஏஜண்டுகள் சகஜமாக வரும் லாபத்தைவிட 10 பங்கு அதிகம் பெற்றிருக்கிறார்கள். இந்த பகிரங்க லாபம் போக, நிர்வாக ஏஜண்டுகளும் அவர்களுடைய நண்பர்களும் பலவித சாமான்கள் கொள்முதல் செய்வதிலும்,

துணியையும் நூலையும் பதுக்கி வைத்தும் பலகோடி லாபமடைந்திருக்கிறார்கள். இவைகளுக்குக் கணக்கே கிடையாது.

9. இந்தியா முழுவதும் உள்ள ஜவுளி மொத்த வியாபாரிகள் 400 பேர். இவர்களுக்கு யுத்தத்திற்குமுன் சராசரி 1 சத விகிதம் கமிஷன் தரப்பட்டது. இதை 3 சதமாக உயர்த்தி, இவர்களையும் மில் முதலாளிகள் தங்கள் கூட்டுக் கொள்ளைக்கு உடந்தையாக்கிக் கொண்டார்கள். துணி விலையை வைத்துப் பார்த்தால் சாதாரண காலத்தைவிட இவர்கள் 10 பங்கு லாபம் அடைந்திருக்கிறார்கள். இவர்களின் பிரதிநிதிகளும் ஜவுளி கட்டுப்பாடு போர்டில் அங்கத்தினர்களாகையால், இவர்களின் ஆதரவைப் பெறவும், தங்கள் மோசடி வெளிவராமல் வாயையடைக்கவும், அதற்குரிய சலுகை கமிஷனை உயர்த்துவதின் மூலம் அளிக்கப்பட்டது. இத்துடன் துணிக்கட்டுப்பாடு ஸ்தாபனத்தில் ஆயிரக்கணக்கான கொழுத்த சம்பளச் சிப்பந்திகள்—எல்லாரும் சர்க்கார் ஆட்கள்-இருக்கிறார்கள். அவர்கள் பெறும் லஞ்சம் இன்று பகிரங்கமான ரகசியமே. நாகரிக சர்க்கார் எதுவும் இத்தகைய பகிரங்கக் கொள்ளையை அனுமதிக்காது. இந்தியா போன்ற ஏழை தேசத்தில் இது மகா கொடுமையானதும் பாவகரமானதுமாகும்.

10. கிராம விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களான பருத்தி முதலானவைகளின் விலையை ஏறவிடாமல் சர்க்காரிடம் தங்களுக்குள்ள செல்வாக்கை உபயோகித்துத் தடுத்து வந்தார்கள். யுத்தத்திற்குமுன் ரூ 100க்கு விற்ற பருத்தி யுத்தகாலத்தில் ரூ. 217க்கு விற்றது. ஆனால் துணியோ, ரூ.100லிருந்து ரூ. 275க்கு உயர்ந்தது. பருத்தியைக் குறைந்த விலைக்கு விற்கும்படி செய்தும், துணியை உயர்ந்த விலைக்கு வாங்கும்படி செய்தும் விவசாயிகளை இரண்டு தடவை 'சுரண்டி'யுள்ளார்கள்.

11. தொழிலாளர்களுக்குப் பஞ்சப் படி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அகவிலையுடன் ஒப்பிட்டுக் கணக்கிட்டால் பழைய சம்பளத்தைவிட 15 முதல் 25 சத விகிதம் குறைவாகவே இருக்கிறது.

12. ஜவுளி விலை ஏற ஆரம்பித்ததாலேயே மற்ற விலைகளும் ஏறின. ஜவுளி விலை ஏற்றந்தான் நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச்சுவராக்கியுள்ளது. துணி உற்பத்தியிலும் மொத்த விற்பனையிலும் ஈடுபட்டவர்கள் கையில் ஏராளமாகப் பணம் வந்ததால், தேசத்தில் லஞ்சமும் கள்ளமார்க்கட்டும் அதிகரித்துள்ளன. * * *

**நமது சர்க்கார் அதிகாரிகள் உடை**

நமது சர்க்கார் அதிகாரிகளில் பெரும்பாலோர் இன்று மேனாட்டு உடைகளில் காட்சியளிக்கிறார்கள். ஒரு தலைமுறைக்கு முன் பிறந்தவர்களைவிட இப்போதுள்ள அதிகாரிகளை இந்த மோகம் அதிகமாகப் பிடித்திருப்பதாகத் தெரிகிறது. தாங்கள் அதிகாரத்தையுடையவர்கள்— அதிகாரி— என்பதைக் காட்டிக்கொள்ள இந்த உடை மிகுந்த வசதியளிப்பதாக அவர்கள் கருதலாம். ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவையும் இந்திய மக்களையும் உபயோகித்து வந்தவரையில், அவர்கள் உத்தரவுப்படி நடந்துவந்த அதிகாரிகளுக்கு, இந்த உடை அந்த உத்தரவுகளை நிறைவேற்றும் வகையில் பிரயோஜனமுள்ளதாக இருந்திருக்கலாம்.

ஆனால் இன்றோ, மக்களின் சர்க்கார் இந்நாட்டை ஆள்கிறது. மக்களிடம் அரசாட்சி மாறிவருவதை நிதர்சனமாகப் பார்க்கிறோம். வெள்ளையர்கள் வெளி

யேறும் தருவாயிலிருக்கிறார்கள். ஆகவே காலத்துக்கும் நாட்டுக்கும் ஒத்த முறையில் நடந்துகொள்ள வேண்டியது அதிகாரிகள் கடமையாகும். நமது நாட்டு கிராம மக்கள் ஏழைகள்; படிப்பில்லாதவர்கள். பழைய ஆங்கில தர்பார்களைக் கண்டு பயந்து போயிருப்பவர்கள். 'அதிகாரி' என்றாலே மிரளுவார்கள். சர்க்காரும் அதிகாரிகளும் கிராம மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே இருக்கிறார்கள் என்ற எண்ணம் அவர்கள் மனதில் ஏற்படும் விதத்தில் அதிகாரிகள் தங்கள் மனோபாவங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நமது நாட்டு முறைக்கும், சுகாதாரத்திற்கும் ஏற்ற முறையில் ஆடை அணிவதே கிராம மக்களை அணுகுவதற்கு சிறந்த மார்க்கமாகும். நாட்டு உடையில் கிராமங்களுக்கு வரும் அதிகாரிகள் மக்களிடம் அன்புடனும், ஆதரவுடனும் நடந்து கொள்வதுடன் அவர்களது கஷ்டங்களை அனுதாபத்துடன் நிவர்த்திக்க முற்பட்டால், அப்போது தான் நமது சர்க்கார் நிர்வாகம் செய்கிறது என்ற பயமற்ற தன்மை கிராம வாசிகளுக்கு ஏற்படும். கிராம மக்களின் அபிமானத்திற்கும் அவர்கள் பாத்திரர்கள் ஆவார்கள். * *

**வீட்டுக்கு ஒரு பசு**

பசுக்கள் வளர்ப்பதை தற்போது கிராமங்கள் கைவிட்டு விட்டன. நகர நாகரிகத்தைப் பார்த்து எருமை மாடுகளையே வளர்க்க ஆரம்பித்திருக்கின்றன. பசுக்கள் குறைந்ததே கிராம சுபிட்சத்தின் கேட்டிற்குக் காரணமாகும்.

பசு குடும்பத்திற்கு வேண்டிய போஷாக்கு சத்துள்ள பால், மோர், தயிர், வெண்ணெய் நெய் முதலிய உணவுப் பொருள்களைத் தருகிறது. உழவுக்கும், தண்ணீர் இறைப்பதற்கும், வண்டியிழுப்பதற்கும் வேண்டியநல்லகாளைகளை ஈன்று கொடுக்கின்றது. சிறந்த உரப்பொருள்களானசாணம், கோமியத்தை அளிக்கிறது.

கிராமப் பொருளாதாரத்தில் எருமை இடம்பெற முடியாது. அதன் கன்றுகள் விவசாயத் தொழிலுக்கு லாயக்கற்ற நிலைமையில், அது பசுப்போல் சுபிட்சகரமானதல்ல. பொதுப்படையாக கிராமங்களில் போதுமான பால்மாடுகளே இல்லை. பால், மோர் சாப்பிடுவோர்களே வெகு சொற்பம். சத்தற்ற உணவு உண்டு மக்கள் மெலிந்து வாடுகிறார்கள். பால் ஒரு பணக்காரன் சாப்பிடக்கூடிய போகப் பொருளாகவே கிராமவாசி நினைக்கும்படியாக இருக்கிறது. அவனிடம் பணமில்லை. வசதியுமில்லை.

கிராமப் பொருளாதாரத்தில் சிறந்த அம்சம் பசு தான். பசுவை அலட்சியம் செய்த பாவமே கிராமங்களின் தற்போதைய தரித்திர நிலைமைக்கு காரணமென்றால் அது குற்றமாகாது. பசுக்கள் அற்றுப் போன நாளிலிருந்து சத்தான உணவுப் பொருளும் கிராமங்களில் அற்றுப் போய் விட்டது. உழவுக்கு வேண்டிய காளைகள் விலை கொடுத்து வாங்கியாக வேண்டி ஏற்பட்டிருக்கிறது. நஞ்சைக்கும் புஞ்சைக்கும் உரமில்லாமல் பிண்ணாக்குக்கும், அம்மோனியா உப்புக்கும் சர்க்காரை எதிர்பார்த்து நிற்க வேண்டியாகி விட்டது.

என்று வீட்டுக்கு ஒருபசு காணப்படுகிறதோ அன்றுதான் கிராமங்களில் லக்ஷ்மீகரம் நிறையக் காணுவோம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் பணம் வாங்கி பசுக்கள் வாங்க கிராம மக்கள் ஏற்பாடு செய்வார்களாக.

## பத்திரிகை சாரம்

### நிலத்தின் செழுமை

நம் நாட்டில் விவசாய விளைவு மற்றெல்லா நாடுகளைவிட மிகமிகக் குறைவாயிருக்கிறது. ஏன் இந்த அளவு கடந்த வித்தியாசம்? நிலத்திலிருந்து முழுப் பலனை அடைய முடியாமற் செய்யும் காரணங்கள் யாவை? இவற்றைப் பற்றி ஸ்ரீ பி. கோதண்டராமன் அவர்கள் "பாரதமணி"யில் எழுதுவதாவது:

இந்த நிலைக்குப் பல காரணங்கள் உள்ளன. நிலத்திற்குப் போதிய நீர் கிடைப்பதில்லை என்பது அவற்றுள் ஒன்று. நம் குடியானவர்கள் நிலத்தின் செழுமையைப் போதியவளவு பாதுகாப்பதில் சிரத்தை காட்டுவதில்லை என்பது மற்றொன்று. தற்சமயம் நிலத்தின் செழுமையைப் பற்றிய விஷயத்தை மட்டும் ஒரு சிறிது ஆராய்வோம்.

நம் நாட்டில் பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு உதவியாயிருக்கும் பூசாரங்கள் மூன்று. முதலாவது நைட்ரோஜன் எனப்படும் தழைச்சத்து. இரண்டாவது பாஸ்பரஸ் எனப்படும் தானிய சத்து; மூன்றாவது பொட்டாஷ் என்னும் காரம். பயிர்கள் தம் வளர்ச்சிக்குத் தேவையான இவ்வுணவுகளைப் பெரும்பாலும் பூமியிலிருந்தே கிரகித்துக் கொள்ளுகின்றன. ஆனல், இவை நிலத்தில் குறைவாகவுள்ளன. அன்றியும், பயிரிடப்படும் ஒவ்வொரு தடவையும், வளரும் பயிர்கள் இப்பூசாரங்களை நிலத்தினின்று உறிஞ்சி விடுகின்றன. ஒரு நிலம் இயல்பாகவே எவ்வளவுதான் செழிப்புடையதாயினும், அதில் வருடாவருடம் பயிரிட்டுச் சாகுபடி செய்து வந்தால், நாளடைவில் அதன் வளமும் விளைவும் குன்றிவிடுவது இயல்பேயல்லவா? ஆதலால், நிலத்திற்கு ஏற்படும் இந் நஷ்டத்தை அறுவடையானதும் ஈடுசெய்துவிட வேண்டும். நிலத்தின் இயல்புக்கும் பயிரின் தன்மைக்கும் உரிய எரு இடவேண்டும். இது வேளாண்மைக்குரிய பிரதான விதியாகும். எந்த அறிவுள்ள விவசாயியும் இதை அசட்டை செய்ய முடியாது.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு விஷயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். ஒவ்வொரு பயிரும் நிலத்திலிருந்து தன் பூசாரத்தைக் கிரகிக்கும் போது, மற்றெல்லாவற்றையும் விடக் குறித்த பூசாரமொன்றையே அதிகமாகக் கொள்ளுகின்றது. ஆதலால், ஒரே விதமான பயிரை ஆண்டு தோறும் அடுத்தடுத்துப் பயிரிட்டால், நிலத்திலுள்ள அந்த குறித்த பூசாரம் மேன்மேலும் குறைந்து கொண்டே வந்து, விளைவு மெல்லமெல்லக் குன்றிவிடுகிறது. இதைத் தவிர்க்கப் பலவிதமான பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர்செய்வதுதான் நல்ல விவசாய முறையாகும். ஒரு குறித்த பயிருக்குப் பின் மற்றொரு வகைப் பயிரைப் பயிர்செய்தால், பின் சொன்னது முன் சென்ற பயிர் கிரகித்த பூசாரத்தையே மீண்டும் கிரகிக்காது. அப்போது அந் நிலம் தான் இழந்த பூசாரத்தை மெல்ல மெல்ல இயற்கையிலிருந்து திரும்பப் பெற்றுவிடும். இம் முறையால் நிலத்தின் பூசாரம் பாதுகாக்கப் படுகின்றது. இரண்டாவது, இம் முறையினுல், அந்தந்தப் பயிர்களுக்கு வேண்டிய உணவு விடுவிக்கப்பட்டு அவையவைகளுக்குக் கிடைக்குமாறு செய்யப்படுகின்றது. உதாரணமாக, நெல் அறுவடையானவுடனேயோ, அல்லது அறுவடையின்போதோ, நிலத்தில் பயறு வகை ஏதேனுமொன்றையோ, அல்லது மாட்டுத் தீவனப் பயிர் ஒன்றையோ விதைத்து விட்டால், அப்

பயிரின் தழைகள் உதிர்ந்து அடுத்து வரும் நெற்பயிருக்குத் தேவையான தழைச் சத்தை அளித்து விடுகின்றன.

நல்ல வேளாண்மைக்குரிய இப்பிரதான விதிகளை நம்முடைய குடியானவர்கள் ஓரளவு அறிந்திருந்தும், பல காரணங்களினால் அசட்டை செய்து விடுகின்றனர். பூசாரத்தைப் பெரிதும் உறிஞ்சிவிடும் சோதுமை, பருத்தி, மணிலா முதலிய கனப்பயிர்கள் அறுவடையான பின் நிலத்திற்கேற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதில் அவர்கள் போதியவளவு கவனஞ் செலுத்துவதில்லை. அன்றியும், நிலத்தில் அடுத்தடுத்து ஒரேவிதப் பயிரைப் பயிரிடுகின்றனர். அங்ஙனம் செய்வதைவிடப் பல வகைப் பயிர்களை மாற்றிமாற்றிப் பயிரிடுவதே சாலவும் சிறந்ததென்னும் விதி பல விடங்களில் புறக்கணிக்கப்படுகின்றது. பலர் ஏதோ எருவிடுகின்றனர்; ஆனால் போதியவளவு எருவிடுவதில்லை. நிலத்தின் இயல்புக்கும் பயிரின் தன்மைக்கும் உரிய எரு இன்னதென்பதையும் அறிவதில்லை. பண்ணையில் எளிதில் கிடைக்கும் வீட்டுக்குப்பை, சாம்பல், தோட்டக் குப்பை, உலர்ந்த தழை, கால்நடைகளின் சாணம், மக்கள் கழிக்கும் மலஜலங்கள், மாண்டுபோன மிருகங்களின் எலும்புகள் ஆகிய மிகச்சிறந்த எருக்களைப் பாதுகாத்து வைத்துப் பயன்படுத்தத் தெரியாமல் வீணாக்குகின்றனர். நைட்ரோஜன் சத்து அதிகமுள்ள சாணத்தை முட்டையாகத் தட்டி எரிக்கின்றனர். எண்ணெய் விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்தபின் உள்ள பிண்ணாக்கில் நல்ல எருச்சத்து உள்ளது. ஆனால், அவ்விதைகளை அப்படியே ஏற்றுமதி செய்வதன் மூலம், அவ்வளவு பிண்ணாக்கையும் இழந்து விடுகின்றனர். போதிய எருவின்றி விவசாயம் சீரழிந்து வருகின்றதாயினும், குடியானவர் தம்மிடமுள்ள சிறந்த எருக்களைச் சேமித்துப் பதம் செய்யத் தெரியாமல் அவற்றை வீணாக்குகின்றனர்.

மக்களின் அசிரத்தையினால் இவ்வியற்கை எரு பலவிதமாக வீணாக்கப்படுவதால், விஞ்ஞானிகள் சிலசெயற்கை எருக்களைக் கண்டுபிடித்துள்ளனர். அமோனியம் ஸல்பேட், பாஸ்பேட், பொட்டாஸியம் முதலியனவே இவை. இவ்வுப்புக்கள் சுரங்கங்களில் அகப்படுகின்றன. ஆனால், போதியளவு கிடைக்காததால், இயந்திர சாதனங்களைக் கொண்டு காற்றிலிருந்து செயற்கையாக இவை உற்பத்திசெய்யப் படுகின்றன. மேலைநாடுகளில் விவசாயிகள் இந்த ரசாயன எருக்களையே பெருவாரியாக உபயோகித்து வருகின்றனர். வியாபாரிகள் இவற்றைப் பெருவாரியாக விளம்பரம் செய்து விற்று வருகின்றனர். இயற்கை எருக்களைச் சேகரித்துக் குழியில் போட்டுப் பதம் செய்வது சிரமமான காரியமானதால், சுலபமாகவும் சிறு அளவிலும் கிடைக்கக்கூடிய இந்த ரசாயன எருவையே உபயோகிக்கலாம் என்ற எண்ணம் பரவி வருகின்றது.

---

### மின்சார விந்தை

மின்சார முறைகளை அனுசரித்து நெல் சாகுபடி செய்யும் பரிசோதனை ஒன்று கொழும்பில் நடத்தப்படுகிறது. இது வெற்றி பெறுமாயின் கொழும்பில் நெல் சாகுபடி புரட்சிகரமாக மாறுதல் அடையக்கூடும். உலகத்திலேயே முதன் முதலாக நடத்தப்படும் இந்தப் பரிசோதனையை கொழும்பு முனிஸிபல் இயந்திர எஞ்ஜினியரான ஸ்ரீ விக்கிரமசிங்கர் செய்து வருகிறார். ஒரு ஏக்கர் நிலத்தில் இப்பொழுது இந்தப் பரிசோதனை

செய்யப்பட்டு வருகிறது. பயிர் நல்ல செழிப்பாக ஐந்து அடி உயரத்துக்கு வளர்ந்திருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் அறுவடை செய்யலாம். பயிரைப் போலவே நெற்கதிர்களும் செழிப்பாக வளருமானால், பரிசோதனை வெற்றி பெற்றுவிடும். இரண்டு லட்சம் ஏக்கர்கள் சதுரங்களாக்கப்பட்டு மின்சார முறைகளை அனுசரித்து சாகுபடி செய்யப்பட்டால், சிலோன் முழுவதுக்கும் தேவையான அரிசி கிடைத்துவிடுமென்று மதிப்பிடப்படுகிறது. மின்சார முறையில் நிலத்துக்கு உரமேற்ற ஸ்ரீவிக்கிரமசிங்கர் சிருஷ்டித்திருக்கும் இயந்திரமானது பயிர் உற்பத்தியைப் பன்மடங்காக்குவதுடன் அதைச் செழிப்பாக்கவும் செய்கிறது. ஒரு விதைக்கு குறைந்தது 5000 விதை கொடுக்கிறதென்று கூறப்படுகிறது.

—"நல்வழி"யிலிருந்து

## சாகுபடி நிலவிவரம்

இம்மாகாணத்தில் சாகுபடிக்கு லாயக்காக 408 லட்சம் ஏக்கர்கள் இருக்கின்றன. அதாவது மாகாண விஸ்தீரணத்தில் 54 சத விகிதமாகும். சாகுபடியாகும் நிலத்தில் 87 சத விகிதம்வரை உணவுப் பொருள் வேளாண்மை செய்யப்படுகிறது. கால்வாய் நீர்ப்பாசனம் மூலமாக மாத்திரம் முதல் போகம் 60 லட்சம் ஏக்கர்கள் பயிராகின்றன. இரண்டாம் போகம் 13 லட்சம் ஏக்கரில்தான் செய்யப்படுகிறது. பாக்கி கிணறு, குளப்பாசனம் மூலமாகவே செய்யப்படுகிறது.

—"சென்னைச் செய்தி"

## உங்களுக்குத் தெரியுமா?

சென்னை மாகாணத்தின் விஸ்தீரணம் (சுதேச சமஸ்தானங்கள் நீங்கலாக) சதுர மைல்கள் 4,26,166

ஜனத்தொகை (1941 வருஷ கணக்குப்படி) 4,93,41,810

ஜில்லா போர்டுகள் 24.

நகர சபைகள் 82.

ரூ. 5000க்கு மேற்பட்ட வருமானமுள்ள கிராமப் பஞ்சாயத்துகள் 238

மொத்தஜனத்தொகையில் நகர சபைப் பிரதேசங்களில் உள்ளவர்கள் 36,51,137

| | |
|---|---|
| தண்ணீர் வசதி பெற்ற நகரங்கள் | 53 |
| ,, நகர ஜனங்கள் | 27,82,097 |
| ,, கிராமங்கள் (பஞ்சாயத்துகள்) | 7 |
| ,, கிராம ஜனங்கள் | 1,13,209 |
| தண்ணீர் வசதி பெறாத நகரங்கள் | 29 |
| ,, நகர ஜனங்கள் | 7,48,610 |
| ,, கிராமங்கள் | 35,737 |
| ,, கிராம ஜனங்கள் | 4,58,11,103 |

நகரவாசிகளில் 100க்கு 78 பேருக்கு 414 லட்ச ரூபாய் செலவில் பாதுகாக்கப்பட்ட குழாய்த் தண்ணீர் வசதி கிடைக்கிறது.

கிராம வாசிகளில் 100க்கு 0?...

(கிராமங்களிடமிருந்து வருஷந்தோறும் கோடிக்கணக்காக வரி வசூல் செய்யும் சர்க்கார் தாம் கணக்குப் பார்த்துச் சொல்லவேண்டும்)

★ ★ ★

# ஊர்த் திருப்பணி

சித்தோடு ஸ்ரீ கன்னியப்பா அவர்கள் எழுதுவதாவது:—

பேரூர் சேவாஸதனம் கிராம ஊழியர்களால் நடத்தப்பட்டு வரும் ஒரு ஊர்ப்பணி நிலையம். இதை ஆரம்பித்தவர் ஸ்ரீ கெ. குமார் என்பவர். இவர், 1942 இயக்கத்தின்போது அலிபுரம் சிறையிலிருந்து தப்பிச் சென்று பல அரிய வேலைகளைச் செய்தவர்; சுவாமி ஸேவானந்தர் அவர்களுடன் சேர்ந்து, இந்த ஸ்தாபனத்தை 1945 நவம்பரில் ஸ்தாபித்தார்.

பேரூர், தென் மலையாளத்தைச் சேர்ந்த 5000 ஜனங்கள் கொண்ட ஒரு கிராமம். இந்த ஊர்ப்பணி நிலையத்தில் கீழ்க்குறித்துள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நிர்மாணத் திட்டத்தின் அடிப்படை வேலையான நூல் நூற்றல் இங்கு பிரதான இடம் பெற்றுள்ளது. பருத்தி அரைத்தல், பஞ்சடித்தல் முதலிய நூற்பு சம்பந்தமான தொழில்களனைத்தும் கற்றுத்தரப்படுகின்றன. பயிற்சி பெற விரும்புவோருக்கு ராட்டையும், பஞ்சடிக்கும் கருவிகளும் கொடுக்கப்படுகின்றன. பயிற்சி பெற்றவர்கள், தாங்கள் நூற்கும் நூலை வாரந்தோறும் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். நூலில் ஒரு பாகம் கருவிகளின் கிரயத்திற்கு வரவு வைத்துக்கொள்ளப்படுகிறது; ஒரு பகுதி சுய தேவைக்காக சேவாஸதனத் தறிகளிலேயே துணியாக நெய்து தரப்படுகிறது. நெசவு வேலையிலும் பயிற்சி பெற இங்கு வசதியுண்டு. ஒரு கதர் வஸ்திராலயமும் உண்டு. சர்க்கா சங்க நிர்ணயப்படி துணியும் வினியோகிக்கப்படுகிறது.

தேனீ வளர்த்தலோடு, இங்கு ஒரு இலவச வைத்தியசாலையும் நடத்தப்படுகிறது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான பேர், ஜாதி மத வித்தியாசமின்றி, வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

ஹிந்தி கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு, பிரத்தியேகமான ஹிந்தி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

கிராமவாசிகளுக்கு ஏற்ற புத்தகங்களைக் கொண்ட ஒரு வாசகசாலையும் இங்கு இருக்கிறது. 'கிராம சேவகன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடைபெற்று வருகிறது.

பகலில் படிக்க நேரமில்லாத தொழிலாளர்களுக்காக ஒரு இராப் பாடசாலையும் நடைபெறுகிறது; வயது வந்தவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தனியான ஏற்பாடும் செய்யப் பெற்றிருக்கிறது. இந்த நிலையத்தில், இது சமயம், 13 அனாதைப் பிள்ளைகள் எதிர் காலத்தில் நல்ல கிராம ஊழியர்களாகும் முறையில் வளர்க்கப்படுகிறார்கள்.

சுருங்கக் கூறின், ஒவ்வொரு கிராமமும், தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொண்டு சந்தோஷமாக வாழ வழி செய்வதற்குரிய வேலைகள், ஆரம்பமாகி, நடைபெற்று வருகின்றன என்னலாம்.

இதைப்போல ஊருக்கொரு சேவாஸதனம் ஏற்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

**திருக்குறள் கற்றுத் திருந்துக வாழ்க்கை!**

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றும், “தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்” என்றும்

பாடினுர் பாரதியார். அவர் தம் வாழ்க்கையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பமாகியிருக்கும், மதுரை ஜில்லா, தேனி, 'திருக்குறள் கழகம்' செய்துவரும் பணியைப்பற்றி கழகத்தார் அறிவிப்பதாவது:

1. திருக்குறளைப் பொது மக்கள் அனைவரும் கற்று, பொருள் தெரிந்து, வாழ்க்கைப் பயனை அடையவேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு கழக ஆதரவில் பிரதி புதன் கிழமை தோறும், வித்துவான், திரு. தி. கி. சுந்தரமூர்த்தி அவர்களால் இலவசமாக எல்லோருக்கும் இவ்வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

2. வகுப்பில் கலந்துகொள்பவர்கள் வாரம் ஒன்றுக்கு நான்கு குறள்களாவது மனப்பாடம் செய்யவேண்டும். இதுவே வகுப்பிற்குச் செலுத்தவேண்டிய சந்தாவாகும்.

3. எவ்வித வேறுபாடும் இல்லாமல் அனைவரும் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகிருர்கள்.

4. மாதம் ஒரு முறை, கழகத்தார் தெரிவிக்கும் குறள்களைத் திருத்தமாக எழுதவும், ஒப்புவிக்கவும் முன் வருகின்றவர்களுக்கு, தேர்ச்சி நடத்திப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

5. திருக்குறள் பரிசுகள் பெறுவோர், வழங்குவோர் பெயர் விவரம் அவ்வப்போது துண்டுப் பிரசுரத்தின் மூலம் வெளியிடப்பெறுகின்றது.

அறிவைப் பெருக்க, தாய்மொழிப் பற்றை உண்டாக்க, நன்னெறியை வளர்க்க, நாட்டுத் தொண்டு சிறக்க, இதனைப் போன்ற கழகங்கள் எங்கணும் தோன்றி யாவர்க்கும் உதவுமாக!

### சர்க்கார் கிராம அபிவிருத்தித் திட்டம்

தென்னுற்காடு ஜில்லா கிராம அபிவிருத்தி பிர்க்கா தலைமை ஊழியரான ஸ்ரீ. டி. எஸ். கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தின் சுருக்கம்:—

தென்னுற்காடு ஜில்லா, காடாம் புலியூர் பிர்க்கா பல துறைகளிலும் பிற்போக்கான நிலையிலுள்ள ஒரு பிர்க்கா வாகும். இங்கு 35 கிராமங்கள் இருக்கின்றன. விஸ்தீரணம் 105 சதுர மைல்களாகும். ஜனத்தொகை 40,000. பெரும்பாலோர் படையாச்சி வகுப்பைச் சேர்ந்தவர்கள். நூற்றுக்கு 87 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஒரு கிராமத்தில்கூட குடிதண்ணீர் வசதி இல்லை. சிறு குட்டைகளிலுள்ள நீரைத்தான் இவர்கள் குடிக்கிருர்கள். வானம் பார்த்த பூமி. முந்திரிப் பயிர்தான் அதிகம். பலாமரங்களும் உண்டு. எங்கு பார்த்தாலும் காட்டு ஓடைகள். கிராமப் பாதைகளில் நடக்க பலநாள் பயிற்சி வேண்டும்.

இந்த பிர்க்காவில் 24 உணவுக் கமிட்டிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டு வேலைசெய்து வருகின்றன. ஊரிலுள்ள குப்பைகளைச் சேமித்து அதற்கென ஏற்பட்டுள்ள குழிகளில் போட்டு உரமாக்குகிருர்கள். அதிகச் செலவின்றி சேவா கிராம முறையில் கக்கூஸ்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. தெருக்களுக்கு தேசியத் தலைவர்களின் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. ஹரிஜனச் சேரிகள் 'காந்திக் குப்பம்' என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றன. இங்குள்ளோர் தக்ளியில் நூல் நூற்பதற்குரிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. கிராம வாசிகளிடை கூட்டுறவு இயக்கத்தைக் குறித்து பிரசாரம் நடைபெற்று வருகிறது. இதுவரை ஆறு கூட்டுறவுப் பண்டகசாலைகள் (ஒவ்வொன்றும் ரூ. 5000 மூலதனத்துடன்) ஆரம்பமாகி, நல்ல முறையில் வேலைசெய்து வருகின்றன.

தமிழ் நாட்டில் மற்ற ஜில்லாக்களில் நடக்கும் அபிவிருத்தி வேலைகளைப்பற்றி அவ்வப்போது வெளிவந்தால் மிக்க நலமாயிருக்கும்.

# குறிப்புகள்

## ஏன் இந்த எதிர்ப்பு?

சென்ற மகா யுத்தத்தின் காரணமாக உணவுப் பஞ்சமும், துணிப்பஞ்சமும் ஏற்பட்டு மக்கள் படும் அவதி அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்த யுத்தமும் பஞ்சமும் வந்தது பெரிய பாக்கியம் என்றெண்ணி மகிழ்ச்சியடையும் ஒரு கூட்டத்தார் இந்த நாட்டில் இருந்து வருகிறார்கள் என்பதுதான் ஆச்சரியமான விஷயம். இவர்கள் யார்?

வியாபாரம், லைசென்ஸ், பெர்மிட் என்ற பெயரால் கள்ள மார்க்கட் என்ற ஒரு கொள்ளை மார்க்கத்தை சிருஷ்டித்து அதன் மூலம் லட்ச லட்சமாகப் பணம் திரட்டியவர்கள்; அப்பணத்தைத் தங்க நகைகளாகவும் வெள்ளிப் பாத்திரங்களாகவும், காரை வீடுகளாகவும், நன்செய் புன்செயாகவும் மாற்றி வருபவர்கள்; தங்களிடமுள்ள மூலதனத்தைக் கொண்டு பெரிய பெரிய மில்களையும், புதிய புதிய வியாபாரக் கம்பெனிகளையும் ஆரம்பித்து, விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பரம்பரையாகத் தங்களுடைய சுக போகங்களுக்கு உழைத்துக் கொடுக்கும் அடிமைகளாக்க விரும்பும் பெரிய மனிதர்கள்! இவர்கள் இத்துடன் மட்டும் திருப்தி கொள்வதாகத் தெரியவில்லை. தங்களுடைய சுயநல நோக்கத்திற்கு மாறாக நடக்கும் சர்க்கார்மீது பொது ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்படும் வண்ணம் மறைமுகமாகப் பலத்த பிரசாரம் செய்யவும், அவசியமானால் சர்க்காரை மாற்றியமைக்கவும் இவர்கள் முழு முயற்சியும் செய்து வருகிறார்களென்று தெரிகிறது.

வெள்ளைக்காரனுடைய வியாபாரமும் ஆட்சியும், ஒன்றுக்கொன்று உதவியாயிருந்து, இந்த நாட்டு மக்களின் உழைப்பை இதுவரை உறிஞ்சி வந்தது. வெள்ளையர்கள் வெளியேற விரும்பும் இந்த சமயத்தில், அவர்கள் இருந்த ஸ்தானங்களை இந்த நாட்டுப் "பெரிய வியாபாரிகள்" சுயாதீனப் படுத்திக்கொள்ள விரும்புவதாகவும் தெரிகிறது.

வியாபாரம் என்ற பெயரால் நாட்டில் நடக்கும் பகல் கொள்ளையை ஒழிப்பதற்காகவும், உணவுப் பொருள் முதலியவற்றின் பஞ்சத்தைத் தடுப்பதற்காகவும் சென்னை சர்க்கார் மாகாண முழுவதும் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஆரம்பிக்க ஏற்பாடு செய்துவருகிறார்கள். கூட்டுறவுப் பண்டக சாலைகள் வளர்ந்தோங்க ஆரம்பித்திருப்பதைக் கண்டு வியாபாரிகள் திகிலடைகிறார்கள். தங்களுக்குப் பெரும் ஆபத்து வந்ததாக எண்ணி அலறுகிறார்கள். கூட்டுறவு இயக்கம் வளர சர்க்கார் காட்டி வரும் ஆதரவைக் கண்டிப்பதற்காக நகரங்களில் பெரிய மகாநாடுகளைக் கூட்டுகிறார்கள்; நீண்ட தீர்மானங்கள் செய்கிறார்கள். தங்களுடைய சுயநலக்கிளர்ச்சியை பொது ஜனங்களின் எதிர்ப்புப் போல பத்திரிகைகள் மூலம் வெளியே காட்ட தக்க ஏற்பாடும் செய்துவிடுகின்றார்கள். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற கூட்டுறவு எதிர்ப்பாளர் மகாநாட்டில் பேசிய பெரிய வியாபாரிகள் எல்லோரும்; "ஐயோ! கிராமத்தானுக்கு வியாபாரத்தைப் பற்றி என்ன தெரியும்? வியாபாரம் செய்வதில் திறமை படைத்தவர்கள் கிராமத்தில் கிடையாதே. அங்கு நாணயஸ்தர்கள் இல்லையே. மேலும், கூட்டுறவு இயக்கத்தின் உயர்ந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ள அவர்களால் இயலாதே" என்று அங்கலாய்த்திருக்கிறார்கள்.

ஆம். வாஸ்தவம்தான் வியாபாரம் என்ற பெயரால் பகற் கொள்ளையடிக்கும் பழக்கமும் திறமையும் கிராமவாசிக்கு இல்லைதான். ஆனால், நாணயத்தைப்பற்றி போதிக்கத் தகுந்த யோக்கியதையுள்ளவர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு' என்பதன் உண்மையை உணர்ந்து கொள்ளவும் அவர்களால் முடியும்.

கூட்டுறவு இயக்கத்தை வியாபாரிகள் பாழ்படுத்த ஏன் நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி கிராமங்களிலுள்ள வாலிபர்கள், ஊழியர்கள், பெரியோர்கள் அனைவரும் நன்கு சிந்திக்க வேண்டும். கிராமங்கள்தோறும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஏற்படவும், அவை ஒழுங்காகவும் திறமையாகவும் நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளவும் வேண்டும். ஊரிலுள்ளவர்களின் உழைப்பை இடையே இருந்து சிலர் சுரண்டாமல் தடுக்கவேண்டுமானால், உழைப்பின் முழுப் பயனையும் உழைப்பவர்களே அனுபவிக்க வேண்டுமானால், ஊரார் எல்லோருக்கும் சொந்தமான கூட்டுறவு பாங்கிகளும் பண்டகசாலைகளும் ஏற்படவேண்டும்.

200 வீடுகளுள்ள ஒரு கிராமத்திலே, பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 200 பங்குகள் (ஆயிரம் ரூபாய், மூலதனமாகச் சேர்த்தால் சர்க்காரில் அதைப்போல 20 மடங்கு (20,000 ரூபாய்) வரையில் கடனுகக் குறைந்த வட்டிக்குக் கொடுத்து உதவுகிருர்கள். ஊர்ப் பொது வியாபாரத்திற்கு இந்த இருபதிஞயிரம் ரூபாய் மூலதனம் போதாதா? இன்னும் வேண்டுமானுல் பங்குத் தொகையை அதிகமாக்கிக் கொள்ளலாம்.

நாணயமான வியாபாரிகள் கூட்டுறவு இயக்கத்தைக் கண்டு அஞ்சவேண்டியதில்லே. இவர்களது அறிவும் உழைப்பும் பண்டகசாலேகளுக்கு அவசியம் வேண்டியதிருக்கும். உழைப்புக்குத் தகுந்த நல்ல ஊதியமும் பெறமுடியும்.

பத்திரிகைகளில் வியாபாரிகளின் கிளர்ச்சியைக் கண்டு சென்னை சர்க்கார் அஞ்சவேண்டியதில்லே. கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைக் கிராமவாசிகள் அறிந்துவருகிருர்கள். கிராமங்களுடைய ஆதரவு கிடைக்கும்.

மேலும், ஒரு முக்கிய விஷயம், தங்களுடைய கொள்ளே லாபத்தில் ஒரு பாகமாகக் கணக்கிட்டு, சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் நல்லவர்களைக்கூட பணங்கொடுத்து மயக்கும் கூட்டம் இந்த நாட்டில் இல்லாமல் செய்தாலன்றி, சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடை லஞ்சப் பேய் தலேவிரித்து ஆடுவதைத் தடைசெய்ய வேறு எந்த வழிகளாலும் முடியவே முடியாது.

எனவே, கூட்டுறவு இலாகாவை சர்க்கார் விரிவு படுத்த வேண்டும். நல்ல ஆதரவு காட்ட வேண்டும். இந்த இலாகா ஊழியர்களுக்கு நல்ல பயிற்சியும், வசதியும் சர்க்கார் கொடுத்துதவ வேண்டும். வாழ்க கூட்டுறவு !

## நிலச்சுவான்தார்களுக்கு

அதிக நிலமுள்ள பெரிய விவசாயிகளுக்கும், சொந்தமாய் நிலமே இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமீப காலந் தொட்டு தேசத்தில் பல பாகங்களிலும் சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. விவசாயத் தொழிலாளர்கள் பலாத்காரத்தில் இறங்கிய இடங்களில் சர்க்கார் தலேயிட்டு அவர்களை பலாத்காரமாக அடக்கி வருகின்றனர். சர்க்காருடைய அடக்குமுறை சில இடங்களில் அமைதியை உண்டுபண்ணியிருக்கிறது. ஆனுல், இது தற்கால சாந்தியாகத்தான் இருக்கமுடியும். சாஸ்வதமான அமைதி நிலவ வேண்டுமானுல், அதிருப்திக்குரிய மூல காரணங்களைப்பற்றி சிந்தித்து, தக்கது செய்யவேண்டும்.

எனவே நிலச்சுவான்தார்கள், நிலத்தில் பாடுபடும் தொழிலாளர்களைத் தங்களுடைய கூட்டுப் பங்காளிகளாக எண்ணி, நிலத்தில் உற்பத்தியாவதில் உழைத்தவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க மனப்பூர்வமாகச் சம்மதிக்க வேண்டும். இதுதான் நியாயமும் தர்மமும் ஆகும். காலத்திற்கேற்ற கடமையுமாகும்.

வங்காளத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் இதுவரை நிலச்சுவான்தார்களிடமிருந்து மகசூலில் சரிபாதி பெற்றுவந்தார்கள் இப்பொழுது மூன்றில் இரண்டு பாகம் வேண்டுமென்று கேட்டு ஒரு இயக்கம் ஆரம்பித்திருக்கிருர்கள். இதுவிஷயமாக காந்தியடிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டபோது அவர் கூறியதாவது:

"இந்த இயக்கத்தை நான் வரவேற்கிறேன். நிலமானது நிலச்சுவான்தாருக்குச் சொந்தமானது அன்று. கடவுளுக்குத்தான் சொந்தம்; அதனுல் உழுது பயிரிடும் விவசாயிகளுக்கே சொந்தம். ஆகலால், உழுது பயிரிடுபவர்களே மகசூலே அனுபவிக்க உரிமையுடையவர்கள். ஆனுல், இந்த விஷயத்தில் எவ்வித பலாத்காரமும் உபயோகிக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். லட்சியத்தைப் போலவே அதை அடையும் சாதனமும் இருக்கவேண்டும் என்னும் கொள்கையை நான் பரிபூரணமாக நம்புகிறேன். லட்சியம் நல்லதாக இருந்தால் போதும், அதையடையும் சாதனம் எதுவாயிருந்தாலும் பரவாயில்லே என்று கூறுவது மிகவும் கேடான கொள்கையாகும்".

காந்தியடிகள் கூறியுள்ள இந்தப் பொன் மொழிகளை நிலச்சுவான்தார்களும், விவசாயத் தொழிலாளர்களும் ஏற்று நடந்தால் இரு திறத்தாருக்கும் நன்மையுண்டு. தேசத்திற்கும் க்ஷேமமுண்டு.

Edited and Published by Sri G. Venkatachalapathy, Gandhi Niketan, Kallupatti. P. O., Madura Dt.
Printed by Sri V. S. Swaminathan at his Barathi Press. Madura.

# கிராம ராஜ்யம்

'கிராம ராஜ்யம்' கிராம ஊழியர்களால் கிராமங்களின் நிர்மாண வேலைகளுக்காக நடைபெறும் மாதப் பத்திரிகை.

**நோக்கம்** "ஒவ்வொரு கிராமமும் பூரண அதிகாரத்துடன் கூடிய ஒவ்வொரு குடியரசு ஆகவேண்டும். ஒவ்வொரு கிராமமும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது உள்பட சகல விஷயங்களையும் தானே நிர்வகித்துக் கொள்வதாகவும், தனக்கு வேண்டிய அன்னத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்வதாகவும் இருக்கவேண்டும்.

இத்தகைய குடியரசின் கீழ், பணக்காரன் ஏழை என்ற பாரபட்சமின்றி, எல்லா சுகசௌகரியங்களும் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். ஜாதிமத வேற்றுமைகள் அடியோடு ஒழியவேண்டும். விளை நிலங்களும் அரசாட்சியும் குடியானவர்களின் பொதுவுடைமை ஆகவேண்டும். நீதி, உடனுக்குடன் வழங்கப்படுவதாகவும், குற்றமற்றதாகவும் செலவில்லாததாகவும் இருக்கவேண்டும். எழுத்திலும், பேச்சிலும், இறை வழிபாட்டிலும், எல்லாவற்றிலும் சுதந்திரம் இருக்கவேண்டும். இத்தகைய சமூகத்திற்குச் சத்தியமும் அஹிம்சையுமே அஸ்திவாரமாகும்" இதுதான் காந்தியடிகள் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவின் சித்திரம். இந்த லட்சியம் நிறைவேற உழைப்பதே இப் பத்திரிகையின் நோக்கமாகும்.

ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் வெளிவரும்.

**பத்திரிகையின் ஆலோசனையாளர்கள்:—**

| | |
|---|---|
| ரா. விநாயகம் | நா. ராமகிருஷ்ணன் |
| ஜி. ராமச்சந்திரன் | சா. கணேசன் |
| மு. அருணசலம் | டாக்டர். சௌந்தரம் |
| ரா. வெ. ருத்திரப்பாசாமி | க. அருணசலம் |

ரா. குருசாமி

---

| சந்தா | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஒரு வருடம் | 6—0—0 | 7—8—0 |

சந்தா அனுப்பவேண்டிய விலாசம்:

மானேஜர் "கிராம ராஜ்யம்" காந்தி நிகேதனம்;

கல்லுப்பட்டி போஸ்ட்; (மதுரை ஜில்லா).

# ராம ராஜ்யம்

காந்தி யடிகள் காண விரும்பும்
ராம ராஜ்யம் எதுவெனக் கேளீர்!
பக்தர்தம் பாஷையில் பகருவ தாயின்,
இறைவ னுடைய ஏகாதி பத்தியம்
இப்புவி மீது ஏற்படு வதுவே.
அரசியல் மொழியில் அதன் பொருள் யாதெனில்,
சர்வ ஜனங்களின் சம்மதம் பெற்ற
ஆட்சி முறையே அங்கு நடைபெறும்.
சுகவாழ்க் கையிலோ, சொத் துரிமையிலோ
ஏற்றத் தாழ்வு ஏதுமங் கில்லை.
ஜாதிக் கொடுமையும், சமயப் பூசலும்,
பால்வேற் றுமையும், இனவேற் றுமையும்,
பண்டைக் காலப் பழங்கதை யாகி,
'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'
என்றே அங்குளோர் எண்ணி யிருப்பர்.
மாநில முழுவதும் மக்களின் உடைமையாம்;
மக்களெல் லோரும் மன்னர்க ளாவர்.
எளிதாய் விரைவாய் எவர்க்கும் ஆங்கே
நிலை தவறாத நீதி கிடைக்கும்.
எழுத்தில், பேச்சில், இறைவனைத் தொழுவதில்
சுதந்திரச் சோதி சுடர்விட் டொளிரும்.

'இத்தகை ராஜ்யம் ஏற்படு தற்கு
தத்தம் பணியைத் தாமே செய்திடும்
கடனறி மக்களே காரண' மென்ற
காந்திஜி வாசகம் கருத்திடைக் கொண்டு,
இன்ப உலகாம் இராம ராஜ்யம்
நிலைபெற அனைவரும் நித்தமும் உழைப்போம்.

—கோ. வே.

T2
R0